

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ அன்றொரு நாள் இதே மழையில்... ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ அன்றொரு நாள் இதே மழையில்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
அன்றொரு நாள்
இதே மழையில்...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# அன்றொரு நாள்... இதே மழையில்

## 1

ஆகாயம் மழை மேங்களால் சூழப்பட்டி ருந்தது... மொட்டை மாடியில் இருந்த துணிகள் நனைந்து விடுமோ... என்ற கவலையுடன் அவசரமாக மாடிப் படிகளில் ஏறிச் சென்றாள் ரேவதி... சில்லென்ற மழைக் காற்று அவளது உடலைத் துளைத்தது. எங்கோ... வேறு இடத்தில் மழை பொழிவதை உணர்த்தும் மண் வாசனை அவளது நாசியில் நுழைந்தது.

ரேவதி துணிகளை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டிருந்தாள். மழை நாள் வரும்போதெல்லாம். மனதில் வரும்... அந்த நாளின் நினைவு இன்றும் வர... அவற்றைத் துரத்துவது போல் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

துரத்தும் நினைவுகள்... அவள் துரத்தினால் ஓடிவிடுமா என்ன...? அவை அவளின் மனதை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. சடசடவென்று மழைத் துளிகள் கூரிய அம்புகளாய்த் தோளில் இறங்க... அந்த இடத்தை விட்டு அகன்று... படிகளில் இறங்கினாள்.

மாடி ஹாலில் போடப்பட்ருந்த விÞதீரணமான சோபாவில் துணிகளைப் போட்டுவிட்டு.. அருகே அமர்ந்து துணிகளை மடிக்கத் துவங்கினாள். இலக்கில்லா மல் வெறித்த பார்வையில் ஜன்னல் வழி கொட்டும் மழைத் திரை கண்ணில் பட்டது.

மடித்துக் கொண்டிருந்த துணியை மறந்து... மழைத் திரையையே வெறித்தாள்... வானம் கிழிந்தது போன்று மழை பொழிந்து கொண்டிருக்க... கையில் இருந்த

துணியை மடிக்கும் நினைவின்றி, சோபாவிலேயே போட்டு விட்டு... எழுந்து ஜன்னலருகே சென்று வெளியே பார்த்தாள்.

நீர்த் திவலைகள் ஒன்று சேர்ந்து கொட்டிக் கொண்டிருப்பதை... ஜன்னல் கம்பியில் முகம் புதைத்துக் கூர்ந்து பார்த்தாள்.

இதே மழைதான்... அன்றும் கொட்டியது... அவளுடைய வாழ்வை ஒரே நாளில் புரட்டிப் போட்டது. இன்று போல் தான் அன்றும் மழையின் ஈரத்தால் குளிர்ந்து போயிருந்த ஜன்னல் கம்பியில் முகம் புதைத்துக் கொண்டிருந்தாள். என்ன ஒரு வித்தியாசமென்றால் அன்று அவள் முகம் புதைத்திருந்தது, பேருந்தின் ஜன்னல் கம்பி... அன்றும் தப்பிக்க வழியில்லை... இன்றும் அதே போல்தான்... தப்பிக்க வழியில்லை....

இது ஒரு வழிப்பாதை... இதில் நுழைந்தால் திரும்ப முடியாது... ஆனால்... அதில் அவள் நுழைவாளென்று கனவா கண்டாள்...? அவளின் கனவே வேறாயிற்றே...

"ப்ளீÞ சுதாகர்... நான் தனியாக வெளியே வந்ததேயில்லை... நீங்கள் சொன்னதற்காக... உங்களின் பிறந்த நாள் என்பதற்காக... ஹாÞடலில்... கடைத் தெருவிற்குப் போவதாகப் பொய் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். நேரமாகி விட்டது... நான் ஹாÞடலுக்குப் போக வேண்டும்."

"என்ன அவசரம்...? இப்போதுதானே வந்தோம். அதற்குள் அவசரப்பட்டால் எப்படி...?"

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"என்ன சொன்னேன்?"

"காரில் சும்மா... ஐந்து நிமிஷம் வரை டிரைவ் போகலாம்ன்னு தானே சொன்னீங்க? இப்போது என்னவென்றால்... கார் வைகை டேமில் வந்து நிற்குது... ஆமாம். இது யாருடைய கார்...?"

"இப்போ... அதுதான் ரொம்ப முக்கியம் பாரு... எனக்கு உன்னைக் கொடைக்கானலுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகத்தான் ஆசை. நீ வருவாயா?"

"ஐயோ..."

"இப்படி அலறுவாய் என்பதால்தான் வைகை டேமோடு நிறுத்திக் கொண்டேன். இதற்கும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால்... நான் என்னதான் செய்ய...? என்னை பார்த்தால் உனக்கு பாவமாக இல்லையா, ரேவதி."

அன்று அவன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்ட போது... அவனின் முகம் பார்த்துக் 'களுக்'கென்று வாய் பொத்திச் சிரித்தாள் ரேவதி.

அன்று அவள் முகத்திலிருந்து சிரிப்பு... இன்று தொலைந்து போய் விட்டது. சிரிப்பைத் தொலைத்து விட்டு... அதை எப்படி மீட்பது என்று தெரியாமல் பேதலித்து நிற்கிறாள்.

வைகை டேமைச் சுற்றி வந்தபோது... சுதாகரன் ஏக்கம் தொனிக்கும் குரலுடன் வினவினான்.

"அடுத்த வாரம் உனக்கு எக்ஸாம் Þடார்ட் ஆகிவிடும் இல்லையா?"

"ம்ம்..."

"எக்ஸாம் முடித்தவுடன் ஊருக்குப் போய் விடுவாய் தானே..."

"ஆமாம்."

"அதற்குப் பின்னால் உன்னை நான் இப்படிப் பார்க்க முடியாதா, ரேவதி... இன்றே - என் நண்பனிடம் கார் இரவல் வாங்கி வந்ததால் உன்னோடு இன்று ஒரு நாள் முழுவதும் சந்தோசமாய் சுற்ற முடிந்தது..."

"இனி இப்படிப் பார்க்க முடியாது..."

"வேறு எப்படிப் பார்ப்பது...?"

"ம்ம்... முறைப்படி நீங்கள் பெண் கேட்டு வந்தால்... முறைப்படி என்னைப் பெண் பார்க்கலாம்."

"வருவேன் ரேவதி... கட்டாயம் நான் வருவேன். ஆனால் உன் அப்பாதான். பரம்பரைப் பகையை விடாமல் பிடித்துக் கொண்டு தொங்குகிறாரே..."

"அவர் பரம்பரைப் பகையை மட்டும் விடாமல் பிடித்துக் கொண்டு தொங்கவில்லை சுதாகர்... என் மேலிருக்கும் பாசத்தையும் விடாமல் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிறார்."

"அதனால்..."

"நான் அப்பாவிடம் பேசுகிறேன்."

"உன்னால் முடியுமா...?"

"நிச்சயம் முடியும்..."

அன்று நம்பிக்கையுடன்தான் சொன்னாள். ஆனால்... அது முடியாமலேயே போய்விட்டது...

தேர்வுகளை எழுதி முடித்து விட்டு... கெங்குவார் பட்டி செல்வதற்காக பஃஸில் ஏறியவள்... நேராகச் சொந்த ஊருக்குப் போகவே முடியவில்லை.

அன்று கொட்டும் மழையில் செய்த பேருந்துப் பயணம் அவளது வாழ்க்கையின் பயணத்தையே மாற்றி விட்டது...

"நல்லாயிருக்கும்மா... உன் வேலை... துணிகளை அள்ளிக் கொண்டு வந்து போட்டு விட்டால் சரியாப் போச்சா...? துணிகளை யார் மடிப்பது? கிடக்கிற தெல்லாம் கிடக்கட்டும்... கிழவியைத் தூக்கி மணையில வையிங்கிற கதையாய்... செய்கிற வேலையை விட்டு மழையை வேடிக்கை பார்க்கக் கிளம்பிட்ட... இப்படி இருந்தா வீட்டு வேலை விளங்கிடும்."

"மீனாட்சி பொரிந்தது காதில் விழவும்... அவசரமாய் ஜன்னலை விட்டு விலகி... துணிகளை மடிக்க

ஆரம்பித்தாள் ரேவதி குரோதமாய் மருமகளை உற்றுப் பார்த்த மீனாட்சியின் முகத்தில் வெறுப்பு மண்டியிருந்தது.

"ம்ஹூம்... இது யார் ஆள வேண்டிய வீடு...? தங்கம்... தங்கமாய்க் கொட்டிக் குடுக்கிற குபேரன் மகள் ஆள வேண்டிய வீடு... நான் வாங்கிட்டு வந்த வரம் இப்படியாகி விட்டது."

மீனாட்சி விட்ட பெருமூச்சில்... ரேவதியின் கையில் இருந்த துணி பற்றிக் கொள்ளும் போல இருக்க... அவள் அவசரமாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

"கால் ஒரு இடத்தில் நிலை கொள்ளாது போல... சும்மா அங்கிட்டும்... இங்கிட்டும் நடை பழகி என்ன பிரயோசனம்... ஒரு வேலையும் ஆகக் காணோம்... உனக்கு என்னம்மா மகராசி... ஆக்கி வைக்க சமையல்காரி இருக்கா... துவைச்சுப் பெருக்க வேலைக்காரி இருக்கா... நீ ராணியாட்டம் ஊஞ்சலாடிக்கிட்டு இருக்க... உன் பொழப்பு நல்லாத்தான் இருக்கு. எங்க பொழப்புத்தான் இப்படி ஆகிவிட்டது."

'எப்படியாகி விட்டது...? என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு அசையாமல் நின்றாள் ரேவதி.

இந்த 'இப்படியாகி விட்டது...' என்ற குற்றச்சாட்டை அவள் இந்த வீட்டில் அடியெடுத்து வைத்த நாள் முதலாய்... நொடிக்கொரு தரம் மாமியார் இடித்துச் சொல்லக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாள்.

சிதைந்து போனது மாமியாரின் கனவுக் கோட்டை மட்டும்தானா... என்று மனத் துடிப்புடன்... மாமியாரின் முகத்தை வெறுமையாக நோக்கினாள்.

'எப்படித்தான் பேசினாலும் இடித்த புளி போல நிற்கிறாளே...' எரிச்சலுடன் மீனாட்சி போய் விட்டாள்.

ஒரு பெருமூச்சுடன்... மடித்து வைத்திருந்த துணிகளை எடுத்துக் கொண்டு... படுக்கையறைக்குள் நுழைந்தாள் ரேவதி.

அலமாரியைத் திறந்து துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த போது... அறைக் கதவு திறந்தது. திரும்பிப் பார்த்தாள்... துளைக்கும் பார்வையுடன் செந்தில் உள்ளே வந்தான்... ரேவதி தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அவளைச் சொந்தமில்லாத ஓர் பார்வை பார்த்தபடி... அவன் உடை மாற்றும் அறைக்குள் போய் விட்டான். ரேவதி அறையை விட்டு வெளியேறி... மாடிப் படிகளில் இறங்கினாள்.

"ம்ஹூம்... புருசன்காரன் வந்தால்... முகத்தைத் தூக்கி வைச்சுக்கற பொண்டாட்டி... உலகத்திலேயே நீயாய்த்தான் இருப்ப... எல்லாம் என் மகனின் தலைவிதி... அவன் மேல் உயிரையே வைச்சிருந்தாள் ஒருத்தி. அவளை விட்டு விட்டு உன் கழுத்தில் தாலியைக் கட்டணும்னு அவனுக்கு விதிச்சிருக்கு. நீ என்ன பண்ணுவ... போ... போய் வராண்டாவில் நின்று மழையைப் பராக்குப் பாரு. உனக்கு அதுதானே தெரியும்... என்னவோ, சீமையிலேயே இல்லாத உலக அழகின்னுதான் மனசுக்குள்ள நினைப்பு... என் பெரியப்பன் பேத்தியோட கால் தூசுக்கு நீ இணையாவாயா...? எல்லாம் என்னைப் படைச்ச பகவானைச் சொல்லணும். உன்னைச் சொல்லிக் குத்தமில்லை..."

"யாரைச் சொல்லித்தான் என்ன ஆகப் போகிறது...? ரேவதி உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவளும் இந்த வீட்டில் செந்திலின் மனைவியாக வாழ வந்து வருடம் ஒன்றாகி விட்டது. இதுவரை மாமியாரின் குத்தலும் நிற்கவில்லை. அவளுக்கும் செந்திலின் பக்கம் மனம் திரும்பவில்லை.

'பெரியப்பன் பேத்தி...'

மீனாட்சி... மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்லும் அந்தப் பெரியப்பன் பேத்தியைப் பலமுறை ரேவதி பார்த்திருக்கிறாள்.

முதல் முறை அவள் பார்த்தபோது... அந்தப் பெரியப்பனின் பேத்தி... செந்திலின் கரம் பற்றி... கண்ணீர் சிந்திக்

கொண்டிருந்தாள்... கழுத்தில் அன்று காலையில் தான் செந்தில் கட்டியிருந்த புதுத் தாலியுடன் அந்தக் காட்சியைக் கண்ட ரேவதி திக்பிரமை பிடித்து நின்று விட்டாள்.

அதன் பின்... அந்த அவள்... கவிதா... வரும் போதெல்லாம்... செந்திலுடன் தனிமையில் பேசி விட்டுத்தான் போவாள். ரேவதி... அந்தத் தருணங்களில் மொட்டை மாடியையும்... தோட்டத்தையும் நாடிச் சென்று விடுவாள்.

மெல்ல... மெல்ல... அது வளர்ந்து... கவிதா வராத போதும்... செந்தில் வீட்டுக்குள் வந்து விட்டால்... மொட்டை மாடிக்கும்... தோட்டத்திற்கும் போய் நின்று விடுவதை வழக்கமாக்கிக் கொண்டாள் ரேவதி.

## 2

செந்தில் மழையில் நனைந்திருந்த உடைகளைக் கழற்றிப் போட்டு விட்டு... உலர்வான கைலிக்கு மாறி, உடை மாற்றும் அறையை விட்டு வெளியே வந்தான்.

அவன் அறைக்குள் வரும்போது அலமாரி யில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த ரேவதி... இப்போது அறையில் இல்லை... எதிர்பார்த்ததுதான் என்றாலும், ஏனோ அவனுக்கு மனம் வலித்தது.

'என்ன வாழ்க்கை இது...' என்று சலிப்பாக இருந்தது. உடை மாற்றும் அறை யில் அவன் கழட்டிப் போட்டிருக்கும் ஈர உடையை அவன் அறையில் இல்லாத போது அப்புறப்படுத்தி... துவைத்து மடித்து வைத்து விடுவாள். ஆனால் அவன் அறைக்குள் இருக்கும் பகல் நேரங்களில்... அவள் அறைக்குள் வர மாட்டாள்.

எதனால் அவள் விலகிச் செல்கிறாள் என்பதையும் அவன் நன்கு அறிந்துதான் இருந்தான்...

வேறு வழியில்லாமல்... ரேவதியின் கழுத்தில் தாலியைக் கட்டி... அவளுடன் வீட்டுக்குள் வந்து... புதுமணத்

தம்பதிகளாய் அமர்ந்திருந்த போது... ரேவதி இதே உடை மாற்றும் அறைக்குள் போயிருந்ததால் கவிதா அறைக்குள் வந்து செந்திலின் கையைப் பிடித்துக் கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

"எப்படி மனம் வந்தது உங்களுக்கு...? உங்களுக்காக நான் காத்திருக்கும்போது... வேறு ஒருத்தி கழுத்தில் எப்படி நீங்கள் தாலி கட்டலாம்...? இதற்காகவா இத்தனை நாளும் நான் காத்திருந்தேன்...? தூங்கும் போதுகூட நான் உங்களை மறந்ததில்லையே அத்தான்... நீங்கள் விழித்துக் கொண்டிருக்கும் போதே என் கழுத்தை அறுத்து விட்டீர்களே... உங்களால் எப்படி இதைச் செய்ய முடிந்தது, அத்தான்...?"

கண்ணீர் விட்டுக் கதறி அழுதவளின் முதுகிற்குப் பின்னால் உடை மாற்றும் அறையிலிருந்து... வெளியே வந்த ரேவதியின் அதிர்ச்சிப் பார்வையைக் கண்டு... செயல் இழந்தவனாய் நின்றான் செந்தில்.

அன்றும் சரி... அதற்குப் பின்னால் வந்த நாள்களிலும் சரி... ரேவதி ஒரு வார்த்தை கூடக் கவிதாவைப் பற்றிக் கேட்கவில்லை... ஒரு வருடம் கடந்தும்... அவள் செந்திலிடம் ஒட்டிப் பழக நினைக்கவும் இல்லை.

இரவில் மட்டும்... அவன் தூங்கி விட்டானா என்று பார்த்து விட்டு அறைக்குள் வருவாள். கட்டிலின் ஓரமாய்ச் சுருண்டு படுப்பாள். விடிவதற்குள் எழுந்து குளிக்க போய் விடுவாள்.

மறந்தும் கூட அவள் பக்கம் திரும்பிப் படுக்க மாட்டான் செந்தில்... தன் மூச்சுக் காற்று அவள் மேல் பட்டால் கூட அவள் கட்டிலில் இருந்து இறங்கிப் போய்விடுவாள் என்ற கவலையுடன்... கழுத்து வலித்தாலும் பரவாயில்லை என்று அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருப்பான்.

தாமரையிலைத் தண்ணீராய் அவர்கள் வாழ்ந்து வந்து வாழ்க்கையை நினைத்து அவனது மனம் சில சமயம் அலை பாயும்.

அந்த மழைநாளில் மட்டும் அவளைச் சந்தித்திருக்காவிட்டால்... இந்நேரம் அவளும் நன்றாக வாழ்திருப்பாள்... தானும் நிம்மதியாய் வாழ்ந்திருக்கலாம் என்று நினைத்துக் கொள்வான்.

"காபி..." என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ரேவதி... அறையிலிருந்த டீப்பாயின் மேல் காபியை வைத்துவிட்டு வெளியேறிக் கெர்ணடிருந்தாள்.

'ஏன்... இதை என் கையில் கொடுக்க மாட்டாளா...? மனதில் மெல்லிய கோபம் எழுந்தாலும்... அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் காபியை எடுத்துப் பருகினாள்.

முகம் பார்க்காமல் நடமாடினாலும்... அவனுக்குக் காபி கொடுப்பது... சாப்பாடு பரிமாறுவது... அவனது துணிகள்... முதல் அறையிலிருக்கும் பொருள் களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது என்று... அடிப்படை வேலைகளை மறுக்காமல் செய்கிறாளே... அந்த மட்டிலும் போதும் என்ற நினைவு அவனுக்கு.

வெளியே மழை கொஞ்சம் வெறித்து இருந்தது. அறையை விட்டு வெளியே வந்து... மாடிப்படிகளில் இறங்கினான். ஹால் சோபாவில் அமர்ந்து மீனாட்சியுடன் பேசிக் கொண்டிருந்த விசுவநாதன் மகனைப் பார்த்தார்.

"என்னப்பா... மழையில் நனைஞ்சுக்கிட்டு வந்தாயாமே... உன் அம்மா சொன்னாள்."

"ஆமாம்பா."

"ஏன் காரை எடுத்துக்காம மோட்டார் சைக்கிளில் போன?"

"தோப்பில் தேங்காய் இறக்கிக் கொண்டு இருந்தாங்கப்பா. அதைப் பார்க்க காரில் எப்படிப் போவது?"

"அதுக்காக மழை வந்தால் நனைந்துக்கிட்டே வரணுமா? மோட்டார் ரூமில் ஒதுங்கி நின்று... மழை விட்டதும் வர வேண்டியதுதானே..."

"நான் கிளம்பும்போது மழையில்லைப்பா."

"ஊம்... எல்லாக் கேள்விக்கும் உன்னிடம் பதிலிருக்கு..."

விசுவநாதன் இயல்பாய்க் கூற... மீனாட்சி நொடித்தாள்.

"ஆனா... இவன் வாழ்க்கைதான் கேள்விக் குறியாய்ப் போச்சு."

செந்திலின் முகம் சுருங்கிப் போனதைக் கண்ட விசுவநாதன் மனைவியை அதட்டினார்.

"வயசானாலும் உனக்கு அறிவு வளரலை, மீனாட்சி. எந்த நேரம் எதைப் பேசணும்கிற யோசனையில்லாத நீயெல்லாம் என்ன பெரிய மனுஷி..."

"பெத்த வயிறு பத்திக்கிட்டு எரியுது..."

"ஒரு நாளைக்கு ஆறு லிட்டர் தண்ணியைக் குடி எரிகிற நெருப்பு அணைந்து விடும்... வந்து சேர்ந்திருக்கிறாயே எனக்குன்னு... கொஞ்ச நேரம் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்க உன்னால் முடியுதா...?

"நான் ஏங்க சும்மா இருக்கணும்? தங்கமா பிள்ளையை வளர்த்து... ஒரு தகரத்தை மருமகளாக் கொண்டு வந்த கொடுமையைச் சொல்லத்தான் செய்வேன். என் மகன் என்னைக்கு அவ கழுத்தில் தாலி கட்டினானோ... அன்றைக்கு அவன் நிம்மதி போச்சு..."

பூஜையறையில் விளக்கை ஏற்றிக் கொண்டிருந்த மருமகளைக் கண்டதும்... விசுவநாதன் தாழ்ந்த குரலில் மனைவியைக் கண்டிருத்தார்.

"போதும் மீனாட்சி... மருமகள் காதில் நீ பேசுவது விழுந்து விடப் போகுது."

"விழுந்தால் விழுகட்டுமே. எனக்கென்ன பயமா?

"உனக்குப் பயமிருக்குன்னு சொல்ல நான் என்ன முட்டாப்பயலாடி. அதுதான் ஊர் உலகத்துக்கே தெரிந்த விசயமாச்சே."

"ஊருக்கு இளைச்சது பிள்ளையார் கோவில் ஆண்டியாம்."

"ஆண்டியை ஏன்டி இப்ப இழுக்கறே?"

"இந்த வீட்டுக்கு இளக்காரம் நானா?"

"இதைப் பாருடா மகனே... உன் அம்மா எனக்குச் சிரிப்பு மூட்டுகிறா... ஏன்டி... எந்த மடையனாவது... இந்த வீட்டில் நீ அடங்கி... ஒடுங்கி இருக்கேன்னு சொல்லுவானா?"

"என் கோபத்தைக் கிளறாதீங்க."

"அதையேன்டி நான் கிளறப் போகிறேன்...? பசி என் வய்றிறைப் போட்டுக் கிளறுது... செந்தில்! சாப்பிடப் போகலாம்... வா..."

"ஆமாடா... அப்பாகூடக் கூட்டுச் சேர்ந்துக் கிட்டுப்போ. அப்போத்தான்... நெல்லுக்கு இறைக்கிற தண்ணீர் கொஞ்சம் புல்லுக்கும் பாய்வதைப் போல... உன் அப்பாவுக்குப் பரிமாறுவதில் ஒரு கரண்டியை உன் தட்டிலும்... உன் பெண்டாட்டி போடுவாள்."

"நீ இருக்கியே... உன்னிடம் மனுசன் பேசுவானாடி."

தலையில் அடித்துக் கொண்ட விசுவநாதன் கோபமாய் எழுந்து சாப்பிடுகிற அறைக்குப் போனார். செந்தில் மௌனமாய் அவரைப் பின் தொடர்ந்தான்.

ஹாலில் நடந்த பேச்சு வார்த்தைகள் அட்சர சுத்தமாய் ரேவதியின் காதில் விழத்தான் செய்தன. ஆனால்... யாரோ... யாரையோ... பேசுவது போல் அவள் உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் அவர்கள் முன்னால் தட்டுக்களை வைத்துவிட்டுப் பரிமாற ஆரம்பித்தாள்.

"இன்றைக்கு என்ன பலகாரம், ரேவதி...?"

"சப்பாத்தி... குருமா... மாமா..."

"அட... என்னம்மா... இன்றைக்கு இட்லி... தோசைக்கு... டாட்டா சொல்லிட்டாயா...?"

"மழை நேரம் மாமா... கோதுமை உடம்புக்குச் சூடு அதனால்தான் இதைச் செய்யச் சொன்னேன்."

"இது நம்ம சமையல்காரப் பொன்னம்மா செய்தது போல இல்லையே..."

ரேவதி பதில் சொல்லாமல் லேசாய்ச் சிரித்தாள். பொனம்மாள் குருமா பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து ரேவதியின் கையில் கொடுத்துவிட்டு,

"நான் செய்திருந்தால்தானே... அது நான் செய்தது போல இருக்கும்... சின்னம்மா செய்தா... அது சின்னம்மா செய்தது போலத்தான் இருக்கும்..." என்றாள்.

"அதுதானே பார்த்தேன். பொன்னம்மாவாவது சப்பாத்தி குருமா செய்வதாவது."

விசுவநாதன் சிரித்துக் கொண்டே மகனைப் பார்த்தான். அவன் இது எதுவும் எனக்குச் சம்பந்தமில்லை என்பது போல... சாப்பிடுவதிலேயே... கண்ணும் கருத்துமாக இருந்தான்.

'ம்ஹூம்... இரண்டு கையும் தட்டினால்தானே சத்தம் வரும்? அந்தப் பெண் பாவம்... மாய்ஞ்சு... மாய்ஞ்சு அடுப்படியில் பலகாரம் செய்து கொண்டு வந்து போடுகிறது. இவன் என்னவோ... மாடு வைக்கோலைத் தின்பது போல... எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் அதை உள்ளே தள்ளுகிறான். நல்லாயிருக்குன்னு ஒரு வார்த்தை இவன் வாயிலிருந்து வந்தால்தானே... பதில் வார்த்தை அந்தப் பெண்ணின் வாயிலிருந்து வரு...? இவன் இப்படியிருந்தால் அந்தப் பெண் எப்படி வலிய வந்து பேசும்...?"

மனதில் நினைத்ததை மகனிடம் சொல்ல முடியலாமல் ஒரு பெருமூச்சுடன் ரேவதியைப் பார்த்தார் அவர்.

அவளோ... இந்த உலகிலேயே பற்றில்லாமல் துறவியாய்ப் போய் விட்டவளைப் போல... அமைதியாய் ஒரு பார்வையைப் பார்த்து வைத்தாள்.

'கடவுளே... இந்த இரண்டும் இரண்டு அகப்பை... இரண்டுமே கழன்ட அகப்பை... இவர்களை எப்படி நான் பொருத்தி வாழ வைப்பேன்.'

விசுவநாதனுக்குத் தலையைச் சுற்றியது... அதைப் பற்றிக் கவலைப்படாமல் செந்தில் சாப்பிட்டு விட்டுச் செல்ல... ரேவதி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள்.

## 3

அறையில் விடி விளக்கின் மெல்லிய வெளிச்சம் பரவியிருக்க... ரேவதி அறைக்குள் நுழைந்தாள். முதுகைக் காட்டிச் செந்தில் படுத்தி ருக்க. கட்டிலின் ஓரமாய்ச் சுருண்டு படுத்தாள்.

'விழுந்து வைத்தால் என்ன ஆவது...? கொஞ்சம் உள்ளே தள்ளித்தான் படுத்தால் என்ன...?'

வெறும் நினைவைத்தான் செந்திலால் நினைக்க முடிந்தது. நினைத்ததை இதுவரை வாய்விட்டுச் சொல்லியது இல்லை...

அன்றும் இது போலத்தான்... அந்தக் கிராமத்து வீட்டின் அறையில்... சுருண்டிருந்தாள். இன்றும் சுருண்டிருக்கிறாள். அன்று முழங்கால்களை மடித்து வைத்து... அதில் தலை புதைத்து அமர்ந்திருந்தாள். விடியும்வரை மழை கொட்டிக் கொண்டிருக்க... ஒரு பொட்டுத் தூக்கம் கூட கண்ணில் இல்லாதவளாய்... கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள்.

செந்திலுக்கு ரேவதியை நினைத்து மனதுக்குள் இரக்கம் சுரந்தது... பாவம்... சிறு பெண்... படிப்பை முத்துவிட்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தவள்... விதி வசத்தால்... செந்தில் ஏறியிருந்த அதே பேருந்தில் ஏறி பயணம் செய்தவள்.

அன்று அவன் நினைத்தானா...? அந்தப் பேருந்துப் பயணம்... அவளுடைய வாழ்க்கைப் பயணத்தை நிர்ணயிக்கப் போகிறது என்பதை.

கண் மூடித் தூங்க முயன்று கொண்டிருந்த ரேவதியின் மனதிலும் அந்த மழை நாளின் நினைவுகள் இருந்தன. என்றும் இல்லாமல் இன்று மட்டும் அந்த மழை நாளில் நினைவு பொங்கி வரக் காரணம் என்ன என்று யோசித்தாள். காரணம் புரிந்தது.

அன்று போல் இன்றும் மழை கொட்டோ... கொட்டென்று கொட்டியதுதான் காரணம்.

"ரேவதி... மழை விடாமல் பெய்யுதே... இரு... ஆட்டோவைக் கூப்பிட்டு வரச் சொல்லலாம்... நீ வேற தனியாய்ப் போகணுமே."

கல்லூரி ஹாÞடலில் இருந்த எல்லா மாணவிகளும் கிளம்பிப் போய் விட்ட நிலையில் கடைசியாய்க் கிளம்பிய ரேவதியிடம் கவலையுடன் ஹாÞடல் வார்டன் கூறினாள்.

"மழை பெய்தால் என்ன மேடம்... இது பகல் நேரம் தானே... பெரிய குளத்திலிருந்து கெங்குவார் பட்டிக்குப் போகப் போகிறேன். தொலை தூரம்ன்னு சொன்னால்... நீங்கள் பயப்பட வேண்டியதுதான். இது பக்கம்தானே மேடம்."

ரேவதி தைரியமாய்ப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறிப் பேருந்து நிலையம் சென்றாள். மதுரை செல்லும் பÞஸில் ஏறி... வத்தலக் குண்டிற்கு டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

அவள் ஏறிய அதே பÞஸில் ஏறிய செந்தில் அவளுடைய இருக்கைக்கு நேர் பின்னே அமர்ந்தான். அவனது செல்போன் ஒலித்தது... எடுத்துப் பேசினான்.

"கார் ரிப்பேர்ப்பா... மெக்கானிக் செட்டில் விட்டிருக்கிறேன். நாளைக்கு மறுநாள் வந்து எடுத்துக்கிட்டுப் போகச் சொன்னான். ம்ம்.. வசூல் பண்ணி விட்டேன்... ம்ம்... இப்ப பÞஸில் வருகிறேன்ப்பா... ஆமாம்... மழை பெய்துக்கிட்டுதான் இருக்கு. அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்."

செல்போனை அணைத்துவிட்டு... பÞஸில் இருந்த வீடியோவில் படம் பார்த்தவன்... மறந்தும் கூட அவனுக்கு

நேர் முன்னால் அமர்ந்திருந்த ரேவதியைப் பார்க்கவில்லை.

பேருந்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தவன்... டிரைவரிடம் சந்தேகமாய் வினவினான்.

"என்ன டிரைவரே... பÞ ரூட் மாறி ஓடுது."

"அதையேன்ப்பா கேட்கறே... பாதாளச் சாக்கடைத் திட்டம் வந்தாலும் வந்தது... ரோட்டில் பூரா குழி தோண்டி... பள்ளம் பறிச்சுப் போட்டிருக்காங்க. அதுதான் பÞஸை இந்தப் பக்கம் திருப்பி ஓட்டுகிறேன்."

"பார்த்து டிரைவரே... அங்கிட்டு கும்பக்கரை ஆறு கரை உடைடச்சிருச்சுன்னு பேசிக்கிறாங்க... நீங்க வேற அந்தப் பக்கம் பÞஸை ஓட்டிக்கிட்டுப் போறீங்க."

"வரும்போது அந்த வழியாத்தானே வந்தோம். எந்தப் பிரச்சனையும் இல்லையே."

டிரைவர் இலகுவாகக் கூறிக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். பிரச்சனை அவர் போன சாலையில் இல்லை. பÞஸிற்குள்தான்... என்பது.. கொஞ்ச நேரத்தில் ஒன்று போல பÞஸில் வரிசையாய் ஒவ்வொரு சீட்டிலும் அமர்ந்திருந்த ஐந்து நபர்கள் எழுந்த போதுதான் பிரயாணிகளுக்குத் தெரிந்தது.

"யாரும் அசையாதீங்க. அசைந்தால் சுட்டுத் தள்ளி விடுவேன்..." என்று எச்சரித்த அவர்களின் தலைவன் போல இருந்தவனின் கையில் துப்பாக்கி மின்னியது.

"ஏய்ய்... டிரைவர்... பÞஸை கும்பக்கரை காட்டுக்குள் ஓட்டு..." ஒருவன் டிரைவரின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து அழுத்தினான்.

மற்ற இரண்டு பேரும்... பேருந்தின் இரண்டு பக்க வாசல் படிகளில் துப்பாக்கியுடன் நின்று கொள்ள... ஒருவன் பÞஸில் இந்தக் கோடியிலிருந்து... அந்தக் கோடிவரை நடக்க ஆரம்பித்தான்....

ஒவ்வொரு முறை அவன் நடக்கும் வோதும்... ரேவதியைக் காமப் பார்வை பார்த்துக் கொண்டே நடக்க... ரேவதிக்கு

அந்த மழை நேரத்திலும்... பயத்தில் வேர்த்துக் கொட்டியது...

அவன் ரேவதியின் பக்கவாட்டு சீட்டில் அமர்ந்திருந்தவன்தான்... பஸ்ஸில் ஏறியது முதல் ரேவதியை ஆசைப் பார்வை பார்த்துக் கொண்டேதான் வந்தான்.

ஓரிரு முறை தற்செயலாய் அவனது பார்வையைச் சந்தித்த ரேவதி உடல் கூசிப் போனாள்.

'பொறுக்கி...' என்று மனதில் திட்டிக் கொண்டே... துப்பட்டாவைச் சரி செய்து கொண்டாள். இப்போது... துணைக்கு யாரும் இல்லாமல்... தனிமையில் மாட்டிக் கொண்டதை நினைத்தவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

"ஏன் அழுகிறாய்...?" அந்தப் பொறுக்கி அவளருகில் வந்து கரிசனமாய் விசாரித்தான்.

அவள் பதில் சொல்லப் பிடிக்காமல் முகம் திருப்பிக் கொள்ள... முரட்டுத்தனமாய் அவளுடைய முகத்தை தொட்டுத் திருப்பினான்... ரேவதி... உடல் நடுங்க... அவனது கையைத் தட்டி விட்டு அவனைத் தள்ளி விட்டாள். அவன் அடுத்திருந்த சீட்டில் போய்

விழுந்தான்.

"ராக்கப்பா... என்ன இது...?" தலைவன் போல இருந்தவன் அதட்டினான்.

"இல்லை தலைவரே..." அந்த ராக்கப்பன் ஏதோ காரணம் சொல்லப் போனான்.

"பேசாதே... நாம் ஒரு கொள்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்... இந்த பஸ்ஸை நாம் கடத்துவது... நம் தோழர்களைச் சிறை மீட்க... நீ பெண் வேட்டையாடுவதற்காக இல்லை... ஒழுங்காய் இரு..." தலைவன் எச்சரித்தான்.

கூண்டில் அகப்பட்ட புலிபோல்... அவன் தன் சிவந்த விழிகளால் ரேவதியை உறுத்துப் பார்த்த வண்ணம்... இங்கும் அங்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

"யாரு பெத்த பெண்ணோ தெரியலை. இப்படி இந்தக் கேடு கெட்டவன் கண்ணில் பட்டுத் தொலைத்து விட்டதே. கூட யாரும் வரவில்லை போல."

செந்திலின் அருகே அமர்ந்திருந்த பெரியவர் பரிதாபப் பட்டார். முன் சீட்டிலிருந்த ரேவதியின் மெல்லிய அழுகையொலி செந்திலைப் பாதித்தது.

தப்புவதற்கு என்ன மார்க்கம் என்று எல்லோரும் அவரவர் மனதில் யோசித்துக் கொண்டிருந்த போதுதான் அது நடந்தது.

கும்பக்கரை ஆறு... கரை உடைந்து... வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்க... ஆற்றோர மணலில் சக்கரம் சிக்கி பÞ அப்படியே நின்று விட்டது.

"என்ன என்ன ஆச்சு..." அவர்கள் ஐவரும் பÞஸை விட்டு இறங்கிய கணத்தில் டிரைவரும்... மற்றவர்களும் சீட்டை விட்டு எழுந்து வெளியே குதித்து ஓட ஆம்பித்து விட்டனர்.

செந்திலும் குதித்து ஓடினான். அப்போதுதான் அவன் காதுகளில் ரேவதியின் தீனமான அலறல் சப்தம் கேட்டது.

"காப்பாற்றுங்க... காப்பாற்றுங்க..."

செந்தில் நின்று திரும்பிப் பார்த்தான். ராக்கப்பனின் கையிலிருந்து விடுபடப் போராடிக் கொண்டிருந்தாள் ரேவதி. மற்ற நான்கு பேரும்... ஓடிக் கொண்டிருந்த மற்றப் பயணிகளைத் துரத்திக் கொண்டிருக்க... ராக்கப்பன் மட்டும் ரேவதியைப் பÞஸை விட்டு இறங்க விடாமல் மடக்கிப் பிடித்திருந்தான்.

செந்தில் பÞஸுக்குள் பாய்ந்து ஏறினான். ராக்கப்பனின் நெஞ்சில் ஓங்கி ஒரு உதை விட்டான். அவன் மல்லாந்து விழுகவும்... அவனுடைய கையிலிருந்த துப்பாக்கி தள்ளி விழுந்தது... செந்தில் அந்தத் துப்பாக்கியைக் கைப்பற்றிக் கொண்டான்.

"வா..." ரேவதியின் கைப்பிடித்து இழுத்தான். அவள் கொஞ்சம் கூட யோசிக் காமல்... பெட்டியை அப்படியே

போட்டு விட்டு... அவனுடன் ஓட ஆரம்பித்தாள்.

எந்தத் திசையில் ஓடினார்கள் என்று தெரியாமல் அவர்கள் ஓடினார்கள். மழை கொட்டிக் கொண்டிருந்தது. வெள்ளம்... கரை உடைந்து பாய்ந்து கொண்டிருந்தது. இடுப்பளவு நீரில்... ஏறக்குறைய நீந்தி... அவர்கள் கரை ஏறியபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது.

எங்கும் இருள்... தண்ணீர்க் காடு... ரேவதி பயத்தில் நடுங்கினாள். சில்லிட்டுப் போன அவளது கைகளைத் தன் கைக்குள் இறுக்கிப் பிடித்து... தைரியம் கொடுத்தவறே செந்தில்... தண்ணீரில் முன்னேறினான்.

"நீச்சல் தெரியுமா...?" செந்தில் வினவினான்.

"தெரியாது..." ரேவதி கண்ணீர்க் குரலில் பதிலளித்தாள்.

"எனக்குத் தெரியும்... பயப்படாதே... வா..." அவன் தைரியம் கூறினான்.

ரேவதியால் பயப்படாமல் எப்படி இருக்க முடியும்? ஹாÞடலில் இருந்து வீடு போக வேண்டியவள். கையிலிருந்த பெட்டியையும்... மற்ற உடைமைகளையும்... அம்போ என்று பÞஸிலேயே விட்டுவிட்டு... மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள இருட்டு வேளையில்... முன்பின் அறியாதவனின் பின்னே... ஆற்று வெள்ளத்தில் நீந்தி நடந்தால்... பயம் தவிர வேறு எதுவும் வராதே...

ரேவதி பயந்தாள். உடல் நடுங்கினாள். அந்தப் பீதியை அனுபவிப்பதை விட... அப்படியே ஆற்று வெள்ளத்தில் மூழ்கி விடலாமா என்று அவள் தைரியத்தை இழந்து கொண்டிருந்தபோது, தூரத்தில்... சிறு மின்மினிப் பூச்சிகள் போல் விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

## 4

"ஏதோ ஊர் தெரியுது..." செந்தில் பரபரப் பாய்க் கூறினான்.

"நிஜமாகவே அது ஊர்தானா?" ரேவதி அவ நம்பிக்கையுடன் கேட்டாள்.

"ஊர்தான்... விளக்கு வெளிச்சம் தெரிகிறது..." செந்தில் அவசர நடையுடன் அவளது கையை இறுகப் பற்றியவாறு விரைந்தான்.

ரேவதிக்கு நம்பிக்கையிருக்கவில்லை. ஆனால்... அவர்கள் முன்னேற முன்னேற மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம் போல் தெரிந்தவையெல்லாம்... கார்த்திகை தீபத்தின் அகல் விளக்கின் ஒளி போல... பளீரிட்டன.

"இந்த மழையிலும்... வெள்ளத்திலும்... கரண்ட் கட் ஆகியிருக்கும். அதனால்தான் அதிக வெளிச்சம் இல்லை."

அந்த நெருக்கடியான நேரத்திலும் செந்திலின் புத்தி கூர்மையாக வேலை செய்ததைக் கண்ட ரேவதிக்கு வியப்பாக இருந்தது. அவர்கள் ஊரை நெருங்கி விட்டார்கள்.

ஊர் எல்லையிலிருந்த மண்டபத்தில்... கூட்டமாய் ஆள்கள் உட்கார்ந்திருப் பது தெரிந்ததும்... ரேவதி தயக்கத்துடன் தண்ணீருக்குள்ளேயே நின்று விட்டாள்.

"ஏன் நின்று விட்டாய்... வா..." என்று அவன் அவளை முடுக்கினான்.

"இல்லே... எனக்குப் பயமாய் இருக்கிறது. இது எந்த ஊர் என்று தெரியவில்லை. இந்த மழையிலும்... வெள்ளத்திலும்... வீட்டுக்குள் இருக்காமல்... கூட்டமாய்க் கூடி இருக்கிறார்களே... இவர்கள் இந்த ஊர் ஜனங்களா... இல்லை, வேறு யாருமா...?" அவளுடைய குரலில் தைரியம் குறைந்திருந்தது.

அதை உணர்ந்தவனாய் அவன் ஆறுதலாய் அவளுடைய கைவிரல்களை அழுத்தம் கொடுத்துப் பற்றினான்.

"யாரை நினைத்துப் பயப்படுகிறாய்? அந்தத் தீவிரவாதிகளை நினைத்தா? அவர்கள் இங்கு இருக்க வாய்ப்பே இல்லை."

"அப்புறம் ஏன் கூட்டம்... கூடியிருக்கிறது?"

"அதைக் கிட்டே போய்த் தெரிந்து கொள்ளலாமே."

"ஏன்... அங்கே போகாவிட்டால்தான் என்ன...?"

"நீ புரிந்துதான் பேசுகிறாயா...? நமக்கு இப்போது... மழைக்கு ஒதுங்க ஒரு பாதுகாப்பான கூரை தேவை... மழை இப்படிக் கொட்டிக் கொண்டிருக்கிறது... வெள்ளத்தின் நீர் மட்டம்... இடுப்பிலிருந்து இப்போது தோள்ப்பட்டை

வரை கூடிவிட்டது. உடம்பெல்லாம் ஜில்லிட்டுப் போயிருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரம் இப்படி மழையில் நனைந்து கொண்டு... தண்ணீருக்குள்ளேயே நடந்து கொண்டிருந்தோமானால் குளிரிலேயே விரைத்துச் செத்து விடுவோம். அது மட்டுமில்லை. அந்தத் தீவிரவாதிகளில் ஒருவன் கண்ணில் நாம் திரும்ப மாட்டி விட்டாலும் நம் கதி அதோ கதிதான்... ஏனென்றால் அவர்கள் ஐவரையும் நாம் அடையாளம் கண்டு கொண்டு விட்டோம்... எளிதாய் அவர்களை இனம் கண்டு விட்டோம்... எளிதாய் அவர்களை இனம் கண்டு காட்டிக் கொடுத்து விடுவோம். பகலிலேயே இந்த மழையிலும்... வெள்ளத்திலும் நம்மால் எதிர்த்துப் போராட முடியாது எனும்போது... இது மையிருட்டு நேரம்... இப்போது போய் அவனுக கையில் மாட்டிக்கணும்னு சொல்கிறாயா...?"

செந்தில் சொல்வதில் இருந்த நியாயம் புரிந்தவளாய் ரேவதி தயக்கத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள். உயரமாக இருந்த மண்டபத்தில் பெட்ரோமாக்Þ விளக்கின் வெளிச்சம் பளீரெனப் பரவியிருந்தது.

'தளப்... தளப்...' என்ற தண்ணீரின் சப்தம் கேட்டுத் தீவிரமான முகபாவனையுடன் பேசிக் கொண்டிருந்த ஊர் ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

செந்தில்... ரேவதியின் கையை விட்டு விட்டால்... அவள் பயத்தில் நீரில் மூழ்கி விடுவாள்... இல்லை... கூச்சத்தில் பின் வாங்கி... இருளில்... வெள்ளத்தில் காணாமல் போய் விடுவாள்... என்று பயந்து போனவனாக அவளது கையை

இறுக்கிப் பிடித்தவாறு... பெட்ரோ மாக்Þ விளக்கின் வெளிச்ச வட்டத்திற்குள் வந்து நின்றான்...

மண்டபத்தில் இருந்த ஆண்களின் முகத்தில் ஆச்சரியம் நிலவியது... அவர்களில் ஊர்ப் பெரிய மனிதரான பாண்டுரங்கன்.

"நீங்கள் யாரப்பா...?" என்று விசாரித்தார்.

"ஐயா... நான் மதுரைக்குப் பக்கத்திலிருக்கும் வாகைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவன்... பெரிய குளத்திற்கு வியாபார விசயமாகக் காரில் வந்தேன்... கார் ரிப்பேராகி விட்டது... மெக்கானிக் செட்டில் விட்டு விட்டு பÞஸில் வந்தேன்... பÞஸைத் தீவிரவாதிகள் பிடித்து... திசைதிருப்பிக் கும்பக்கரை காட்டுப் பக்கம் ஓட்டச் சொன்னாங்க..."

செந்தில் விவரித்துக் கொண்டிருப்பதைக் கேட்ட ஊர்க்காரர்கள் திகைத்துப் போனார்கள்...

"இதென்னப்பா பெருங்கொடுமையாய் இருக்கு... இப்படிக் கொட்டுகிற மழையில... ஒரு பÞஸையே கடத்திக்கிட்டுப் போகப் பார்த்திருக்கானுகளே களவாணிப் பயலுக... இந்தக் கதையெல்லாம் நம்ம ஊர்ப் பக்கம் நடக்கலாமா...? வரவர. ஊர் கட்டுதிட்டம் தளர்ந்து போச்சுப்பா... அதுதான் இப்படி வினைகளை யெல்லாம் காது கொடுத்துக் கேட்க வேண்டியிருக்கு..." பாண்டுரங்கன் கோபக் குரலில் பேச... அவருக்கு அருகில் இருந்த வீரபாகு,

"அதுக்குச் செய்ய வேண்டியதை எட்டுப்பட்டி பஞ்சாயத்தைக் கூட்டி அப்புறமாய்ப் பேசலாம், தலைவரே... இப்ப இந்தச் சின்னஞ் சிறுசுக... நம்மளை நம்பி வந்திருக்கிறாங்க... இவங்களை முதலில் பார்ப்போம்..." என்றார்...

"அதுவும் சரிதான்... சொல்லு, தம்பி... அப்புறம் என்ன ஆச்சு...?"

கதை கேட்கும் ஆவலில் பாண்டுரங்கன் வினவ... கூட்டத்தில் இருந்த இளவட்டங்கள் சிரித்தார்கள்...

"என்னவாம்... நம்ம ஊரு இளந்தாரிப் பசங்களுக்குச் சிரிப்பாணி பொத்துக் கிட்டு வருது... ஊரு வெள்ளக் காட்டில் கிடக்க... அதுக்கு என்ன பண்ணலாமுன்னு பேச வந்திருக்கோம், நினைப்பிருக்கில்ல... சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலைமையிலா நாம இப்ப இருக்கோம்" பாண்டுரங்கன் அவர்களைப் பார்த்துக் கடிந்து கொண்டார்.

"எல்லாம் சரிதான் பெரியப்பா... நாம... வெள்ளத்தில கால் நனைக்காம... மழையில நனையாம மண்டபத்தில் ஏறிப் பாதுகாப்பாய் உட்கார்ந்திருக்கோம்... அவங்க ரெண்டு பேரும் கழுத்தளவு தண்ணிக்குள்ள... மழையில் நினைஞ்சுக்கிட்டு நிற்கிறாங்களே...! கதை கேட்க இதுவா நேரம்...? முதலில் அவங்களுக்குக் கை கொடுத்து மேடையில் ஏற்றி விடுங்க பெரியப்பா..." இளவட்டங்களில் ஒருவன் கிண்டலாகச் சொன்னதும்தான்... அவர்களின் நிலைமையை உணர்ந்தார் பாண்டுரங்கன்...

"ஏறு தம்பி..." என்று செந்திலுக்குக் கை கொடுத்து ஏத்தி விட்டவர்... அடுத்துப் பேசிய வார்த்தைகளைக் கேட்டதும் செந்திலுக்குத் தூக்கி வாரிப் போட்டது...

"இனி உன் பெண் சாதிக்குக் கை கொடுத்து மேடைக்குத் தூக்கி விடு தம்பி... நம்ம ஊரு பொம்பளப் புள்ளைக புருசன்காரன் கையை விட்டு... இன்னொருத்தன் கை கொடுத்தால் பிடிக்காதுகளே..." என்று நியாயம் வேறு சொன்னார்...

கீழே... வெள்ளத்தில் நின்று கொண்டிருந்த ரேவதிக்கு அப்படியே நீர்ச் சுழலோடு போய் விடலாமா என்று இருந்தது... அவளது மனவோட்டத்தை யூகித்த வனாய் அவசரமாய்க் குனிந்து அவளது கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான் செந்தில்...

'எந்தக் காலத்தில் இருக்கிறார் இந்த மனிதர்... டாக்டரிடம் கையைக் கொடுக்காமல் நோய் சரியாகுமா...? மரியாதையின் பொருட்டுக் கை குடுக்கக் கரம் நீட்டுபவர்களைப் புறக்கணிக்காமல் கை கொடுத்தால் அது தவறாகி விடுமா...? ஆபத்தில் கரம் கொடுப்பவனின்

கரத்தைப் பற்றிக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது...? அதற்காகக் கரம் கொடுத்தவனையே கைப் பிடிக்க முடியுமா...?'

ரேவதி பொருமிக் கொண்டிருந்த போது... செந்திலின் குரல் அவளை அதட்டி அழைத்தது...

"வெட்டியாய் யோசனை பண்ண இது நேரமில்லை... தண்ணீர் மட்டம் உயர்ந்து கொண்டே வருகிறது... என் கையை இறுக்கிப் பிடித்துக் கொள்... நான் இப்போது உன்னை மேலே தூக்கி விடப் போகிறேன்..." என்று சொல்லிக் கொண்டே அவளை மேலே இழுத்துத் தூக்கி மண்டபத்தில் அமர வைத்தான்...

நனைந்து விட்ட சுடிதார்... உடலோடு ஒட்டியிருக்க... அவள் நடுங்கிக் கொண்டே... துப்பட்டாவை எடுத்து... உடலோடு போர்த்துக் கொண்டாள்... மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற சங்கடத்துடன் அவள் செய்த அந்தச் செயலால்... அவள் கழுத்தில் தாலிச் செயினோ... தாலிக்கயிறோ இல்லை என்பதை மற்றவர்கள் கவனிக்க முடியாமல் செய்து விட்டதை அவள் அறியாமல் போனாள்...

"அடடா... இந்தப் புள்ளைக இப்படிக் குளிரில் நடுங்குதுகளே... இந்தா தம்பி... இந்தப் பெரிய கம்பளியை... உனக்கும் உன் பெண்சாதிக்கும் சேர்த்துப் போர்த்திக்க..."

பாண்டுரங்கன்... தன்னிடமிருந்து பெரிய கம்பளிப் போர்வையைச் செந்திலிடம் நீட்ட... அவன் தர்ம சங்கடத்துடன் அதை வாங்கிக் கொண்டு... ரேவதியைப் பார்த்தான்...

எதுவும் பேச முடியாத நிலையில் அவளிருக்க... அவன் அவளது தோளைச் சுற்றிக் கம்பளியைப் போர்த்திவிட்டு... மறுமுனையைத் தன் தோளில் போர்த்துக் கொண்டான்...

குளிருக்குக் கம்பளி இதமாக இருந்தாலும்... இப்படி ஒரே கம்பளியை... அன்னிய ஆடவனுடன் சேர்த்துப் போர்த்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறதே என்று மிகவும் மனம் நொந்து போனாள் ரேவதி...

"இப்பச் சொல்லுப்பா... அந்தத் தீவிரவாதப் பசங்க பÞஸைக் கடத்தினானுங்க... அப்புறம்...?" விட்ட கதையைத் தொடர்ந்து கேட்கும் ஆவலுடன் வினவினார் பாண்டுரங்கன்...

"கும்பக்கரை ஆறு கரையுடைச்சு வெள்ளம் வந்திருச்சுங்க, ஐயா..."

"அதுதான் தெரியுமே... அதில மாட்டிக்கிட்டுத்தானே முழி பிதுங்கிப்போய் ஊர்க்கூட்டம் போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறோம்..."

"வெள்ளத்தை எதிர்பார்க்காத தீவிரவாதிகள்... கவனம் திசை திரும்புச்சு... நாங்க... ஆளுக்கொரு திசையில் குதிச்சு வெளியே ஓடி வந்திட்டோம்..."

"நல்ல வேலை செய்தீங்க... மத்தவங்க என்ன ஆனாங்க...?"

"தெரியலைங்க, ஐயா... ஆனால் யாரும் அவனுககிட்ட அம்புட்டு இருக்க மாட்டாங்க..."

"அதுவும் சரிதான்... அப்படித்தான் நடந்திருக்கும். ஆமாம்... நீங்க எப்படிப்பா... இந்த ஊர்ப்பக்கம் வந்தீங்க..."

பாண்டுரங்கனின் கேள்விக்கு இளவட்டங்களில் ஒருவன் பதில் சொன்னான்...

"ஏன் மாமா அவங்களுக்கு என்ன வேண்டுதலா இருக்கு... நம்ம ஊருக்கு வரணுமின்னு...? கால் போன போக்கில ஓடி வந்திருப்பாங்க... இருட்டில... வெள்ளக் காட்டில்... மழையில மாட்டிக்கிட்டாங்க... வெளிச்சம் தெரிந்த பக்கம் ஒதுங்கியிருப்பாங்க... இதை அவங்க சொல்லித்தான் நாம தெரிந்துக்கணுமா...?

5

செந்தில் நன்றிப் பெருக்குடன் பாண்டுரங்கனுக்குப் பதில் சொன்ன அந்த இளைஞனைப் பார்த்தான்...

"அதுவும் சரிதான்... பொம்பளப் புள்ளயக் கையில பிடிச்சுக்கிட்டு அடைக்கலம்ன்னு எங்க ஊருக்கு வந்திட்டிங்க... நாங்க உங்களை விட்டுற மாட்டோம்... இனிமே மழை விட்டு... வெள்ளம் வடியற வரைக்கும் நீங்க இரண்டு பேரும் எங்க ஊருக்கு வந்திருக்கிற விருந்தாளிங்க... என்னப்பா நான் சொல்றது சரிதானே...?"

"அதுவும் சரிதான், பெரியப்பா..."

இளவட்டங்களின் கும்பலில் இருந்து ஒரு குரல் சிரிப்புடன் ஒலிக்க... செந்திலுக்கும் சிரிப்பு வந்தது... அடக்கிக் கொண்டான்...

"சரிப்பா... ஊரைச் சுத்தி இரண்டு மணிக்கொரு தரம்... ஆள் மாற்றி... ரோந்து சுத்தணும்... அதை நம்ம இளவட்டப் பசங்ககிட்ட ஒப்படைக்கிறேன்... ஏன்ப்பா மயிலுசாமி... பள்ளிகூடத்த திறந்து விடு... தாழ்வான பக்கம் குடியிருக்கிற ஜனங்க... வெள்ளம் வடியற வரைக்கும் அங்க தங்கிக்கட்டும்... அப்படியே நம்ம வீட்டில இருந்து ஒரு மூட்டை அரிசி எடுத்துக்கிட்டுப் போய் ஆக்கிப் போட ஏற்பாடு செய்..."

பாண்டுரங்கன் உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு எழுந்து நிற்க... மற்றவர்களும் எழுந்தனர்...

"ஊர்க் கூட்டம் கலையுதுப்பா... எல்லோரும் நாம சொன்ன வேலைகளை மறக்காமல் செய்யுங்க... வா தம்பி போகலாம்..."

பாண்டுரங்கன் அழைத்ததும்... செந்தில் மீண்டும் தண்ணீருக்குள் இறங்க வேண்டுமா என்று யோசித்தான்... ரேவதியின் விழிகளில் மலைப்பே வந்திருந்தது.

"என்ன தம்பி, இப்படி யோசனை பண்ணிக்கிட்டு நிற்கிறீங்க... தண்ணிக்குள்ள எப்படி திரும்ப இறங்குறதுன்னா... ஹா... ஹா..." என்று சிரித்தார்... கூடியிருந்த கூட்டமும் சிரித்தது...

"ஏன் தம்பி... இம்புட்டு பேரும் தண்ணிக்குள்ள நீச்சலடித்து இந்த மண்டபத்துக்குள்ள வந்தோமுன்னு

நினைத்தீங்களா... இந்த மண்டபம்... கரையை ஒட்டி இருக்கு தம்பி... இதோட ஒரு பகுதி பள்ளமா... ஆத்துக்குள் இருக்கும்... மறுபகுதி... மேட்டுப் பக்கம் இணைஞ்சிருக்கும்... இங்கே பாருங்க..." அவர் காட்டிய திசையில்... பெட்ரோமாக்Þ ஒளி வெளிச்சத்தில்... மண்டபத்தின் மறுமுனை உயரமான நிலப்பகுதியோடு இணைந்து நீண்ட பாதை தெரிந்தது...

"அதுதான் ஊருக்குள் போகிற பாதை... வாங்க..."

பாண்டுரங்கன் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்... அவர்கொடுத்த குடையைத்தனக்கும்... ரேவதிக்குமாகச் செந்தில் பிடித்துக் கொண்டு வந்தான்...

ஊரின் மையத்தில் இருந்த அந்தப் பெரிய வீட்டின் கதவைத் தட்டினார் பாண்டுரங்கன்...

"லீலா... லீலா... கதவைத் திறம்மா..."

"இம்புட்டு நேரமா ஊர்க் கூட்டம் முடிச்சிட்டு வர...? நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிங்களா... இல்லை, இந்த ஊரைக் கல்யாணம் பண்ணிக் கிட்டிங்களா...?"

கதவைத் திறந்தபடி சத்தமாகக் கேட்டாள் அந்த நடுத்தர வயதைத் தாண்டி விட்ட பெண்மணி...

"இல்லடி... ஊர்க்கூட்டம் பேசிக்கிட்டு இருந்தப்போ... இவங்க இரண்டு பேரும் மழையிலயும்... வெள்ளத்திலயும் வழி தப்பி நம்ம ஊர்ப்பக்கம் வந்திட்டாங்க. இவங்க கதையைக் கேட்டத்தில் தாமதம் ஆகிருச்சு. இதுக்குப் போயி கோவிச்சுக்கறீயே..."

பாண்டுரங்கனின் சமாதானத்தைக் கவனிக்காமல் செந்திலையும்... ரேவதியையும் கூர்ந்து நோக்கினாள் லீலாவதி...

"இவங்க இரண்டு பேரும் யாரு...?"

"எல்லாத்தையும் வாசலில் நின்னுதான் பேசணுமா... வீட்டுக்குள்ளே போய்ப் பேசக் கூடாதா...?"

"ம்ம்... உள்ளே வாங்க..."

அவர்கள் வீட்டுக்குள் வந்ததும் கதவை அடைத்துவிட்டு அரிக்கேன் விளக்கின் திரியைத் தூண்டி விட்டால் லீலாவதி... பாண்டுரெங்கன் விளக்கமாகக் கூறியதை கன்னத் தில் கை வைத்துக் கேட்டுவிட்டு... இரக்கத்துடன் அவர்களை நோக்கினாள்...

"அடப்பாவமே... இப்படியும் கூட இந்தப் பக்கம் நடக்குமா? என்னமோ போ தாயி... இதெல்லாம் எதுக்கு ஆரம்பம்ன்னே தெரியலை... உள்ளே வாங்க... அம்மாடி ஊருக்குள்ள கரண்டு கம்பம் விழுந்து கிடக்கு... சீமத்தண்ணி விளக்கில்தான் வேலையைப் பார்க்கணும்... என் சேலையை மாத்திக்கிட்டு... தலைiய் துவட்டிக்கிட்டு... வா... என்னங்க...!"

"என்ன லீலா...?"

"மசமசன்னு நிற்காமல் உங்க வேட்டி சட்டையை எடுத்து அந்தத் தம்பி கிட்ட கொடுங்க... துண்டு ஒன்றையும் மறக்காமல் கொடுங்க..."

"அதுவும் சரிதான்..."

பாண்டுதரங்கன் தலையை ஆட்ட... செந்தில் ரேவதியைப் பார்த்து அர்த்தத்துடன் புன்னகைத்தான்... அவனுடைய புன்னகையின் பொருளை உணர்ந்து கொண்டு பதிலுக்குப் புன்னகைத்த ரேவதிக்கு... அந்த நிமிடம்... அவன் யாரோ... தான் யாரோ... என்பதும்... அவர்கள் இருந்த இக்கட்டான சூழ்நிலையும் மறந்து போய் விட்டது...

"இந்தாம்மா... மாடி ரூமுக்குப் போய்த் துணிகளை மாற்றிக் கொண்டு வா... ஏங்க... தம்பிக்கும்... இந்தப் பொண்ணுக்கும் மாடி ரூமைக் காட்டுங்க... நான் போய் இதுகளுக்குச் சாப்பிட ஏதாச்சும் செய்கிறேன்..."

லீலாவதி உத்தரவிட்டதும் பாண்டுரெங்கன் அதைச் சிரமேற் கொண்டவராய் மாடிப் படியில் ஏறினார்...

"வா..." செந்தில் அழைக்க... ரேவதி மிரண்டு போய் அவனைப் பார்த்தாள்...

செந்திலின் பார்வையில் இருந்த செய்தி புரிந்தவளாய்... ரேவதி தயங்கியவாறே... கால்கள் பின்ன அவனைப் பின் தொடர்ந்தாள்...

"இந்த ரூமில் தங்கிக்கங்கப்பா... எது வேணும்னாலும் கூச்சப்படாமல் கேளுங்க... இது உங்க வீடு மாதிரி... இப்பத் துணியை மாத்திக்கிட்டு... கீழே இறங்கி வாங்க..." பாண்டுரங்கன் சொல்லிவிட்டுப் போய் விட்டார்...

அறையினுள்... சின்னதாக ஒரு சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது... செந்தில் அறைக் கதவை அடைத்தான்... ரேவதி பயத்துடன் பின் வாங்கினாள்... அவளை அனுதாபத்துடன் பார்த்தான் அவன்...

"உன் பெயர் என்ன...?"

இதுதான் விதியின் விசித்திர விளையாட்டு... அன்று மதியமிருந்து... அந்த நிமிடம் வரை... அவளது கையைப் பிடித்துக் கொண்டு இடைவிடாமல் ஓடி வந்தவன்... இப்போதுதான் அவளிடம் அவளது பெயரைக் கேட்கிறான்.. அவள் இமைகள் படபடக்க மெல்லிய குரலில் பதில் கூறினாள்...

"ரேவதி..."

"ரேவதி...! ம்ம்ம்... என் பெயர் செந்தில்... இதோ பார் ரேவதி... தெரிந்தோ... தெரியாமலோ... நாமிருவரும் ஒரு கோட்டில் பயணப்பட்டுக் கொண்டிருக்கி றோம்... இப்போதைக்கு இந்த வீட்டில் நாம் இந்த இரவைக் கழிப்பது தான் நம் இருவருக்கும் பாதுகாப்பு... புரிந்ததா...? இவர்கள் நம்மைக் கணவன் - மனைவியென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்... இது இல்லையென்பதை அவர்களிடம் நாம் சொல்லிவிட முடியாது... நிறையக் கேள்விகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.. அது இப்போதைக்கு உனக்கு நல்லதல்ல..."

ரேவதிக்கு அவன் சொல்வது புரியத்தான் செய்தது... தீவிரவாதிகளில் ஒருவன் அவளைத் தகாத முறையில் நோக்கினான்... என்பதையும்... அவனிடமிருந்து காப்பாற்றி முன் பின் தெரியாத செந்தில் அவளை இழுத்துக் கொண்டு... அந்தக் கொட்டும் மழையல்... வெள்ளத்தில் நீந்தி... இருட்டில் அந்த ஊரில் கரை ஏறினான் என்பதையும் அந்த ஊர்க்காரர்கள் எவ்வளவு தூரத்திற்கு நம்புவார்கள் என்பது ஒரு புறமிருக்க... அவர்களை மரியாதையுடன் நோக்குவார்களா என்பதும் கேள்விக் குறியாகத்தான் இருந்திருக்கும்... இப்படி ஒரு கௌரவமான அடைக்கலம் அவர்கள் இருவருக்கும் கிடைத்திருக்காகது...

அவள் பெருமூச்சுடன்... எங்கே உடை மாற்றுவது என்ற யோசனையுடன்... அவனைப் பார்த்தாள்...

"நான் வெளியே வெயிட் பண்ணுகிறேன்... நீ முதலில் துணியை மாற்றிக் கொள்..." என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேறினான் செந்தில்...

அறைக் கதவை அடைத்து விட்டு... ரேவதி உடை மாற்றிக் கொண்டாள்... ஈர உடைகளை எடுத்துக் கொண்டு... அறைய விட்டு வெளியே வந்தாள்...

கைகளை முன்னுக்குக் கட்டியபடி... சுவரில் சாய்ந்து நின்றிருந்த செந்தில்... அவளைத் திரும்பிப் பார்த்தான்...

"அந்த ஓரமாய்க் கொடி கட்டியிருக்கிறாங்க... துணிகளைக் காயப் போட்டு விடு..." என்று கூறிவிட்டு... அறையில் இருந்த சிம்னி விளக்கை எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"உங்களுக்கு...?"

"செல்போனின் வெளிச்சம் போதும்..."

ரேவதி... விளக்கை வாங்கிக் கொண்டு துணிகளைக் காயப் போடப் போனாள்... செந்தில் அறைக்குள் சென்றான்...

ரேவதி துணிகளைக் காயப் போட்டு விட்டுத் திரும்பிய போது செந்தில் அவனுடைய ஈர உடைகளுடன் வந்தான்...

"இங்கே கொஞ்சம் வெளிச்சத்தைக் காட்டு..."

அவன் துணிகளைக் காயப் போட்டு முடித்ததும்... அவன் அவள் கையிலிருந்த விளக்கை வாங்கிக் கொண்டான்...

"கீழே போகலாம், வா..."

அறைக்குள் விளக்கை வைத்து விட்டு அவன் வரவும்... அவர்கள் இருவரும் படியில் இறங்கினார்கள். பாண்டுரங்கனின் தொளதொளவென்ற சட்டை வேட்டியிலும் அவன்... உயரமாய்... கம்பீரமாய் அழகுடன் இருப்பதை அவள் கவனித்தாள்....

அதே சமயம்... லீலாவதியின் தொளதொளவென்ற ஜாக்கெட்டில்... கண்டாங்கிச் சேலையில்... முடியை அவிழ்த்து விரிய விட்டிருந்தவளின்... மென்மையான அழகு அவனைத் தாக்கியது... அவளது கூந்தலின் நீளம்... இடுப்பைத் தாண்டி நீண்டு தொங்குவதை அப்போதுதான் அவன் கவனித்தான்...

'இவள் தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்...' என்ற எண்ணம் மட்டுமே... அப்போது அவனுள் எழுந்தது. வேறு விதமான கிளர்ச்சி தோன்றவில்லை...

அதே நிலைமையில்தான் ரேவதியும் இருந்தாள்...

'இவர் ஜென்டில் மேன் மட்டுமில்லை... ஹேண்ட்சம் மேனாகவும் இருக்கிறார்... இவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள்... கொடுத்து வைத்தவள்தான்...' என்றுதான் அவள் நினைத்தாள்... அந்தக் கொடுத்து வைத்த வளாகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு வரவில்லை....

இருவரின் எண்ணங்களும்... வேறு... வேறு... திசையில் இருந்தன... ரேவதி சுதாகரனை நினைத்துக் கொண்டிருந்தது போல்... செந்திலின் மனதிலும் கவிதா இருந்தாள்... ஆனால் இன்னாருக்கு இன்னார் என்று இறைவன் எழுதிய கணக்கு வேறாக இருந்தது...

# 6

"இன்னும் கொஞ்சம் போட்டுக்கப்பா..." என்று செந்திலின் தட்டில் சூடான சாதத்தைக் கொட்டினாள், லீலாவதி...

"போதும்மா... இதுவே அதிகம்..." என்றபடி... அவசரமாய் லீலாவதி வைத்திருந்த காரக் குழம்பில் சாதத்தைக் குழைத்துச் சாப்பிட ஆரம்பித்தான் செந்தில்...

"அவசரத்துக்கு ஒரு அடுப்பில சோற்றை வைத்து... இன்னொரு அடுப்பில் குழம்பைக் கூட்டினேன்... தொட்டுக் கொள்ள அப்பளம் மட்டும்தான்... வேறு செய்ய முடியலை..." ரேவதியின் தட்டில் சாதத்தை வைத்துக் குழம்பை ஊற்றிக் கொண்டே பேசினாள் லீலாவதி...

கூந்தலை விரிய விட்டு... ஜாக்கெட்... தொளதொளவென்று இருந்ததால்... சேலையின் தலைப்பைத் தோளோடு மூடிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ரேவதி தலை நிமிர்த்தி அமைதியாகப் புன்னகைத்தாள்...

"இந்த மழை நேரத்தில... சுடச்சுட இப்படிச் சாப்பாடு போடுகிறீங்களே... இதுவே பெரிய விசயம் அம்மா... நாங்க... மழைக்கு ஒதுங்க... ஒரு கூரை கிடைக்கு மான்னு தான் வந்தோம்.. நீங்க எங்களுக்கு வயிறாரச் சாப்பாடே போட்டு... வீட்டில் தங்க வைத்திருக்கீங்க... இதை நாங்க எதிர்பார்க்கவே இல்லை..."

பெண் குழந்தைகள் இல்லாத லீலாவதி... அவளின் தலையைப் பாசத்துடன் வருடி விட்டுப் புன்னகைத்தாள்...

"அம்மாடி... நீ வந்து என் கையில் ஒரு வாய்ச் சோறு சாப்பிட நான்தான் கொடுத்து வைத்திருக்கணும்... பொம்பளப் புள்ள வேணும்னு ஆசைப்பட்டேன்... கடவுள்... மூனு ஆம்பளைப் பசங்களைக் கொடுத்தார்... சரி... வருகின்ற மருமகள்களையாவது... மகளாய் நினைக்கலாமுன்னு நினைச்சேன்... ஆனால் மூணு பசங்களுக்கும் மூணு திசையில் வேலை கிடைச்சுப் போய் விட்டானுங்க... அவனுகளுக்கு வாய்ச்ச பொண்டாட்டிகளுக்கு... என்னைப்

பார்த்தால் தாயாய்த் தோணலை... மாமியாராத்தான் தோணுது... சரி... நமக்கு ஊர் இருக்கு... வீடு இருக்கு... நிலமிருக்கு... கட்டிக்கிட்ட மனுசனுக்கு ஊருக் காரியத்தனம் இருக்குன்னு ஒதுங்கி நின்னுட்டோம்... மகராசி நீ வந்து.. என் கையில் சாப்பிட்டு... என் மனக்குறையை நீக்கிட்ட..." லீலாவதி எழுந்து உள்ளே சென்றாள்...

இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா...' வியப்புடன் லீலாவதியையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரேவதி...

"போய்த் தூங்குங்க... கட்டில் இருக்கு... தலையணை இருக்கு... கம்பளிப் போர்வை இருக்கு... காலையில் விடிஞ்சதும்... கையில் காபித் தண்ணியோடு வந்து எழுப்பி விடுகிறேன்..."

லீலாவதி இலகுவாகச் சொல்ல... ரேவதியின் அடிவயிறு கலங்கியது... இதுவரை இதை நினைத்துக் கூடப் பார்க்காமல் நிம்மதியாய் இருந்தவளுக்கு இந்தப் பிரச்சனையை எப்படி எதிர் கொள்வது என்று கவலையாக இருந்தது...

"அம்மா... நான் உங்களுடன் படுத்துக் கொள்கிறேனே..." தயக்கத்துடன் கேட்டு விட்டாள்...

"அப்புறம்... இந்த இடி மின்னலில் தனியாப் படுத்துத் தூங்க உன் புருசன் பயப்பட மாட்டாரா...?" லீலாவதி கேலியாய்ச் சிரித்தாள்...

"அதெல்லாம் அவர் பயப்பட மாட்டார்ம்மா... ரேவதி அவசரமாய்க் கூறினாள்...

"உன் புருசன் பயப்பட மாட்டார்... ஆனால் என் புருசன் பயப்படுவாரே... அதனால்... மேலே போய்ச் சமர்த்தாய் இரண்டு பேரும் தூங்குங்க..."

லீலாவதி தள்ளி விடாத குறையாய்க் கூறிவிட... மனமே இல்லாமல்... கால்கள் நடுங்க... மாடியேறினாள் ரேவதி...

'என்ன மாதிரியான இரவு இது...! முன் பின் தெரியாத அந்நிய ஆணுடன் தனியறையில் ஓர் இரவு தங்கிவிட்டு

நாளைக்கு எதுவுமே நடக்கவில்லையென்று சொன்னால் யார்தான் நம்புவார்கள்...?'

கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது, ரேவதிக்கு... அவளது மனப் போராட்டத்தை அறிந்தவன் போல் செந்தில் அமைதியாக அறைக்குள் வந்து... கதவைச் சாத்தித் தாழ்போட்டான்...

ரேவதியின் உடல் பயத்தில் தூக்கிப் போட்டது...

"கதவைத் தாழ் போட வேண்டாமே..." நடுக்கத்துடன் கதவைத் திறக்கப் போனாள் அவள்...

"இந்த சில்லென்ற சிமிண்ட் தரையிலா... வேண்டாம்... ரிÞக் எடுக்காதே... பகல் பூராவும் என் பக்கத்திலேயே இருந்தாய்... இப்போது மட்டும் புதிதாய் என்ன வந்து விட்டது...? கட்டிலின் ஓரமாய்தான் நான் படுக்கப் போகிறேன்... இது பெரிய கட்டில் நிறைய இடம் இருக்கிறது... நீயும் படு..."

அவன் அவளிடம் கம்பளியைக் கொடுத்து விட்டு போர்வையைப் போர்த்துக் கொண்டு படுத்து விட்டான்... ஊடே ஒரு முறை அவன் கண் விழித்துப் பார்த்த போது... கம்பளியை போர்த்துக் கொண்டு கட்டிலின் ஓரமாகச் சுருண்டிருந்த ரேவதி... தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள்...

"தூங்கவில்லையா...?"

"தூக்கம் வரவில்லை..."

"கண்களை மூடு... தூக்கம் தானாய் வரும்..."

"முடியவில்லையே..."

"இப்படி டென்சன் ஆகாதேம்மா... விடிந்ததும்... உன் வீட்டில் கொண்டு போய்ப் பத்திரமாய் விட்டு விடுவேன். அதுவரை இப்படி உன் எனர்ஜியைக் குறைத்துக் கொள்ளாமல் இருக்கக் கூடாதா...?"

இரவு முடிந்து விடிந்து விடும்... ஆனால் இந்த ஓர் இரவுப் பொழுதில் வீட்டிலும் இல்லாமல்... ஹாÞடலிலும் இல்லாமல்

எவனோ ஒரு அறிமுகமில்லாத ஆணுடன் அறியாத கிராமத்தில்... முன் பின் பார்த்து பழகியிராத மனிதர்களின் வீட்டில் தனியறையில்... பூட்டிய கதவுகளுக்குப் பின்னே தனியாக இருந்தனதை வாழ் நாளில் எப்படி மறப்பது...? பெற்றோரிடமும்... சுதாகரிடமும் எப்படி மறைப்பது...?

அவளது கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது... ஏன் இப்படி ஆனது...? ஏன் இப்படி அழகாகப் பிறந்து தொலைத்தாள்...? அந்தத் தீவிரவாதியின் கண்ணில் ஏன் பட்டுத் தொலைத்தாள்...? அதனால்தானே இப்படியொரு இரவை அவள் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது...? பெண்ணாகப் பிறந்து விட்டால் இப்படி வேட்டையாடப் பட வேண்டுமா...?

'வேட்டையாடும் மானானேன்...

வித்தை காட்டும் பொருளானேன்...

காட்டில் வாழும் புலியாகாமல்

நாட்டில் வாழும் பெண்ணானேன்...

அன்னை பெற்றாள் பெண்ணென்று...

அதனால் தானே துயரின்று...'

மனதில் கவிஞர் கண்ணதாசனின் திரை இசைப்பாடலின் வரிகள் ஒலித்தன... அருகே கண் மூடிப்படுத்து நிம்மதியாகத் தூங்கும் செந்திலைப் பொறாமையுடன் பார்த்தாள்...

'என் மனதில் ஒருத்தி இருக்கிறாள்...'

சற்று முன் அவன் கூறிய வார்த்தைகள் காதுகளில் எதிரொலித்தன... அந்த மனதில் இருக்கும் ஒருத்தியிடம் இந்த மழை நாளின் இரவைப் பற்றி இவன் மறைக்காமல் சொல்லி விவரிக்க முடியும்... ஆனால் இவளால் அது போல் சுதாகரிடம் சொல்ல முடியுமா...? கற்பு என்பதை ஆண்... பெண் இருபாலருக்கும் பொதுவில் வைக்கச் சொன்ன அந்த ஆன்றோனின் வாக்கை எந்த ஆணும் பொருட் டாக

நினைக்காத போது... சுதாகரன் மட்டும் அதை நினைத்துப் பார்ப்பானா...?

இந்த மழை நாளின் இரவு இப்படி ஏன் நீண்டு கொண்டே போகிறது என்று அவள் தவித்துப் போனாள். விடியாதா என்று அவள் ஏங்கிய இரவு விடிந்ததற்கு அறிகுறியாக... எங்கோ சேவலொன்று கூவும் குரல் கேட்டது... ரேவதி புத்துணர்வுடன் நிமிர்ந்து அமர்ந்தாள்.

'சேவல்... கூவ... காலை விடிந்தது...' என்று பாடும் அளவிற்கு அவள் உற்சாகத்துடன்... கதவைத் திறந்தாள். எதிரே... ஆவி பறக்கும் காபித் தம்பளர்களோடு லீலாவதி நின்று கொண்டிருந்தாள்...

## 7

"என்னம்மா... நல்லாத் தூங்கினாயா..." என்ற படி சுவாதீனமாக அறைக்குள் வந்தாள் லீலாவதி...

'தூக்கமா... எப்படித் தூங்குவது...?' என்று மனதில் கேள்வி ஓட... லேசாகச் சிரித்தாள் ரேவதி...

"மழை வெறிச்சுருச்சு... இனி வெள்ளம் வடிய வேண்டும்... இது என்ன இந்தப் புள்ளை இப்படித் தூங்குது... எழுப்பி விடும்மா... சூடாய்க் காபித் தண்ணியைத் தொண்டையில் இறக்கட்டும்..." என்று லீலாவதி கூறவும்... ரேவதிக்குத் தூக்கி வாரிப் போட்டது...

'இவனைப் போய் எழுப்புவதா...? எப்படித் தொட்டு எழுப்புவது...?' அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போது...

'அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டுதானே... நேற்று மதியமிருந்து... இரவு வரை ஓடினாய்...' என்று அவளது மனச்சாட்சி பதிலுக்குக் கேள்வி கேட்டது...

அவள் தயக்கத்துடன் செந்திலைத் தொட்டு... லேசாக அசைத்து எழுப்பினாள்... அவன் புரண்டு படுத்துக் கண்

விழித்தான்...

"என்ன ரேவதி...?"

"விடிந்து விட்டது... நமக்காக அம்மா... காபி கொண்டு வந்திருக்காங்க..."

செந்தில் அவசரமாய் எழுந்து அமர்ந்தான்... லீலாவதி அவனிடம் ஒரு காபித் தம்பளரை நீட்டினாள்...

"ஏன்ம்மா நீங்க சிரமப்படுகிறீங்க. கூப்பிட்டால் நாங்க கீழே வர மாட்டோமா...?" என்றபடி அவன் கை நீட்டிக் காபித் தம்பளரை வாங்கிக் கொண்டான்...

"கூப்பிடுவதற்கு மாடிக்கு வரத்தானே வேணும்? அதுக்கு கையோடு காபித் தம்பளர்களைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டால்... அது ஒரு சோலி முடியுமில்ல...?" என்று செந்திலுக்குப் பதில் கூறியபடி...

"நீயும் காபியைக் குடிம்மா... உன் புருசன் குடிச்சால் நீ குடிச்சது போல ஆகி விடுமா...?" என்று ரேவதியை வேறு அதட்டி வைத்தாள்...

'என் புருசனா...?' என்று கேட்கப் போன ரேவதி... அவசரமாய் வாயை இறுக மூடிக் கொண்டு... காபி குடிப்பது போல் தலையைத் திருப்பிக் கொண்டாள்...

லீலாவதி எழுந்து சென்று... மழைக்காலக் குளிருக்காக இறுக மூடியிருந்த ஜன்னல் கதவுகளைத் திறந்தாள்... காலை வெயில் அறைக்குள் கீற்றாய்ப் படிந்தது...

"ம்ம்... இந்த வெயில் வரணுமின்னு இரண்டு நாளாய் வேண்டாத தெய்வ மில்லை... மக்கள் மனசு... மாடு கன்றுக் குட்டின்னு ஆடிப் போயிட்டமில்ல... ஆத்தங்கரையோரம் ஊரிருப்பது உயிரைக் கையில் பிடிச்சுக்கிட்டு பொழப்பை ஓட்ட வேண்டியிருக்கு... எங்க பொழப்பு பத்தி மத்த ஊர்க்காரங்களுக்கு என்ன தெரியும்... உங்களுக்கென்னப்பா... ஆத்துப் பாசனம்... அள்ளிக் கொடுக்கிற பூமின்னு கண்ணை மட்டும் வைக்கிறாங்க...

மனுசக் கழுத படும்பாடு மத்தக் கழுதைகளுக்குத் தெரியுதா...?"

லீலாவதி அங்கலாய்த்துக் கொள்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ரேவதி... செந்திலைக் கவலையுடன் பார்த்தாள்... அவனோ... லீலாவதி சொன்னதை யோசனையுடன் கேட்டவாறு பதில் கூறிக் கொண்டிருந்தான்...

"இதுக்கு என்னதான்ம்மா வழி...?"

"வேறென்ன வழி... கவர்ன்மென்ட் பாத்து ஏதாவது செய்யணும்.... ஆத்திலே தண்ணி வந்தால்... ஊருக்குள் வராமலிருக்க கரையைப் பலப்படுத்தணும்... அது எங்கே இங்கே நடக்குது...? ஆத்தில் இருக்கிற மணலை அள்ளிக்கிட்டுப் போகத்தானே ஜனக்காடு ஆலாய்ப் பறக்குது...

அவர்கள் இருவரும் மிகவும் தீவிரமாய் மணல் கொள்ளையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட... ரேவதி... இருப்புக் கொள்ளாமல் தவித்தாள்... ஒரு வழியாய்த் தன் ஆவேசத்தைப் பேசித் தீர்த்த லீலாவதி எழுந்து கொண்டாள்...

"உங்க துணிகளையெல்லாம்... மொட்டை மாடியில் கட்டியிருக்கிற கொடியில் போய்ப் போடு, கண்ணு... வெயிலில் ஐந்தே நிமிசத்தில் காய்ந்து விடும்...

ஆமாம்... மாற்றுத் துணியெல்லாம் எங்கே... கொண்டு வரலையா...?"

"அம்மா... அது வந்து... அந்த தீவிரவாதிகிட்டயிருந்து தப்பி ஓடி வரும் போது... பெட்டியை எடுத்துக்கணும்கிற நினைவே இல்லையம்மா... உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பி ஓடணும்கிற நினைப்பு மட்டும்தான் இருந்தது..."

"அது சரி... பெட்டியைத் தூக்கிட்டு... அது ஒரு சுமைகடனா சுமந்துக்கிட்டு.. மழையிலயும்.. வெள்ளத்திலயும் ஓடி வர முடியாதுதான்... விட்டுத்தள்ளு... இப்ப வெந்நித்

தண்ணியைப் போடுகிறேன்... குளிச்சுட்டு என் துணிகளையே மாத்திக்க..."

"இல்லையம்மா... என் டிரஸ் அதுக்குள்ள காய்ந்து விடும்..."

"ஏம்மா... வெள்ளம் வடிந்த பின்தான் நீ போக முடியும்... அது வரைக்கும் ஏன்... நீ உன் துணியை போட்டுக்கிட்டு... மாற்றுத் துணியில்லாம அவஸ்தைப் படணும்... என்ன... என் ரவிக்கை தான் கொஞ்சம் தொள தொளன்னு இருக்கும்..."

'கொஞ்சமா அது தொளதொளவென்று இருக்கிறது...?' என்ற யோசனையுடன் செந்திலைப் பார்த்தாள் ரேவதி... அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது...

"ஏன்ப்பா... சிரிப்பு வந்தால் வாய் விட்டுச் சிரி... ஐந்தறிவு உள்ள ஜீவன்களுக்கும்... ஆறறிவு படைச்ச மனுசன்களுக்கும் இருக்கிற ஒரே வித்தியாசம் இந்தச் சிரிப்புத்தான்... அதுகளுக்குச் சிரிக்கத் தெரியாது... நமக்குச் சிரிக்கத் தெரியும்.. அதைப் போய் மறைச்சு வைப்பானேன்... அம்மாடி... என் புருசனுக்கு என் மேல் பாசம் அதிகம்... சோற்றைப் போட்டுத் திணிப்பாரு... வஞ்சனையில்லாத ஜென்மமாய் வேற போய் விட்டேன்.. அதுதான் சிற்றானைக் குட்டி போல பெருத்துப் போய் விட்டேன்... நீ

கவலையே படாதே... ஊசி நூலிருக்கு... ஐந்தே நிமிசத்தில் கைத்தையல் போட்டு... உனக்கு ரவிக்கையைப் பிடித்துத் தைத்துக் கொடுக்கிறேன்... இன்றைக்கு ஒரு நாள் பொழுதுதானே... சமாளிச்சுக்கோ..."

'இன்றைக்கும்... ஒரு நாள் பொழுதா...' திகிலடைந்து போனாள் ரேவதி...

அவள் செந்திலைப் பார்க்க... அவனோ அவளுடைய பார்வையைத் தவிர்த்தான்... அவர்களது மனப் போராட்டத்தை அறியாத லீலாவதி...

"ஏம்மா... உன் பெயர் என்ன?" என்று கேட்டாள்...

"ரேவதிம்மா..."

"நல்ல பெயர்... உன் புருசன் பெயர் என்ன...?"

'இவர் என் புருசனில்லை...' என்று மனம் கூவத் தன் வாயால்... செந்திலின் பெயரைச் சொல்ல விரும்பாதவளாய் அவன் முகம் பார்த்தாள் ரேவதி... அவன் அவளை முந்திக் கொண்டு பதில் சொன்னான்..."

"செந்தில்லம்மா..."

"நல்ல பெயர்... நல்லாயிருக்கு..."

லீலாவதி ஒரு வழியாய் அறையை விட்டு வெளியேற... ரேவதி செந்திலிடம் முறையிட்டாள்...

"என்ன இது...? இந்தம்மா, இப்படிச் சொல்கிறாங்க... மழைதான் விட்டு விட்டதே... விடிந்தும் விட்டது... இனி நாம் போக என்ன தடை...?"

"வெள்ளம் வடிய வேண்டாமா ரேவதி..."

"கழுத்துவரை இருந்த தண்ணீரில் நேற்று நாம் வரவில்லையா...?"

"நேற்றுக் கதை வேறு... இன்றைய கதை வேறு..."

"எந்தக் கதை எப்படியிருந்தால் என்ன...? என் கதை இப்படி ஆகிவிட்டதே?"

"புலம்பாதே..."

"நான் பேசுவது உங்களுக்குப் புலம்பலாய்த் தெரிகிறதா...?"

"நான் உன்னைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இதைச் சொல்லவில்லை, ரேவதி... பிரச்சனை வந்தால் எதிர் கொள்ள வேண்டும்... புலம்பக் கூடாது... புலம்பி ஒன்றும் ஆகப் போவதில்லை..."

"நீங்க ஆண்பிள்ளை... உங்களுக்கு என் நிலைமை புரியாது..."

"ஏன் புரியாது...? பஃஸில் இருந்த என்னை விட்டு விட்டு உன் கையை மட்டும் அந்தத் தீவிரவாதி பிடித்தது ஏன்...? எனக்குப் பெண்களின் நிலைமை நன்றாகப் புரியும்..."

செந்தில் எரிச்சலுடன் அறையை விட்டு வெளியேறினான்... அவனது கோபம் ரேவதிக்குப் புரிந்தது... அவன் மட்டும் தன்னைப் பார்த்துக் கொண்டால் போதும் என்று அவளைப் பற்றிக் கவலைப்படாமல் ஓடியிருந்தால் இந்நேரம் அவனுடைய வீட்டில்

நிம்மதியாக இருந்திருப்பான்... ரேவதியின் கதைதான் சின்னாபின்னமாக ஆகியிருக்கும்... சிக்கிச் சிதைந்திருப்பாள்...

அந்த பÞஸில் செந்தில் மட்டுமா இருந்தான்...? எத்தனையோ ஆண்கள் இருந்தார்கள்... எல்லோரின் கண்களுக்கும் ரேவதியை அந்த தீவிரவாதி பிடித்தது தெரிந்திருக்கும்... எல்லோரின் காதுகளிலும்... ரேவதியின் அலறல் ஒலி விழுந்திருக்கும்...

ஆனால்... எத்தனை பேரும் அவளைப் பற்றி கவலைப் படாமல் தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பி ஓடினார்கள்... செந்தில் மட்டுமே நின்று திரும்பிப் பார்த்தான்... தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல்... நிராயுதபாணி யாய்... துப்பாக்கியுடன் நின்றிருந்தவனின் மேல் பாய்ந்தான்... அவன் மட்டும் தன் உயிரைத் துச்சமாக நினைத்து அவளைக் காப்பாற்ற போராடாமல் இருந்திருந் தால்... இந்நேரம் ரேவதி என்ன கதியாகப் போயிருப்பாள்...? அந்த நிலையை விட... கண்ணியமான... காப்பாற்றியவனுடன் உடன் இருக்கும் இந்த நிலைமை எந்த விதத்தில் அவளுக்குத் தாழ்வைத் தந்து விட முடியும்...?

ரேவதி அலை பாயும் மனதை... ஓர் நிலைக்கு கொண்டு வந்தவளாய் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கண்களின் கண்ணீரைத் துடித்துக் கொண்டு.... அறையை விட்டு வெளியே வந்து... முன் ஹாலில் இருந்த கொடியினில் இருந்த துணிகளை எடுக்கப் போனாள்... அவைகளைக் காணவில்லை... அவளுடைய உள்ளாடைகள் மட்டுமே இருந்தன... மாடிப் படியில் காலடியோசை கேட்கத் திரும்பிப் பார்த்தாள்... செந்தில் இறங்கி வந்து கொண்டிருந்தான்...

"துணிகளைக் காணோமே..."

"நான் எடுத்துக் கொண்டு போய்க் காய வைத்து விட்டு வந்தேன்..."

"என் துணிகளையுமா எடுத்துக் கொண்டு போனீங்க...?"

"எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போகவில்லையே..."

செந்தில் கூறியது புரிந்தவளாய் உதட்டைக் கடித்துக் கொண்டாள்....

"இருந்தாலும்..."

"என்னை உன் நண்பனாக நினைத்துக் கொள்... இதெல்லாம் இயல்பான விசயங்களாய் உனக்குத் தோன்றும்... என் துணிகளை மட்டும் எடுத்துப் போக என்னால் முடியவில்லை... உன்னுடையதையும் எடுத்துக் கொண்டு போனேன்... இதில் பெரிதாக நினைக்க ஒன்றுமேயில்லை... கீழே வா..."

அவன் படியிறங்கிப் போய் விட்டான்... அவள் அசையாமல் நின்றாள்...

8

'ஒன்றுமேயில்லையா...? ஒரு பெண்ணின் துணிகளை எடுத்துக் காயப் போட்டு விட்டு வருவது ஒன்றுமேயிலலாத விசயமா...? யார் இவன்...? எங்கிருந்து வந்தான்...? எனக்கும்... இவனுக்கும் இடையே இருக்கும் பந்தம்தான் என்ன...? சொந்தம்தான் என்ன...? என் பார்வையைத் தாங்கிக் கொண்டு... பதட்டம் கொள்ளாமல் விளக்கம் கொடுத்து... எனக்குப் பாதுகாப்பாய் உடன் நிற்கிறானே... இவனுடைய அறிமுகத்தைப் பெற... நான் என்ன தவம் செய்தேன்...?'

ரேவதி... தன் உள்ளாடைகளுடன் மொட்டை மாடிக்குச் செல்லப் படியேறி னாள்... மிக நேர்த்தியாகக் காய வைக்கப்பட்டிருந்த ஆடைகளைப் பார்த்தபடி... உள்ளாடைகளைக் காயப் போட்டாள்... இதமான காளை இளம் வெயிலில் நிற்பது சுகமாக இருக்க... முதல் நாளின் ஈரப்பசை உலரட்டும் என்ற உணர்வுடன் அந்த வெயிலின்

வெம்மையை அனுபவித்தாள்... மொட்டை மாடியின் கைப்படிச் சுவரோரமாக நின்று பார்த்தாள்... ஊரைச் சுற்றித் தண்ணீர்க் காடாக இருந்தது....

'வெள்ளம் வடிய வேண்டுமே...'

மறந்திருந்த கவலை மனதில் புகுந்து கொள்ளச் சோர்வுடன் மாடிப் படியில் இறங்கினாள்... மாடிப் படிகள் முடிந்த வராண்டாவில் ஊர்க்காரர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பாண்டுரங்கன் திரும்பிப் பார்த்தார்... செந்தில் அவரருகில் நின்று கொண்டிருந்தான்...

"வாம்மா... ராத்திரி நன்றாகத் தூங்கினாயா...?" பரிவுடன் பாண்டுரங்கன் விசாரிக்க... தூங்காமல் சிவந்திருந்த அவளுடைய விழிகளைச் செந்தில் பார்த்தான்.

ரேவதி பதில் பேசாமல் தயங்கி நின்றாள்...

"உள்ளே போம்மா..." என்று கூறிவிட்டுப் பாண்டுரங்கன் பேச்சைத் தொடர்ந்தார்....

'உள்ளே போய் என்ன செய்வது?' என்ற யோசனையுடன் செந்திலைப் பார்த்தாள் ரேவதி...

அவளது பார்வையின் பொருள் புரிந்தவனாக...

"சார்... நாங்கள் கிளம்ப வேண்டுமே..." என்று மரியாதையுடன் கூறினான் செந்தில்...

"எங்க கிளம்பப் போகிறீங்க..."

"வேறு எங்கே சார்... ஊருக்குத்தான்..."

"எப்படிப்பா போவீங்க... ஊரைச் சுத்தி வெள்ளம் வளைச்சிருக்கு... தண்ணீர் வடியட்டும். போகலாம்..."

"அது சாயந்திரத்துக்குள் வந்து விடுமா...?"

"இது என்னப்பா... சின்னப் புள்ளத் தனமா கேள்வி கேட்கிறே... அது என்ன ஒரு நாளில் வடிந்து விடுமா...?"

"நாங்க... தண்ணிக்குள் இறங்கி நடக்கத் தயார் சார்...."

"ஆனா... அனுப்ப நாங்க தயாரில்லையே..."

"இப்படிச் சொன்னால் எப்படிங்க...?"

"வேறு எப்படிச் சொல்லச் சொல்கிற...? நேற்று ராத்திரி நீ வரும் போதே கழுத்தளவு தண்ணீர் இருந்துச்சு... இப்ப விடிய விடியப் பெய்த மழையில்... நீர் மட்டம் உயர்ந்திருக்கு..."

"சாயந்திரத்துக்குள்ள உயர்ந்த நீர் மட்டம் வடிந்து விடாதா...?"

"நீ நேற்றைக்குத் தண்ணீருக்குள் மூழ்காமல் நடந்து வந்து விட்ட தைரியத்தில் பேசுகிறாய்... கடவுள்தான் உங்கள் ரெண்டு பேத்தையும் காப்பாற்றினார்... எந்த இடத்தில் மேடு... எந்த இடத்தில் ஆழம்...ன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்... இடுப்பளவு தண்ணிதான்னு நினைச்சு நீங்க போகப் போயி... ஆழத்தில் முங்கி விட்டால் யார் வந்து காப்பாத்துவாங்க....?"

"எனக்கு நீச்சல் தெரியும், சார்..."

"உன் பெண்டாட்டிக்குத் தெரியுமா...?"

பாண்டுரங்கன் வினவி வைக்க... செந்தில் இயலாமையுடன் ரேவதியைப் பார்த்தான்...

'கடவுளே... திரும்பத் திரும்ப... இவனின் பெண்டாட்டின்னு எனக்குப் பெயர் கட்டுகிறாரே...' ரேவதிக்கு அழ வேண்டும் போல் இருந்தது... செந்தில் பாண்டுரங் கனைக் கோரிக்கையுடன் பார்த்தான்... அவர் அதற்கு... 'நான் அசைவேனா...' என்பது போல் ஓர் பார்வை பார்த்தார்...

"சொல்லுப்பா... ஏன் இடிச்ச புளிபோல் உட்கார்ந்திருக்க... உன் பெண்டாட்டிக்கு நீச்சல் தெரியுமா...?"

"தெரியாது. சார்..."

"அப்புறம்... எப்படி இந்த வெள்ளைத்தைக் கடந்து போவேன்னு தைரியமாய்ச் சொல்கிற...?"

"தண்ணீர் வடிய எத்தனை மணி நேரமாகும்...?"

"எத்தனை நாளாகும்ன்னு கேளு..."

'ஐயோ...' ரேவதி திகிலுடன் கூப் போனாள். செந்தில் அவளை விழிகளால் எச்சரித்தான்....

"சார்... அதுவரை நாங்கள்..."

"எங்கள் வீட்டிலேயே விருந்தாளியாக இருக்கலாம். பாருப்பா... என் பெண்சாதிக்கு உன் பெண்டாட்டியை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது... பெத்த மகள் போல் சீராட்டணும்னு ஆசைப்படறா... நீயும் மாமனார் வீட்டில் மறுவீட்டு விருந்து சாப்பிடுவதாய் நினைத்துக் கொண்டு சீராட வேண்டியதுதானே..."

'உங்களுக்கென்ன எளிதாகச் சொல்லி விடுவீங்க... இங்கே நானில்ல... உங்ககிட்டயும்... இவள் கிட்டயும் மாட்டிக் கிட்டு முழிக்கறேன்... உண்மையிலேயே இவள் என் பெண்டாட்டியாக இருந்தால் குஷாலாக... மறுவீட்டு விருந்தைக் கொண்டாடலாம்... பாவம்... இவள் யார் பெற்ற பெண்ணோ... இவள் மானத்தைக் காப்பாற்றிக் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்... வந்த இடத்தில் இப்படி மாட்டிக் கொண்டு விழிக்கிறோம்... இதில் வார்த்தைக்கு வார்த்தை நீர் வேறு பெண்டாட்டின்னு இவளைப் பட்டம் கட்டி விடுகிறீர்.... இவள் என்னவென்றால் உம்மை விட்டு விட்டு என்னை முறைக்கிறாள்... இது தேவைதானா எனக்கு...?'

செந்தில் பரிதாபமாய் ரேவதியை ஓர் பார்வை பார்க்க... அவள் எரிப்பது போல் பதில் பார்வை பார்த்து விட்டு உள்ளே சென்றாள்.

"வாம்மா.... வா... வெந்நித் தண்ணி போட்டிருக்கிறேன்... பின் பக்கம் பாத்ரூம் இருக்கு... என்னடா... பட்டிக்காட்டில் பாத்ரூமான்னு பார்க்காதே... என் புள்ளைகள் டெல்லி... பம்பாய் ... சென்னையின்னு செட்டிலாயிட்டவங்க... வருசத்துக்கு ஒரு தரம் ஆத்தாவின் நினைப்பு வந்தால்... பார்க்க வருவானுங்க... அவனுங்களுக் காகக் கட்டி வைச்சது... போ.... போய்க் குளித்து விட்டு வேறு துணி மாத்திக்கிட்டு வா... நாலைந்து ரவிக்கைத் துணியைப் பிடித்துத் தைத்து வைத்திருக்கிறேன்..."

மாற்றுடையை வாங்கிக் கொண்டு... ரேவதி குளியலறையை நோக்கிப் போனாள்... அவள் குளித்து உடை மாற்றி விட்டு வந்த போது... லீலாவதி... சமையறைக்குள் இருந்தபடியே குரல் கொடுத்தாள்...

"அம்மாடி... அப்படியே... உன் புருசனையும் குளிக்க வை..."

'என்னது... நான் அவனைக் குளிக் வைப்பதா...' ரேவதியால் பேசக்கூட முடியவில்லை... தலையைச் சுவரில் 'மடார்... மடார்' என்று மோதிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது...

"என்னம்மா... என்ன... இன்னும் இங்கே நிற்கறே... காலைப் பலகாரம் சாப்பிட வேணாமா..." லீலாவதியின் குரல் அவளை உந்தித் தள்ள... வாசல் பக்கம் சென்றாள்.

செந்தில்... பாண்டுரங்கனின் அருகே அமர்ந்து கன்னத்தில் கை வைத்து அவர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தான்...

எப்படி அவனை அழைப்பது என்று தெரியாமல் விழித்த ரேவதி...

"Þ... Þ... Þ..." என்றாள்...

செந்தில் சட்டென்று திரும்பிப் பார்த்தான்... அவளது விழிகளில் தெரிந்த அழைப்பைக் கண்டதும் எழுந்து அவளருகில் வந்தான்...

"என்ன..."

"அவங்க குளிக்கக் கூப்பிடுகிறாங்க..."

"அப்படியா... இதோ வருகிறேன்..."

செந்தில் தாழ்ந்த குரலில் அவளுடன் பேசிக் கொண்டே அவளைத் தொடர்ந்து சென்றான்... இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டுரங்கன்... பக்கத்தில் இருந்தவரிடம்...

"புருசன்... பெண்டாட்டின்னா... இதுகள் போல் ஒற்றுமையாய் இருக்கணும்... நேத்து ராத்திரியிலிருந்து நானும் பார்க்கிறேன்... புருசன்காரன் பேசினால்...

பெண்டாட்டி ஊடே எதுவும் பேசுவதில்லை... பெண்டாட்டியிடம் ஜாடையாய்ச் சம்மதம் வாங்காமல் புருசன்காரன் எதையும் ஒப்புக் கொள்வதில்லை... இப்பப் பாரேன்... அந்தக் காலத்தில்... புருசன்காரனைக் கூப்பிட... பெண்டாட்டி மெட்டியை லேசாகத் தலையில் தட்டுவாளாம்... அந்தச் சத்தத்தில் அவன் எழுந்து உள்ளே போவானாம்... இந்தப் பெண் ஏதோ... 'இÞஸு ... இÞஸு'னுது... இந்தப் பயல் உடனே எழுந்திருச்சு அதுகிட்டப் போய் ரகசியம் பேசறான்... பார்க்கவே எவ்வளவு நல்லாயிருக்குது பார்த்தீயா, சண்முகம்... வாழ்ந்தால் இதுகளைப் போல வாழணும்... என்ன நான் சொல்றது...?" என்று சிலாகித்துப் பேசினார்...

"நீங்க சொல்வதும் நிஜம்தானுங்க. ஐயா..." என்று சண்முகம் ஜால்ரா போட்டார்...

செந்திலுடன் ரேவதி உள்ளே சென்றதும்... பின் பக்கம் இருந்த குளியலறையைக் காட்டி விட்டு... லீலாவதியிடம் சென்று விட்டாள்...

"எங்கேம்மா உன் புருசன்...?" லீலாவதி வினவினாள்...

"குளிக்கப் போயிருக்கிறார்..." ரேவதி பதில் சொன்னாள்...

"துண்டும்... மாற்றிக்கத் துணியும் கொண்டு போய்க் குடுத்தாயா...?" என்று லீலாவதி கேட்கவும்... ரேவதி திருதிருவென்று விழித்தாள்...

"என்ன முழிக்கறே... என்னடா... மாற்றுத்துணி இல்லையேன்னு யோசிக்கிறயா...? அதெல்லாம் காலையிலேயே என் புருசனின் அலமாரியிலிருந்து எடுத்து வைத்து விட்டேன்... இந்தா... கொண்டு போய்க் கொடு..."

லீலாவதி கொடுத்தவற்றை வாங்கிக் கொண்ட ரேவதி பின் பக்கம் போகாமல் தயங்கி நின்றாள்...

"என்னம்மா... இன்னும் இங்கேயே நிற்கிற... போ... போய்க் கொடு..."

அவளின் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் லீலாவதி அதட்டவும்... கால்கள் பின்ன... குளியலறைப்

பக்கம் போனாள் ரேவதி...

கதவு மூடியிருப்பதைப் பார்த்ததும்... அப்படியே திரும்பி விடலாம் என்ற யோசனையுடன் திரும்பப் போனவள்... லீலாவதி பின் பக்கம் ஏதோ வேலையாக வருவதைக் கண்டதும் அவசரமாய்க் குளியலறையின் கதவைத் தட்டினாள்...

"யார்...?" என்று குரல் கொடுத்தான் செந்தில்...

"நான்தான் ரேவதி..." நடுக்கத்துடன் பதில் சொன்னாள் அவள்...

பட்டென்று குளியலறைக் கதவு திறந்தது... வெற்று மார்புடன்... வேட்டியை மடித்துக் கட்டியதால் தெரிந்த திடமான கால்களுடன் அவன் வெளிப்பட்டான்...

அந்தக் கோலத்தில் அவனைக் கண்டதும்... ரேவதி நடுக்கத்துடன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்...

9

"என்ன ரேவதி...?"

அவளின் தாழ்ந்த விழிகளைக் கண்டு அவளது சங்கடத்தை யூகித்து விட்ட செந்தில் மென்மையாக வினவினான்....

"உங்களுக்கு மாற்று டிரெÞஸும்... டவலும் கொண்டு வந்தேன்..."

அவள் நடுங்கிய குரலில் கூறியவாறு அவற்றை அவனிடம் நீட்டினாள்... மறந்தும் விழிகளை உயர்த்த வில்லை...

"தேங்க்Þ..." என்றவாறு அவற்றை அவன் வாங்கிக் கொண்டதும்.. அவசரமாய் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டாள் அவள்...

செந்திலுக்கு ஏனோ... மனதுக்குள் உல்லாசம் தோன்றியது...

'இது என்ன புது வகையான அனுபவம்...' என்று தோளைக் குலுக்கிக் கொண்டவனாகக் குளியலறைக்குள் புகுந்தான்...

அவன் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்த பின்னால் பாண்டுரங் கனுடன்... அவர்கள் இருவரையும் அமர வைத்துப் பரிமாறினாள் லீலாவதி... வேலைக்காரப் பெண்மணி எடுத்து வந்து கொடுத்த பாத்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டே தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள் அவள்...

"காலங்கார்த்தாலே என்ன பலகாரம் செய்யறதுன்னு யோசிச்சப்போ... இடியாப்பம்தான் மனசுக்குள்ள வந்துச்சு... உடனே செஞ்சுப்புட்டேன்... கூடவே குழிப் பணியாரமும் இருக்கு... தொட்டுக்க தேங்காய்ப் பாலும்... குருமாவும்... போதுமா தம்பி..."

"இது என்னம்மா... என்னைப் போய் கேட்கறீங்க... இதுவே அதிகம்..."

"அப்படியில்லைப்பா... உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பையன் போலத் தெரியுது... உன் பெண்டாட்டி முகத்திலும் பெரிய வீட்டுப் பெண்ணுன்னு எழுதி ஒட்டியிருக்கு... நாளப்பின்ன நீங்க இரண்டு பேரும் உங்க ஊருக்குப் போன பின்னால்... இந்த ஊருக்கு வந்து... இந்த வீட்டில் தங்கியிருந்ததை நினைச்சுப் பார்த்துப் பேச மாட்டிங்களா... அப்போ... அந்த வீட்டில் ஒரு குறையும் இல்லாம நமக்கு விருந்து ஆக்கிப் போட்டாங்கன்னு நீங்க நினைக்கணுமா... இல்லையா...?"

லீலாவதி பேசிக் கொண்டே செந்திலின் தட்டில் இடியாப்பத்தை வைத்து... தேங்காய்ப் பாலை ஊற்றினாள்...

"போதும்மா..."

"என்னப்பா நீ இப்படிச் சாப்பிடுகிற... உன் பெண்டாட்டி உனக்கும் மேல இருக்குது... ஒரு வாய் சாப்பிடக் கூலி

கேட்கிற பிள்ளையாய் இருக்கு... அதனால்தான் உடம்பு இப்படி ஒல்லிக் குச்சியாய் இருக்கிறது போல...

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும்... வேலை செய்யும் பெண்மணியிடம் மதிய உணவுக்கான ஆயத்தங்களைச் செய்யச் சொல்லி விட்டு முன்னறைக்கு வந்தாள் லீலாவதி...

முதல் நாள் நனைந்திருந்த தலை காயட்டும் என்று விரித்து விட்டிருந்த கூந்தலைப் பின்னாமல் அப்படியே கொண்டையாகச் செருகியிருந்தாள் ரேவதி... அது அவிழ்ந்து அவளுடைய கூந்தல் தரையில் புரண்டது...

"ஆத்தி... எம்புட்டு நீள முடி... என் ஆயுசில இப்படி ஒரு நீளமான கூந்தலை நான் பார்த்ததே இல்லை... ஐயா செந்திலு... உன் பெண்டாட்டி முக லட்சணமான பொண்ணா வந்து வாய்ச்சிருக்காங்கிறதுக்கும் மேல... இப்படி... நம்ம சீமையிலேயே இல்லாத நீளமான முடியோட இருக்கிறா பாரு... அதுக்காக நீ... உன் சொத்தை அவளுக்கு எழுதி வைக்கலாம்..."

லீலாவதி கூறியதைக் கேட்ட செந்தில்... அப்போது தான் முதன் முறையாக ரேவதியின் கூந்தலைக் கவனித்தான்... அவனது பார்வையைக் கண்ட ரேவதியின் முகம் சிவந்து விட்டது...

'இவங்கதான் தெரியாத்தனமாய் ஏதோ சொன்னாங்கன்னா இவனும் இப்படிப் பார்த்துத் தொலைக்க வேண்டுமா...'

அவளது முகச் சிவப்பைக் கண்ட செந்திலின் உதடுகளில் சிறு புன்னகை அரும்பியது... அதற்குள் லீலாவதி எண்ணெய்ப் புட்டியும்... சீப்புமாக முன்னறையின் தரையில் அமர்ந்தாள்...

"இப்படி வாம்மா... தலைக்கு எண்ணெய் வைத்து... தலை வாரிப் பின்னி விடுகிறேன்..."

"அதை நான் செய்து கொள்வேன்ம்மா..."

"ஏம்மா... நீ இங்கிருக்கிறவரை... அதை நான் செய்தால் உனக்கு ஆகாதா...?"

ரேவதி தயக்கத்துடன் லீலாவதியின் முன்னால் அமர... அவள் ரேவதியின் கூந்தலில் எண்ணெய் தடவி... வாரிப் பின்னலிட்டாள்... பின்னலின் முனையை ரப்பர் பேண்டில் அடக்கிவிட்டு... ரேவதியைக் கன்னம் விழித்து... திருஷ்டி கழித்த போது... அவளின் கழுத்தைக் கவனித்து விட்டாள் லீலாவதி...

"என்னம்மா... இது...?" என்று அவள் பதட்டமாய் கேட்க...

"எதும்மா...?" என்று புரியாமல் வினவினாள் ரேவதி...

"உன் கழுத்தில் இருந்த தாலி எங்கே...?" என்று லீலாவதி கேட்கவும்...

'தாலியா... அது எப்போது என் கழுத்தில் ஏறியது... எனக்குத்தான் இன்னும் கல்யாணமே ஆகவில்லையே... என்று நொந்து போனாள் ரேவதி...

செந்திலின் முகத்தை ரேவதி பார்க்க... ரேவதியின் தவிப்பைப் பார்த்து... செந்தில் கண நேரத்தில் கை கொடுத்தான்...

"அடக்கடவுளே... நேற்று பÞஸில் இருந்து குதித்து ஓடி வந்த போது... மிÞ ஆகிவிட்டதோ... இல்லை... தண்ணீருக்குள்... நாலைந்து முறை மூழ்கி... நான் உன் தலைமுடியைப் பிடித்து இழுத்தேனே... அப்போதுதான் காணாமல் போய் விட்டதோ... இல்லை, அந்தச் சரிவில் கால் தடுக்கி... நீ உருண்டு புரண்டு எழுந்தாயே... அங்கு தான் கழன்று விழுந்து விட்டதோ... இல்லை...' என்று அடுக்கிக் கொண்டே போனான்...

"அடக்கடவுளே... இந்தப் பெண்ணுக்கே இது தெரியலையா...? பாவம்... பிஞ்சு மனசு... இதைத் தாங்காமல் எப்படி வேதனைப்படுது... இதுவும் ஒரு காலக் கொடுமையா...? இப்படி எங்காச்சும் நடக்குமா...? நீ கவலைப் படாதேம்மா... கடவுள் மேல் பாரத்தைப் போடு... எல்லாம் நல்லபடியாகத்தான் நடக்கும்..."

ரேவதி உதட்டைக் கடித்துத் தன் உயர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டி ருக்கையில்... லீலாவதி பதட்டத்துடன் தன் கணவனைத் தேடிப் போனாள்...

"என்னங்க..."

"என்ன லீலா..."

"சித்த உள்ளே வாங்க..."

"இப்பப் போயா... வீட்டில விருந்தாளிப் புள்ளைக வந்திருக்காக..."

"அடச்சீ... காலம் போன கடைசியில மனுசனுக்குப் புத்தி போகிற போக்கைப் பாரு... ஒரு முக்கியமான விசயம் பேசணும்..."

"அப்படிச் சொல்லுவியா...? அதை விட்டுட்டு... இப்படிக் கூப்பிட்டால்... மனுசன் என்ன விசயக் கழுதைன்னு கண்டான்...?"

"புத்தியைப் புல்லு மேய விட்டால் அது கண்டபடி தான் அலைபாயும்.. மனுசக் கழுதையோட மனசு இருக்கே... அது குரங்கு... அதைக் கட்டி வைக்கப் பாருங்க..."

"ம்ஹூம்... நான்தான் பேராசைப்பட்டு ஒரு கேள்வியைக் கேட்டுப்புட்டேன்னா... உனக்கெங்கேடி போச்சு புத்தி..."

"அது எங்கேயும் புல் மேயப் போகவில்லை... ஒழுங்காத்தான் இருக்கு... நான் சொல்வதைக் கேளுங்க..."

அவர்கள் இருவரும் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருக்க, ரேவதி... செந்திலை இறஞ்சும் பார்வை பார்த்தாள்...

"இதென்ன... இவங்க இப்படிப் பேசிக்கிறாங்க..."

"அதனால் ஒன்றும் வராது... நான் சமாளித்துக் கொள்கிறேன். நீ கவலைப்படாதே..."

"சீக்கிரமாய் இங்கிருந்து போய் விட்டால் தேவலை..."

"இன்றைக்கோ... நாளைக்கோ... வெள்ளம் வடிந்துவிடும்... அதற்குப் பின்னால்தான் நாம் போக முடியும்...

"வெள்ளத்தில் மூழ்கினாலும் பரவாயில்லை... இந்தமாதிரி உறவு முறையை இவர்கள் பேச... அதை ஏற்றுக் கொள்வதைப் போல் மௌனமாக இருக்க என்னால் முடியவில்லையே..."

."எனக்கு உன் நிலைமை புரிகிறது... ஆனால்... காலையில் அவர் பேசியதை நீ கேட்டுக் கொண்டு தானே இருந்தாய்...? அவர் கவலையிலும் ஒரு அர்த்தம் உள்ளதே..."

"எனக்கு மனது கலக்கமாக இருக்கிறது..."

"என்ன செய்யலாம்...? கொஞ்சம் பொறுத்துக் கொள்..."

ரேவதி... முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொள்ள... அவளது துயர் புரிந்தவனாய்ச் செந்தில் மௌனமாக இருந்தான்...

அப்போது லீலாவதி அழைப்பதாக வேலைக்காரப் பெண்மணி வந்து சொன்னாள்... இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்...

"எதுக்குக் கூப்பிடுகிறாங்க...?"

"எனக்குத் தெரியவில்லையே..."

"போய்த்தான் ஆக வேண்டுமா...?"

"வேறு வழி...? வா... போகலாம்..."

"அங்கே போனால்... இன்னும் நொய்... நொய்ம்பாங்களே"

"கேட்டுத்தான் ஆக வேண்டும், ரேவதி... இங்கே வந்து தங்கியிருப்பதால் தான் நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம்..."

அவர்கள் உள்ளே சென்றார்கள்... சுவாமி மாடத்தின் முன்பு லீலாவதியும்... பாண்டுரங்கனும் நின்றிருந்தார்கள்...

"என்னப்பா செந்திலு... இவ என்னவோ சொல்கிறாளே... அது நிஜமா...?"

"ஆமாங்கய்யா..."

"அடப்பாவமே... சரி... லீலாவதி கையிலிருக்கிற மஞ்சள் கயிறை வாங்கி உன் பெண்டாட்டி கழுத்தில் கட்டி விடு... எல்லாம் சரியாகப் போய் விடும்..."

பாண்டுரங்கன் இலகுவாகக் கூற... செந்திலும்... ரேவதியும் அதிர்ந்து போய் விட்டார்கள்...

"சார்..."

"ஒரு நேரம் ஐயாங்கிற... ஒரு நேரம் சாங்கிற... நீ எந்த நேரம்... எப்படிக் கூப்பிடுவேன்னே எனக்குத் தெரிய மாட்டேங்குது... அதை அப்புறமாய்ப் பேசிக் கொள்ளலாம்... இப்ப இந்த தாலிக் கயிற்றை வாங்கி... உன் பெண்டாட்டி கழுத்தில் கட்டு..."

"இது இப்போது அவசியம்தானா சார்...?"

"கட்டாயம் அவசியம், தம்பி... உன் பெண்டாட்டி வெறும் கழுத்தோட நின்னா... ஊரில் வேறு விதமா பேசிக்குவாங்க... எப்படின்னு கேட்கறீயா... நீ கல்யாணம் ஆகாத பெண்ணைத் தள்ளிக் கொண்டு வந்துட்டன்னும்... உன்னையும் அந்தப் பெண்ணையும்... தனி ரூமில் தங்க வைத்து... நாங்க விருந்து ஆக்கிப் போட்டுட்டோமுன்னு ஊரு நாக்கு மேல பல்லைப் போட்டு... நாலு விதமாய் பேசும்... உங்களைப் பெத்த பிள்ளைகளாகத்தான் நாங்க நினைக்கி றோம்... என்னை மாமா வேலை பார்த்துடேன்னு பெயரு வாங்கி வச்சிராங்தீங்க..."

பாண்டுதரங்கன் கண்டிப்புடன் பேச... செந்தில் யோசிக்காமல் லீலாவதியின் கையிலிருந்த மஞ்சள் கயிறை வாங்கி ரேவதியின் கழுத்தில் கட்டி விட்டான். சிறு மஞ்சள் துண்டுடன் தன் கழுத்தில் தொங்கி தாலியைத் திக் பிரமையுடன் பார்த்தாள் ரேவதி...

"என்னால் வேறு என்னதான் செய்ய முடியும் ரேவதி...? அந்தப் பெரிய மனிதர் பேசியதைக் கேட்டேயில்லையா? மாமா வேலை பார்க்கிறவர்ன்னு ஊர் சொல்ல வேண்டுமா என்கிற கேள்வியை அவர் என் முன்னால் வைக்கும் போது என்னால் அதைக் கேட்டுக் கொண்டு சும்மா நிற்க முடியுமா...?"

"சும்மா நிற்காமல் என் கழுத்தில் தாலியைக் கட்டியிருக்கீங்களே... இது என்ன சாதாரண விசயமா... இதற்குக் கடவுளும் இந்த வீட்டில் இருக்கிற இரண்டு மனிதர்களும் சாட்சி..."

"இதிலிருந்து நாம் தப்பிக்க முடியாது ரேவதி... அவர் சொல்வதைச் செய்யாமல் தயங்கி நின்றால்... அவர் மனதில் சந்தேகம் வரும்... நாம் இரண்டு பேரும் கல்யாணமாகதவர்கள் என்ற உண்மை தெரிய வந்தால் நிலைமை இன்னும் மோசமாகி விடும்..."

"இதற்குத்தான் நான் தலைப்பாடாய் அடித்துக் கொண்டேன்... நேற்று ராத்திரியே உண்மையைச் சொல்லி விடலாம் என்று... நீங்கள் தான் கேட்கவில்லை"

"சொல்லியிருந்தால் உன்னை என்னுடன் தனியறையில் தங்குவதற்கு இவர்கள் அனுமதித்திருக்க மாட்டார்கள்..."

"அதிலிருந்து தப்பித்திருக்கலாம், இல்லையா....?"

"ஆனால்... என் கண்பார்வையிலிருந்து நீ விலகிப் போயிருப்பாய்... அது உனக்குப் பாதுகாப்பில்லை..."

"எல்லாக் கேள்விகளுக்கும் உங்களிடம் பதில் இருக்கலாம்... இப்போது என் கழுத்தில் கிடக்கும் தாலிக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறீங்க...? இதற்கு உங்களிடம் பதில் இருக்கிறதா...?"

"இதைப் பெரிது பண்ணிக் கொள்ள வேண்டாம், ரேவதி..."

"எப்படி...? இது தாலியில்லை... வெறும் மஞ்சள் கயிறுன்னு சொல்லப் போகிறீங்களா...? வெரிகுட்... உங்களை

ஜென்டில் மேன்னு நினைத்தேன்... அது தப்புன்னு இப்போது தெரியுது..."

அவர்கள் இருவரும் தனியறைகளுள்... பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்... ரேவதியின் கண்கள் கலங்கி... முகம் கோபத்தில் செக்கச் சிவப்பாய் ஆகியிருந்தது... அவள் பேசிய வார்த்தைகளைக் கேட்ட செந்திலுக்கும் கோபம் வந்தது...

"ஏன் சொல்ல மாட்டாய்...? நேற்றும் சரி... இன்றும் சரி... என்னுடன் இந்தப் பூட்டிய ரூமிற்குள் தனியாக இருந்திருக்கிறாய்... என் மூச்சுக்காற்றுக் கூட உன் மேல் பட்டதா...? நீ... நீயாகத்தானே இருக்கிறாய்... அப்புறம் எப்படி என்னை ஜென்டில்மேன்னு நினைக்காமல் வேறு மாதிரி நினைத்தாய்...?"

"ஐயோ... நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை..."

"வேறு எந்த அர்த்தத்தில் சொன்னாய்...?"

"இப்படி ஒரு காரியத்தை நீங்கள் செய்யலாமா? சட்டென்று என் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டிங்களே... இதனால் என் மனம் எவ்வளவு பாதிக்கும்ன்னு ஒரு நிமிடம் என் பக்கத்து நியாயத்தை யோசித்துப் பார்த்தீங்களா...?"

"இதுவரை நான் உன் பக்கத்து நியாயத்தை மட்டும் தான் யோசித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன், ரேவதி... நன்றாக நீ யோசித்துப் பார்த்தால் உனக்கே

அது தெளிவாகும்... இப்போது உன் மனம்தான் பாதிப்பாகியிருக்கிறது... மானம் இல்லை... அதை முதலில் புரிந்து கொள்..."

"இதையே திரும்பத் திரும்பச் சொல்லி என் வாயை அடைக்கப் பார்க்கிறீங்களே யொழிய... நடந்து விட்ட காரியத்தின் சீரியÞனெÞ உங்கள் புத்தியில் உறைக்கவே மாட்டேன் என்கிறதே..."

"ரேவதி... நான் ஆண்... எது நடந்தாலும் தட்டிவிட்டுப் போய்க் கொண்டே இருப்பேன்... ஆனால் நீ பெண்... முன்பின் தெரியாதவனின் கையைப் பிடித்துக் கொண்டு நீ ஓடி வந்ததையும்... ஓர் இரவு... பூட்டிய ரூமிற்குள் என்னுடன் தனித்து இருந்ததையும்... இந்தச் சமுதாயம் அவ்வளவு எளிதாகவும்... இயல்பாகவும் எடுத்துக் கொள்ளாது... பழி சொல்லும்... அதிலிருந்து உன்னை நான் காப்பாற்றாவிட்டால்... நேற்று மதியம் அந்தத் தீவிரவாதிகளிடமிருந்து உன்னை நான் காப்பாற்றியதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடும்..."

ரேவதி மனம் உடைந்தாள்... செந்தில் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் கூரிய அம்புகளாய் அவளுடைய இதயத்தைத் துளைத்தன... கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறு... இரும்புக் குண்டாய்க் கனக்க... அவள் அந்தச் சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் தவித்தாள்...

அவளுடைய மனப் போராட்டம் முகத்தில் தெரிய, செந்தில் கருணையுடன் அவளை நோக்கினான்...

"ரேவதி... என்னை நம்பு... உன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றவே நேற்றும் உன் கைப் பிடித்தேன்... இன்றும் உன் கழுத்தில் இந்த மஞ்சள் கயிற்றைக் கட்டி னேன்... மற்றப்படி வேறு எந்தவிதமான மனச் சலனமும் என்னிடத்தில் இல்லை..."

அந்த நேரம் பார்த்து அந்த அறையிலிருந்து ரேடியோவில் பாடல் ஒலித்தது.... தாங்கள் பேசுவது வெளியிலல் கேட்காமலிருக்க ரேடியோவை ஒலிக்க வைத்து விடடுப் பேச்சில் ஆழ்ந்திருந்த ரேவதியும்... செந்திலும் அந்தப் பாடலைக் கேட்டுத் திகைத்தனர்...

"மலரே... ஓ... மலரே...

நீ என் மலரல்ல...

நான் உன் வண்டல்ல...

உன் மானம் காவல் கொண்டேன்...

என்று காதல் கொண்டேன்...? ..."

செந்திலின் விழிகள் ரேவதியிடம், 'கேட்டாயா...' என்பது போல் வினவின... ரேவதி கண்ணீர் மல்க... அறையின் மூலையில் சரிந்து அமர்ந்து முழங்கால்களில் தலையைப் புதைத்தாள்...

தனிமையில் அவளை விட மனமில்லாமல் செந்தில் அறையில் இருந்த கட்டிலில் அமர்ந்தான்... கதவு தட்டப்பட்டது... செந்தில்...

"ரேவதி..." என்று எச்சரிக்கைக் குரல் எழுப்ப...

அவள் அவசரமாய்... தன் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள்...

"எழுந்து போய்க் கதவைத் திற..."

"நானா...?"

"நீதான் போக வேண்டும்... போ..."

கட்டளையிடுவது போல் செந்தில் கடுமையாகக் கூற... ரேவதி போய் அறைக் கதவைத் திறந்தாள்... அகலமான புன்னகையுடன் லீலாவதி நின்றிருந்தாள்...

"என்ன கண்ணுகளா... பசி மறந்து விட்டதா...? நானே வராத விருந்தாளிக வந்திருக்கீகன்னு கோழி அடிச்சு... வறுத்துக் குழம்பு வைத்தேன்... நேரமாகியிருச்சு. பசியால் பறப்பீங்கன்னு வந்து பார்த்தால்... நீங்க ரெண்டு பேரும்... பசி ஞாபகமே இல்லாம இருக்கீங்க... வாங்கப்பா... சாப்பிடலாம்..."

"எங்களுக்குப் பசியே இல்லைம்மா..."

ரேவதி மெல்லிய குரலில் மறுத்துக் கொண்டிருக்க... செந்தில் எழுந்து அவர்களுக்கு அருகில் வந்தான்...

"அது என்ன... எங்களுக்குப் பசியில்லைன்னு... என்னையும் உன்னோடு கூட்டுச் சேர்த்துக்கறே... அம்மா... எனக்குப் பசிக்கு..." என்று லீலாவதியைப் பார்த்துக் கூறினான்...

"புருசனைத்தானே என் பொண்ணு கூட்டுச் சேர்த்துக்கிருச்சு... அதைப் போய்க் குறையா சொல்றியேப்பா..." என்று லீலாவதி பதிலுக்குப் பகடி பேச... ரேவதி சங்கடப்பட்டுப் போனாள்...

'புருசன்... புருசன்... புருசன்... இதை விட்டால் பேச இவங்களுக்கு வேறு பேச்சே இல்லையா...?'

உணர்வுகள் கொந்தளித்த போது கழுத்தில் செந்தில் கட்டிய தாலி உறுத்தி

'அவன் உனக்குப் புருசனில்லாமல் வேறு யார்...?' என்று கேட்டது...

ரேவதி... தன்னைக் கொல்லும் அந்த உணர்வுகளிடமிருந்து தப்பிக்க வழி தேடினாள்... 'அதை நான் தருகிறேன்...' என்பது போல் அவளைத் தோளோடு இறுக்கி அணைத்துக் கொண்டாள் லீலாவதி...

"என் பொண்ணுக்கு மட்டும் ஏன் பசிக்கலையாம்...?" என்று வினவியவாறு, ரேவதியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு படி இறங்கினாள்...

செந்திலுக்கு நிம்மதியாக இருந்தது... ரேவதியின் மரியாதையின் பொருட்டே அவள் மஞ்சள் கயிற்றை அவள் கழுத்தில் கட்டி விட்டாலும்... அது எளிதாக எடுத்துக் கொள்ள முடியாத நிகழ்வு என்பது அவனுக்கும் புரிந்துதான் இருந்தது... அவள் மனதைப் போட்டு உழட்டிக் கொண்டு துயரப்படுவதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அவள் பட்டினி கிடப்பதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை... லீலாவதி எப்படியும் ரேவதியைச் சாப்பிட வைத்து விடுவாள் என்பது அவனுக்குத் தெரியும்...

அன்று இரவு... ரேவதி தூங்காமல் மீண்டும் விழித்திருந்தாள்... செந்தில் எவ்வளவோ சொல்லி பார்த்து விட்டு... கண் அயர்ந்து விட்டான்... விடியும் போது காபி கொண்டு வந்த லீலாவதி... ஒரு வெளிச்சமான செய்தியைக் கொண்டு வந்தாள்...

"தண்ணீர் வடிஞ்சிருச்சுப்பா... நீங்க இரண்டு பேரும்... இனிக் கிளம்பலாம்... தடையில்லை..."

அந்தச் செய்தி மகிழ்ச்சியை அளிப்பதற்குப் பதில்... ஏன் இப்படி உயிரே உருகுவது போன்ற சோகத்தை அளிக்கிறது என்று ரேவதிக்குப் புரியவில்லை...

தாய்ப் பசுவைப் பிரியப் போகும் கன்றைப் போல அவள் செந்திலைப் பார்த்து... மிரள... மிரள... விழித்தாள்... அவள் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறு உறுத்தியது...

'நான் உன் கழுத்தில் கிடப்பதற்கு என்ன அர்த்தம்...?" என்று வினவியது...

செந்திலுக்கு அவளது பரிதவிப்பைப் பார்த்துப் பரிதாபமாக இருந்தது... எதுவும் பேசாமல்... பேசவும் தோன்றாமல்... அவன் அறையை விட்டு வெளியேறி விட்டான்...

குளித்து முடித்து... சேலைக்குப் பதில் தன் சுடிதாரை ரேவதி போட்டுக் கொள்ள... செந்தில் பாண்டுரங்கனின் வேட்டி... தொளதொளா சட்டையிலிருந்து விடுதலை பெற்றவனாய்... தனது பேன்ட்... சட்டைக்கு மாறினான்...

அவர்கள் கிளம்பும் நேரம் வந்தது... பாண்டுதரங்கன் தனது பழைய காரை வெளியில் எடுத்து நிறுத்தினார்...

"காரிலேயே உங்களை வத்தலக்குண்டு பÞ Þடாப்பில் இறக்கி விட்டு விடுகிறேன்... நீங்க உங்கள் ஊருக்குப் போய் ஒரு போன் போடுங்க..."

"உங்களுக்கு எதுக்குய்யா வீண் சிரமம்..."

"அது சரி... ஏன் தம்பி... முந்தா நாள் உங்களைத் தப்பவிட்ட தீவிரவாதி... இன்னும் அந்தப் பக்கம் சுத்திக்கிட்டு இருந்தால் என்ன பண்ணுவீங்க... எதையும் யோசிச்சு... ஆற... அமரச் செய்யணும்... வண்டியில் ஏறுங்க..."

அந்த ஊரே... பாண்டுரங்கனின் வீட்டு வாசலுக்கு வந்து அவர்கள் இருவருக்கும் விடை கொடுத்தது... லீலாவதி மட்டும் அழுது விட்டாள்... முந்தானையில் கண்களைத் துடைத்துக் கொண்டே செந்திலைப் பக்கத்தில்

அழைத்தாள்... அவள் எதற்கோ அழைக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு அவனும் பக்கத்தில் வந்தான்... லீலாவதி... ரேவதியின் கரத்தைப் பிடித்து... செந்திலின் கையில் ஒப்படைத்தாள்...

"பத்திரமாய் உன் பொண்டாட்டியை... இப்போது பார்த்துக்கிட்டது போல்... எப்போதும் பார்த்துக்கப்பா... இது ஊமைப் பொண்ணு... மனதிலிருப்பதை வாய் திறந்து பேசாது... நீதான் இதன் மனதைப் புரிந்து நடந்துக்கணும்..." கட்டளை போல் அவள் கூற... ரேவதியின் கையை இறுக்கிப் பிடித்தபடி அசைவற்று நின்றான் செந்தில்...

## 11

தூக்கம் வராமல் புரண்டு படுத்தான் செந்தில்.... அருகே கைக்கு எட்டும் தூரத்தில்... மனதால் மட்டும் எட்ட முடியாத தொலை தூரத்தில் படுத்துக் கண் மூடி உறங்கிக் கொண்டிருந்தாள் ரேவதி... அன்று பாண்டுரங்கனின் வீட்டில் யாருமறியாமல் தாலி வாங்கிக் கொண்டு... பின்னாளில்... ஊரும்... உறவும் அறியத் திருமணப் பந்தலில் அவனது தாலியை ஏற்று... மனைவியாக அவனது கரம் பிடித்து அவனோடு வாழ வந்தவள்...

'இது ஊமைப் பொண்ணு... மனதிலிருப்பதை வாய் திறந்து பேசாது... நீதான்... இதன் மனதைப் புரிந்து நடந்துக்கணும...' அசரீரி போல் அவனது மனதில் எதிரொலித்தது லீலாவதியின் குரல்...

பெண் மனதைப் பெண் மனமே அறியும் போல்... ரேவதியின் குண இயல்பை அன்றே லீலாவதி கணித்து விட்டிருந்தாள்... இரண்டு நாள்களில் எப்படி ரேவதியின் குணத்தை அவளால் அறிந்து கொள்ள முடிந்தது... என்று அதற்கு பின்னால் பலமுறை... செந்தில் யோசித்திருக்கிறான்...

பாண்டுரங்கனின் காரில ஏறி... எல்லோருக்கும் கை அசைத்து விடை பெற்றுக் கொண்ட போது... இன்னும் சற்று நேரத்தில் இது போல் செந்திலிடமும் விடைபெற வேண்டுமே என்று மனதில் நினைத்துக் கலங்கிப் போயிருந்தாள் ரேவதி...

விவரம் தெரிந்த நாள் முதலாய் அவளது மனதில் நிறைந்திருந்த சுதாகரனின் உருவம் கலங்கலாய்த் தெரிய... அதை மனதின் ஆழத்தில் அமிழ்த்தி எழுந்தது செந்திலின் உருவம்...

காரின் ஜன்னலோரமாகத் தலை சாய்த்தபடி... தொலைதூரத் தொடுவானை வெறித்தபடி வந்த ரேவதியைப் பார்ப்பதற்குச் செந்திலுக்குச் சங்கடமாக இருந்தது.

ஏனோ... தன் கைப்பிடித்துத் தளர்நடை நடந்த குழந்தையை விட்டுப் பிரியப் போவது போல் அவனது மனம் துடித்தது... இரண்டு நாள்களாக ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு ஓடி... ஒரே அறையில் தூங்கி... ஒருவர் மனதை ஒருவரிடம் பகிர்ந்து கொண்டு இருந்து விட்டு... இன்று சட்டென்று விட்டுப் பிரிந்து அவரவர் பாதையில் போகப் போவதை நினைக்கும் போது மனம் கனத்தது...

வத்தலக்குண்டைக் கார் நெருங்கி விட்டது... செந்தில் திரும்பி ரேவதியைப் பார்த்தான்... அதே நேரத்தில் ரேவதியும் திரும்பிச் செந்திலைப் பார்த்தாள்....

இருவரின் பார்வையிலும்... எதையோ சொல்லத் துடிக்கும் தவிப்பு தெரிந்தது... எதையோ இழக்கப் போகும் துயரம் தெரிந்தது...

'ஒருவர் உன்னை விட்டுப் போகும் போது

ஒரு வெளிச்சத்தை நோக்கிப் போவதாக

ஒரு கணம் உணர்கிறார்...

நீ அப்போது

ஒரு காதல் கவிதையை

எழுதாமலிரு...'

மனுஷ்யபுத்திரனின் கவிதை நினைவிற்கு வந்தது. இதோ... இன்னும் சற்று நேரத்தில் இவள்... அவனை விட்டுப் பிரியப் போகிறாள்... இவளுடைய ஊர் எது என்று கூடக் கேட்டுக் கொள்ளவில்லை... மனுஷ்யபுத்திரன் என்னவோ சொல்லி விட்டார்... ஆனால் கவிதை எழுதாமலிருக்க அவனது மனத்தால் முடியவில்லை.

'எந்த ஊர் என்பதையே...

இயம்பாமல் சென்றவளே....

நீ சென்ற ஊரில்... என் நினைவு வந்தால்...

என் நெஞ்சத்தை மன்னித்து விடு...'

அவனது நெஞ்சம்... அவரக் கவிதையை எழுதியது... அந்தக் கவிதையை வாய்விட்டுச் சொல்லி... அவள் கைப் பிடித்து நிறுத்த முடியாமல்... அவன் மனதில் கவிதாவின் உருவம் தோன்றித் தடுத்தது...

ஒருத்தியை மனதில் வைத்துக் கொண்டு... வேறொருதியின் பிரிவில் மனம் வாட நேரும் விந்தையைச் செந்தில் அப்போது அனுபவித்தான்...

கவிதா இருந்த மனதில் ஏன்... இந்தத் துயரம் வருகின்றது... தன் கைப்பிடியில் இருந்த ரேவதி பிரிவதை நினைத்து மனம் ஏன் வருந்துகின்றது...?

"ஆயிரம் வாசல் இதயம்...

அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம்...

யாரோ வருவார்... யாரோ போவார்...

வருவதும் போவதும் தெரியாது...

ஒருவர் மட்டும் குடியிருந்தால்...

துயரம் ஏதுமில்லை...

ஒன்றிருக்க... ஒன்று வந்தால்...

என்றும் அமைதியில்லை..."

காரில் பாண்டுரங்கன் போட்டுவிட்டிருந்த ரேடியோவில் இருந்து... பழைய பாட்டு ஒலித்தது...

'எப்படித்தான்... கண்ணதாசன் என் மனதைப் படித்தது போல் இப்படியொரு பாட்டை... அந்தக் காலத்திலேயே எழுதி வைத்திருக்கிறாரோ...' செந்தில் மனத்துக்குள் ஆச்சரியப்பட்டான்...

"பஸ் ஸ்டாண்டில் இறக்கி விடவா... இல்லை... வேறு வேலை ஏதாச்சும் உங்களுக்கு இருக்காப்பா...?"

பாண்டுரங்கனின் குரலில் உலுக்கிப் போட்டது போல் சுய நினைவுக்கு வந்த... அந்த இருவரும்... ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்....

"பஸ் ஸ்டாண்டிலேயே... எங்களை இறக்கி விட்டு விடுங்கள், சார்..." செந்தில் கூறவும்... சட்டென்று ரேவதி திரும்பி அவன் விழிகளை நேருக்கு நேர் பார்த்தாள்....

இரண்டு நாள்களில்... இது போல் அவள் அவனுடைய முகத்தை நேருக்கு நேர் பார்த்ததில்லை... அவளது விழிகளைச் சந்தித்ததும்... செந்தில் அவளுடைய பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் வாயடைத்துப் போனான்...

அவனுடைய பார்வை... அவளது கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறின் மீது விழுந்தது...

'இதையேன் இன்னும் கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிறாள்...' என்று நினைக்கும் போதே...

'வேறு என்ன செய்வாள்...?' என்று அவனுடைய மனம் அதட்டியது...

வத்தலக்குண்டு பஸ் நிலையம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது... பஸ் ஸ்டாண்டின் வாசலில் பாண்டுரங்கன் காரை நிறுத்தினார்... செந்திலும்... ரேவதியும் இறங்கி அவரிடம் கை கூப்பி விடைபெறும் போது... அவரும் இறங்கி நின்றார்... அவர்கள் உணர்வு

பூர்வமாய் பேசிக் கொண்டிருந்த போது... கூடியிருந்த ஜனத்திரளின் ஊடேயிருந்து...

"ரேவதி..." என்ற குரல் ஒலித்தது...

அந்தக் குரலை இனம் கண்டு கொண்ட ரேவதி பதட்டமாக...

"அப்பா..." என்று அழைத்தபடி திரும்பினாள்....

ஆஜானுபாகுவான ஜம்புலிங்கம்... வேட்டியை மடித்துக் கட்டியபடி அவசரமாய் அவர்கள் அருகில் வந்தார்... அவருடைய தலை முடி கலைந்து கிடந்தது... கண்கள் தூக்கமின்றிச் சிவந்திருந்தன... அவரை ஏற இறங்கப் பார்த்த பாண்டுரங்கன்...

"இவர் தான் உன் அப்பாவாம்மா...?" என்று ரேவதியிடம் வினவினார்...

அவள் 'ஆம்...' என்ற பாவனையில் தலையை அசைத்தவுடன் ஜம்புலிங்கத் தின் பக்கம் திரும்பி... மடைதிறந்த அருவி போல் பேச ஆரம்பித்து விட்டார்...

"இது உங்கள் பொண்ணுங்களாய்யா...?"

"ஆமாம்..."

"நல்ல வேளையாய் உங்க பொண்ணு தப்பிப் பிழைச்சது..."

"ஏன்... என்ன ஆச்சு...?"

"முந்தா நாள் மத்தியானம் உங்க பொண்ணும்... மாப்பிள்ளையும் பெரிய குளத்தில் இருந்து பஸ்ஸில் கிளம்பியிருக்காங்க... பஸ்ஸைத் தீவிரவாதிகள் மறிச்சு காட்டுப் பக்கம் ஓட்ட வைச்சிட்டானுக... காட்டுப் பக்கம் போனா... கும்பக்கரை ஆற்றில் வெள்ளம் வந்து கரை உடைஞ்சுருக்கு... அந்தக் களோபரத்தில் தீவிரவாதி கிட்ட இருந்து தப்பி... உங்க பொண்ணும்... மாப்பிள்ளையும் பகலெல்லாம் மழையில் நனைஞ்சுகிட்டு வெள்ளத்தில் நீச்சலடிச்சுக்கிட்டு நடந்து வந்து இராப்பொழுதில் எங்கள் ஊர் மண்டபத்தில் கரையேறினாங்க... நான் தான் இவங்க இரண்டு பேரையும் என் வீட்டில் இந்த இரண்டு நாள்

வெள்ளத்தில் தங்க வைத்து... இப்பொழுது விடிஞ்சதும்... தண்ணீர் வடிஞ்சது... காரில் கொண்டாந்து பஸ்ஸேத்தி விட வந்தேன்..."

ஜம்புலிங்கத்தின் முகம் ஆயிரமாயிரம் உணர்ச்சிகளைப் பிரதிப்பலித்தது... அவரது பார்வை... ரேவதியின் கழுத்தில் படிய... தன் கழுத்தில் இருந்த மஞ்சள் கயிறை நினைத்து ரேவதி கலவரமானாள்...

"பொண்ணு கழுத்தில் புதுசாய் மஞ்சள் கயிறு மின்னுதுன்னு பார்க்கறீங்களா... வரும்போது தாலி எங்கோயோ விழுந்து விட்டதுன்னு சொன்னாங்க... என் பெண்சாதி தான் வீட்டில இருந்த மஞ்சள் கயிற்றில் ஒரு துண்டு மஞ்சளைக் கட்டி... உங்க மாப்பிள்ளை கையில் கொடுத்து உங்க பொண்ணு கழுத்தில் கட்டச் சொன்னாள்..."

ஜம்புலிங்கத்தின் மீசை துடித்தது... அதைக் கவனிக்காமல் பாண்டுரங்கன் மேலும் பேசினார்...

"அதில பாருங்க... ஊருக்கு நான் பெரிய மனுசன்... உங்க பொண்ணையும் மாப்பிள்ளையையும்... எங்க வீட்டு மாடியில் தனி ரூம் கொடுத்துத் தங்க வைச்சேன்... பொண்ணு கழுத்தில் தாலி இலல்லைன்னா... ஊருக்காரப் பயலுக... என்னையில்ல பகடி பேசிருவாங்க... அதனால்தான் அவசரத்துக்குக் கட்டுய்யான்னேன்... உங்க மருமகமகப் பிள்ளையும் பதில் பேசாம கட்டிருச்சு..."

ஜம்புலிங்கம்... கண்களைத் துயரத்துடன் மூடிக் கொண்டார்... பெற்ற மனம் படும் பாடு தெரியாமல் பாண்டுரங்கன் அவரிடம் கை கூப்பி விடை பெற்றார்...

"அப்ப... நான் கிளம்புகிறேன்ய்யா... உங்க மகளையும் உங்க மருமகப் பிள்ளையையும் உங்ககிட்ட ஒப்படைச்சுட்டேன்... இனி இவங்க இரண்டு பேரும் உங்க பொறுப்பு..."

தான் என்ன வெடியை வெடிக்க வைத்திருக்கிறோம் என்று அறியாத அப்பாவியாக நல்ல மனம் கொண்ட அந்தப்

பெரியவர் கிளம்பிப் போய் விட்டார்...

ஜம்புலிங்கம்... தன் மகளின் முகத்தை கடுமையாக கூர்ந்து கவனித்தார்... அந்தப் பார்வை தாங்க முடியாதவளாய்...

"அப்பா..." என்று பொங்கி அழுதாள், ரேவதி...

உதட்டைக் கடித்துத் தன் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வந்த ஜம்புலிங்கம்... அங்கே நின்றிருந்த அம்பாஸிடரின் கதவைத் திறந்து விட்டு...

"இரண்டு பேரும் முதலில் காரில் ஏறுங்க... இங்கே கூட்டத்தில் எதுவும் பேச வேண்டாம்... இந்த ஜம்புலிகத்தின் வீட்டுப் பேச்சு இது வரைக்கும் வெளியில் வந்ததில்லை... இப்ப... நாலு பேர் கேட்கிற மாதிரி எந்த வார்த்தையும் உங்க இரண்டு பேர் வாயிலிருந்தும் வரக்கூடாது..." என்றார்...

"ஐயா... நான் எதற்கு? உங்கள் பெண்ணிடம் விவரம் கேட்டுக் கொள்ளுங்கள். நான் என் ஊரை விட்டு வந்து இரண்டு நாள்களாகிறது... நான் ஊருக்குத் திரும்ப வேண்டும்..." என்றான் செந்தில்....

அவன் பேசுவதைக் கடுமையான முகபாவனையுடன் கையமர்த்தி நிறுத்தினார் ஜம்புலிங்கம்...

"அப்படியெல்லாம்... நீங்க... நினைத்தது போல் உங்க வீட்டுக்கும்... ஊருக்கும் திரும்பி விட முடியாது, மாப்பிள்ளை..."

ஜம்புலிங்கம் கூறியதைக் கேட்ட... ரேவதியும்... செந்திலும் ஒரே குரலில் பதட்டமாக வினவினார்கள்...

"மாப்பிள்ளையா...?"

## 12

ஜம்புலிங்கம் தாழ்ந்த குரலில் சீறினார்...

"பின்னே... மாப்பிள்ளை இல்லாமல் நீங்கள் வேற யார்...? முதலில் காரில் ஏறுங்க..."

செந்தில் சுற்று முற்றும் பார்த்தான்... சுற்றிலும்... ஜனத்திரள் இருந்தது... இந்தக் கூட்டத்தில் தான் பேசப் போகும் நியாயம் எடுபடாது என்பதை உயர்ந்தவனாக... சட்டென்று எது வந்தாலும் சந்திக்கும் முடிவுடன் காரில் ஏறி... ரேவதியின் அருகே அமர்ந்தான்...

கார் வத்தலக்குண்டைத் தாண்டி... கெங்குவார் பட்டி போகும் சாலையில் ஓடியது... ஒரு பெரிய மரத்தின் அடியினில் காரை ஒதுக்கி நிறுத்திய ஜம்புலிங்கம்... பின் பக்கம் திரும்பி மகளைப் பார்த்தார்...

"முந்தா நாள் பெய்த மழையில் நம்ம ஊரு பாலம் உடைஞ்சிருச்சு... உன் அம்மா பயந்து போய் விட்டாள்... பஸ் போக்குவரத்து நின்னுருச்சு... புள்ளையைப் போய் கூப்பிட்டு வந்திருங்கன்னு சொன்னாள்... நானும் உன் பெரியப்பன் மகனின் இந்தக் காரை ஓசி வாங்கி கொண்டு... ஊடுகாட்டுப் பாதையில் பெரிய குளத்திற்கு வந்தேன்... நீ மதியமே கிளம்பிப் போய் விட்டதாய் ஹாஸ்டல் வார்டனம்மா சொன்னாங்க..."

"ஆமாம்பா... நான் முந்தா நாள் மதியமே ஊருக்கு வர... மதுரை போகிற பஸ்ஸில்... வத்தலக்குண்டுக்கு டிக்கெட் எடுதது... ஏறி உட்கார்ந்து விட்டேன்..."

"நான் வீட்டுக்குத் திரும்பி வரும் போது இருட்டி ரொம்ப நேரமாகியிருந்தது... உங்க அம்மா... வாசலிலேயே கவலையாய் காத்திருந்தாள்... அவள் முகத்தை பார்த்த போதே... நீ வீட்டுக்கு இன்னும் வரலைன்னு எனக்குப் பிடிபட்டுப் போச்சு... எதுக்கும் வாயைத் திறக்காமல் இருப்போமுன்னு இருந்தேன்... எங்கேங்க என் பொண்ணுன்னு உங்க அம்மா காருக்குள்ள நீயிருக்கியான்னு தேடினாள்... அப்போதே... நீ வீட்டுக்கு வரவில்லைன்னு எனக்குப் புரிஞ்சு போயிருச்சு...அப்பா... நான் ஏறின பஸ்ஸில்... இவரும்... மதுரை போக ஏறியிருந்தார்... பஸ் ஊரைத் தாண்டியதும்... ஐந்து

தீவிரவாதிகள் பஸ்ஸை மடக்கி... திசை திருப்பிட்டாங்க... ஆத்து வெள்ளம் வந்து எங்களைக் காப்பாத்துச்சு... அப்பா அதில் ஒருத்தன் என்னை ஓட விடாமல்..."

ரேவதி... பொங்கி அழுதாள்... ஜம்புலிங்கத்தின் ஆவி துடித்தது... உடல் பதறியது...

"அழுகாதே தாயி... நான் அங்கே இல்லாமப் போயிட்டேனே... இருந்திருந் தால் கண்ட துண்டமா அந்தக் கயவாளியை வெட்டிப் புதைச்சிருப்பேன்... உங்க அம்மா நீ வரலைன்னு சொன்னதும்... உனக்கு காலேஜ் இன்னும் முடியலை... நீ வர இன்னும் ஒரு நாளாகும்ன்னு கதை விட்டுட்டு... அப்படியே... ஒரு சோலியைப் பார்த்துப்பிட்டு வருவதாக உன் அம்மாவிடம் கதையளந்து விட்டு காரைத் திருப்பியவன்தான்... இரண்டு நாளாய்... பெரிய குளத்திற்கும் வத்தலக்குண்டிற்கு மாக... அலைந்து தேடிக் கொண்டிருக்கிறேன்.. நீயானால்... இப்பத்தான் என் கண்ணில் தட்டுப்படறே..."

"அப்பா... என்னை அந்தத் தீவிரவாதி கையில் துப்பாக்கியோடும்... மனதில் கெட்ட எண்ணத்தோடும் வழி மறித்து மடக்கி விட்டான்.... பஸ்ஸில் இருந்த எல்லோரும் அவங்கவங்க உயிரைக் காப்பாற்றிக்க என்னைப் பற்றிக் கவலைப் படாமல் ஓடி விட்டாங்க... இவர் ஒருத்தர் மட்டும்தான்... எனக்காக அவனை எதிர்த்து நின்றார்... அவனை அடித்து விட்டு 'வா'ன்னு என் கையைப் பிடித்தார்... எனக்கு வேறு நினைவே வரவில்லை. என் மானத்தைக் காப்பாற்றிக்கணும்கிற ஒரே வெறி மட்டும்தான் அப்போ... என்னிடம் இருந்தது... பெட்டியை அப்படியே போட்டு விட்டு... இவரோடு ஓடிவிட்டேன்... அது தப்பாப்பா...?"

"தப்புன்னு நான் எப்படிச் சொல்வேன், தாயி..."

"அப்போ... உதவி செய்தவரை உபத்திரம் செய்யலாமாப்பா... இவரை... இவருடைய ஊருக்கு அனுப்பி வச்சிருங்க..."

"தாராளமா போகட்டும்... உன்னையும் கையில் பிடிச்சுக்கிட்டு... இவர் இவருடைய ஊரைத் தேடிப்

போகட்டும்... நான் என்ன வேணாம்னா சொல்லப் போகிறேன்...

"அப்பா...!"

"ரேவதி... உனக்கு உலகம் இன்னும் தெரியவில்லை... இரண்டு நாள்... ஒரு ஊரின் பெரிய மனிதர் வீட்டில் தனி ரூமில் இவரோடு தனியாக இருந்திருக்கிறாய்... அவருடைய ஊர் என்ன அமெரிக்காவிலா இருக்கிறது... இதோ... கூப்பிடு தூரம்தான்... எங்கேயாவது... நம் ஜாதி ஜனம் மத்தியில் நம்மைப் பார்த்து விட்டு... இதைப் பற்றி அவர் பேச ஆரம்பிச்சா... நான் என்ன செய்வேன்... நீயே சொல்லு..."

"அப்பா..."

"இவர் நல்ல மனிதர்தான்... அதில் சந்தேகம் இல்லை... உங்களுக்குள் எதுவும் நடந்திருக்காது என்பதை நான் நம்புகிறேன்... இந்த ஊரும்... உலகமும் நம்புமா... இல்லை.... நீ கட்டிக் கொள்ள நினைக்கும் உன் மாமா மகன் சுதாகரன்தான் நம்புவானா...?"

"அப்பா..."

"எனக்கு எப்படி இந்த விசயம் தெரியும்ன்னு பார்க்கிறயா...? பெண்ணைப் பெத்தவனுக்கு உடம்பெல்லாம் கண்ணிருக்கும்... உன் அம்மாவின் அண்ணன் மகனுக்கு உன் மேல் ஒரு கண்ணிருக்குன்னு எனக்கு எப்பவோ தெரியும்... உனக்கு அவன் மேல் ஆசையிருக்குங்கிறதும் எனக்குத் தெரியும்..."

"அப்பா..."

"என்ன... சாதாரண வாய்க்கால்... வரம்புத் தகராறில் உன் மாமனுடன் ஆரம்பித்த சண்டை முற்றிப் பெரும் பகையாய்ப் போய் விட்டது... சரி... நம்ம பகை நம்ம காலத்தோடு முடியட்டும்... நம்ம புள்ளைகள் காலத்திலாவது பகை மறைந்து நன்றாக வாழட்டும்ன்னுதான் நினைச்சிருந்தேன்... நீ படிப்பு முடிஞ்சு வந்ததும்... உன்னிடம் சொல்லி, சுதாகரனைப் பெண் கேட்டு வரச்

சொல்லலாமுன்னு நினைச் சிருந்தேன்... இடையில் நீ இப்படிக் கழுத்தில் தாலியோடு வந்து நிற்கிறாய்..."

"அப்பா..."

அதுவரை... தகப்பன்... மகளின் உரையாடலுக்கு நடுவே குறுக்கிடக் கூடாது என்று ஒதுங்கியிருந்த செந்தில் அவசரமாய்க் குறுக்கிட்டுப் பேசினான்...

"சார்... இதில் உங்க மகள் மேல் தப்பில்லை..."

"உங்க மேலயும் தப்பில்லை... அந்தப் பெரிய மனிதர் தான் தேங்காய் உடைத்தது போல் எல்லாத்தையும் சொல்லிட்டாரே..."

"அப்புறமும் ஏன்... இதைப் போட்டுக் குழப்பிக்கறீங்க...?"

"இது குழம்பிப் போன விசயம்தானே தம்பி..."

"நான் இதைத் தெளிவு படுத்துகிறேன்..."

"எப்படி...?"

"சுதாகரனிடம் நான் பேசுகிறேன்..."

"பேசி... நடந்ததைச் சொல்வீங்க... அவனும் கேட்டுக்குவான்... என் பொண்ணு கழுத்தில் உங்கள் தாலியோடு சேர்த்து இன்னொரு தாலியையும் கட்டுவான்..."

"சார்... இந்த மஞ்சள் கயிறு விசயம் ரொம்பவும் சாதாரணமானது..."

"அதை உங்க அம்மா வாயால் சொல்லச் சொல்கிறீங்களா...?"

செந்தில் வாயடைத்துப் போய் விட்டான்... ஜம்புலிங்கம் கோபக் குரலில் தொடர்ந்து பேசினார்...

"என்ன தம்பி பேசாமல் இருக்கறீங்க... நீங்க சொல்வது போல் மறுதாலி கட்டி என் பொண்ணைச் சுதாகரன் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்னு வையுங்க... இந்த விசயம் சுதாரகன் மனதில் உறுத்திக் கொண்டேதான்

இருக்கும்... நாளைக்கு... குழம்பில் உப்பு புளி குறைந்தால் சொல்லிக்காட்ட இந்தப் பேச்சுத்தான் அவன் வாயில் வரும்... என் மகள் அப்படி வதைபடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்..."

ரேவதி மனக் கிலேசத்துடன் தந்தையிடம் மன்றாடினாள்..

"அப்பா... வேண்டாம் அப்பா... இவர் பாவம்..."

"ஏன்ம்மா... உனக்கென்ன குறை...? அழகில் குறையா...? படிப்பில் குறையா...? இல்லை, பணத்தில் குறையா...? இவங்க வீட்டில் கேட்கிற சீர் வரிசையை நான் செய்கிறேன்ம்மா..."

"அப்பா... இவர் மனதில் வேறு ஒரு பெண் இருக்கிறாள்..."

"இருக்கட்டுமே... உன் மனதிலும் சுதாகரன் தானேம்மா இருந்தான்? இப்போது அது கனவாகப் போய்விட்டதே..."

"என்னைக் காப்பாற்றப் போய்த்தானே அப்பா... இவருக்கு இந்த நிலைமை வந்து விட்டது...?"

"என்ன நிலைமை வந்திருக்கிறது...? கல்யாணம் கூடி வந்திருக்கிறது... அவ்வளவுதான்.. நீ சின்னப் பெண்... பேசாமல் இரு... இரண்டு நாள் இவருடன்நீ தனியாக இருந்ததும்... இவர் உன் கழுத்தில் தாலி கட்டியிருப்பதும்... சாதாரணமான விசயங்கள் அல்ல...."

செந்திலுக்கும் அது புரிந்தது... ரேவதி தொடர்ந்து தந்தையுடன் போராடினாள்... அவர் தன் முடிவிலிருந்து மாறவே இல்லை....

"இதோ பாரும்மா... இவருடைய அம்மா... அப்பா வரட்டும்... நியாயத்தை அவங்களிடம் கேட்போம்..."

செந்திலுக்கு மனம் தாளவில்லை... கவிதாவை இழக்க நேர்வது துயரம்தான்... அவளுக்குத் துரோகம் இழைப்பது கடினமான விசயம்தான்... ஆனால்

ரேவதியை மணப்பது ஒருவனுக்குத் தண்டனையாகுமா? செந்திலைக் காப்பாற்றத் தான் சிலவை சுமந்தாலும்

பரவாயில்லையென்று தகப்பனுடன் போராடிய அவளுடைய போராட்டம்... அவனது மனதை இளக்கியது...

"ரேவதி... விட்டு விடு..." என்றான்...

அவள் திகைத்து அவனது முகம் பார்த்தாள்...

"நீங்கள்... உங்கள் மனதில்... வேறொரு பெண்... என்று திக்கித் திணறினாள்.

"இருந்தாள்... இப்போது அதைப் பற்றிய பேச்சு வேண்டாம்... எனக்காக... நீ உன்னையே தாழ்த்திக் கொள்ளாதே... உன்னைக் கல்யாணம் செய்து கொள்வது ஒருபோதும் எனக்குத் தண்டனையாகாது... உன் அப்பாவின் விருப்பப்படியே எல்லாமும் நடக்கட்டும்... நான் போன் போட்டு... என் அம்மா அப்பாவை இங்கே வரச் சொல்கிறேன்..." செந்திலின் குரலில் தீர்மானம் இருந்தது....

ரேவதி அவனைப் பார்த்த பார்வையில்... அடிபட்ட பறவையின் வேதனை இருந்தது. தன்னைக் காக்க வந்த ராட்சகனை குற்றுயிரும் குலையுயிருமாக ஆக்கி விட்ட துடிப்பு தெரிந்தது. அவளது கண்களில் இருந்த கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

## 13

அறையின் மெல்லிய விடிவிளக்கின் ஒளியில் பால் போன்ற களங்கமில்லாத ரேவதியின் முகம் தெரிந்தது.... செந்தில் அந்த முகத்தையே அள்ளிப் பருகுவது போல் பார்த்தான்... அவளது சீரான சுவாசம்... அவளுடைய ஆழ்ந்த தூக்கத்தை அறிவித்தது... இப்படி அவள் தூங்கும் போது... முகத்தைப் பார்க்க வேண்டிய தனது நிலையை நொந்து கொண்டான் அவன்...

ரேவதி அந்த வீட்டில் மருமகளாய் அடியெடுத்து வைத்த நாள் முதலாய்... அவள் மேல் செந்தணல் போல்

வார்த்தைகக் கங்குகளைக் கொட்டிக் கொண்டிருந்தாள்... செந்திலின் தாய் மீனாட்சி...

அதையெல்லாம் ஒரு தேவதையின் அமைதியோடு.. பொறுமையாய்ச் சகித்துக் கொண்டு... மௌனமாய் நடமாடுவதைத் தன் வழக்கமாகக் கொண்டிருந்தாள் ரேவதி... இதுவரை மறந்தும் ஒரு வார்த்தை மீனாட்சியைத் தாக்கிப்பதில் பேசியதில்லை...

அது ஏன் என்பது செந்திலுக்கு மட்டும் நன்கு தெரியும்... அவள் நன்றிக்கடனில் பிணைக்கப் பட்டிருந்தாள்... செந்தில் கட்டிய தாலியை ஒரு குற்ற உணர்வுடன் ஏற்றுக் கொண்டிருந்தாள்... தன் அழகை உணராதவளாக... தான் செந்திலின் மனைவியானது செந்திலுக்குத் தரப்பட்ட தண்டனையென்ற உணர்வுடன்... ஒரு தாழ்வு மனப்பான்மையுடன் அந்த வீட்டில் ஒட்டாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள்...

செந்தில் ஒரு பெருமூச்சை விட்டான்... அன்று ஜம்பு லிங்கம் கண்டிப்புடன் பேசியதில் ஒரு நியாயம் இருப்பதை உணர்ந்து அவரிடமே செல்போனை வாங்கி... விசுவநாதனிடம் பேசினான் அவன்...

"என் செல்போனில் இரண்டு நாள்களில் சார்ஜ் போட முடியவில்லை, சார்... உங்கள் போனைத் தாங்க..." என்று வாங்கினான்...

"அப்பா... அம்மாவைக் கூப்பிட்டுக்கிட்டு உடனடியாகக் கெங்குவார் பட்டிக்கு வாங்க... என்ன விசயங்கிறதை நேரில் பேசிக்கலாம்... இரண்டு நாள்களாய் எங்கே யிருந்தேனா...? .... அதைச் சொல்லத்தான் கூப்பிடுகிறேன்... கிளம்பி வாங்க..."

ஜம்புலிங்கத்திடம் போனைக் கொடுத்துவிட்டு ரேவதியைப் பார்க்காமல் யோசனையுடன் தலையை திருப்பிக் கொண்டான் செந்தில்...

'கவிதாவிற்கு எப்படிச் சமாதானம் சொல்வது...' அவன் மனம் கவலையில் ஆழ்ந்தது....

மகளுடன் கணவர் திரும்பியதும் ஆவலாய் ஓடி வந்து மகளைக் கட்டிக் கொண்ட ரேவதியின் தாய் ஈÞவரி வீட்டிற்குள் சென்றதும்... மகளின் கழுத்தில் இருந்த தாலியைப் பார்த்து அதிர்ந்தாள்... எதுவும் விளக்கம் சொல்ல முடியாமல் ரேவதி சரிந்து சுவரில் சாய்ந்து தரையில் அமர்ந்து விட... ஜம்புலிங்கம் விவரம் சொன்னார்... ஈÞவரி பதறிப் போனாள்...

அன்று மாலை விசுவநாதனும்... மீனாட்சியும் வந்து விட்டார்கள்... ஜம்புலிங்கம்... சாதாரணமாக அவர்களை வரவேற்று... மாடியறைக்கு அழைத்துப் போய்... வெளியே தெரியாமல் அறைக் கதவைச் சாத்தி விட்டு விவரம் சொன்னதும் ஆடிப் போய் விட்டாகள்...

"இது என்னங்க பெரிய கொடுமையா இருக்கு... ஏன்டா செந்திலு... உன்னை வசூலுக்கு அனுப்பினோமா... இல்லை, வம்பை விலைக்கு வாங்க அனுப்பி னோமா... எந்தக் காட்டுச் சிறுக்கி எப்படிப் போனால் உனக்கென்ன வந்துச்சு...? நீ உன் சோலிக்கழுதையைப் பார்த்துக்கிட்டு வந்திருக்க வேண்டியதுதானே... இது நல்லதுக்குக் காலமில்லாத உலகம்டா... நன்றி கெட்ட உலகம்... இப்பப் பாரு... உயிரைத் துச்சமா மதிச்சு... இந்த வீட்டுப் பெண்ணை நீ காப்பாற்றினாயே... அதுக்குப் பதிலுக்கு அவங்க என்ன செய்ய நினைக்கிறாங்க... அவங்க பொண்ணை உன் தலையில் கட்டி விட நினைக்கிறாங்க... இது எதுக்குடா நமக்கு...? நம்ம தரம் என்ன...? இவங்க தரம் என்ன...? யாரு வீட்டுப் பொண்ணை... யாரு கட்டுறது...? நல்ல கதையாய் இருக்கே... தன்னாலே... பொன்னையும்... பூமியையும் குவிச்சு வச்சுக்கிட்டு... ஒற்றைப் பெண்ணையும் சேர்த்துப் பெத்து வச்சுக்கிட்டு... அதை உன் மகனுக்குக் கட்டிக்கம்மான்னு தவம் கிடக்கிறாரு என் பெரியப்பா மகன்... நீயும்... நினைவு தெரிஞ்ச நாள் முதலாய் அவளைத்தான் கட்டிக்கணும்னு இருக்கே... இதில ஊடே வர இவங்க யாரு... என்னவோ வந்தானாம்.. இவங்க பொண்ணைக் காப்பாத்தி இரண்டு நாள் சேர்ந்து ஒரு வீட்டில் தங்கியிருந்தானாம்... அதுக்கு அந்தப் பொண்ணு கழுத்தில தாலியைக் கட்டி... காலமெல்லாம் சுமையாய்

இவன் சுமக்கணுமாம்... அதுதான் எதுவுமே நடக்கலைன்னு அந்தப் பொண்ணே... அது வாயாலேயே சொல்லுதே... அப்புறம் என்ன...? எழுந்திருடா... நம்ம வீட்டைப் பார்த்துப் போகலாம்..." மீனாட்சி ஆடித் தீர்த்து விட்டாள்....

விசுவநாதன் அமைதியாய்... தாடையைத் தடவியவாறு ரேவதியை யோசனையுடன் பார்த்தார்... குனிந்த தலை நிமிராமல்.. மீனாட்சி பேசிய வார்த்தைகளைத் தாங்கிக் கொண்டு அவள் தலை குனிந்து நின்றிருந்தவிதம் அவரைப் பாதித்தது... ரேவதியின் அழகான தோற்றம் அவரைக் கவர்ந்தது... அவருடைய சுற்று வட்டாரத்தில் ரேவதியைப் போன்ற அழகான பெண்ணை அவர் அதுவரை பார்த்தது இல்லை... கவிதாவின் சாதாரணத் தோற்றம் அவருடைய கண்முன் வந்து போனது... தன்னையுமறியாமல்... ரேவதியையும்... கவிதாவையும் ஒப்பிட்டு பார்த்தார் விசுவநாதன்...

ரேவதி... தலை நிமிராமல் நின்றதை... ஒரு வித பரிதாபத்துடன் செந்தில் பார்த்ததை அவரது மனம் குறித்துக் கொண்டது... மீனாட்சியிடம் தென்படும்

விடுபட வேண்டும் என்ற ஆவேசம்... செந்திலிடம் தென்படவில்லை என்பதைக் கவனத்தில் கொண்டார் அவர்...

14

ரேவதியிடம் இருந்த அதீதமான அழகு கவிதாவிடம் இல்லை... ஆனால் கவிதாவிடம் இருந்த அதிக அளவிலான சொத்து ரேவதியிடம் இல்லை... ரேவதிக்கு பின் ஒரு தம்பி இருந்தான்... கவிதாவோ ஒற்றை பெண்... தகப்பனாரின் கங்கு கரையில்லாத சொத்திற்கு ஒரே வாரிசு... அதே சமயம் ரேவதி பட்டப் படிப்பை முடித்திருந்தாள்... கவிதாவோ... பத்தாம் வகுப்பிற்கு மேல் படிப்பு ஏறாமல் வீட்டில் தேங்கி விட்டாள்...

மருமகள் மூலமாக வரும் சொத்து... பணத்திற்கு என்றுமே விசுவநாதன் ஆசைப்பட்டவரல்ல... கண்முன்... திருமணம் செய்து கொள்ள நிச்சயிக்கப் பட்டிருக்கும் முறைப் பெண் நடமாடினால்... எந்த இளம் வயது வாலிபனும் திரும்பிப் பார்க்காமல் இருக்க மாட்டான்... அதைத்தான் செந்தில் செய்து வந்தான் என்பதை அவர் நன்கு அறிவார்.. செந்திலுக்குக் கவிதாவின் மேல் இருப்பது... வெறும் ஈடுபாடு... காதல் இல்லை என்பது அவருக்கு நன்கு தெரியும்...

ரேவதியின் மேல் படியும் செந்திலின் பார்வையிலல் ஒரு தவிப்பும்... துடிப்பும் இருந்ததை அவர் கவனித்தார்... அவளுடைய வேதனை அவனைப் பாதிப்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

ஜம்புலிங்கத்திற்கு செந்திலின் பணவசதி பற்றிய விவரம் எதுவுமே தெரியாது... அவன் சாதாரணக் கூலித் தொழிலாளியாக இருந்திருந்தாலும்... அப்போது உருவாகி விட்டிருந்த நெருக்கடியான நிலைமையில்... அவனுக்குத் தயங்காமல் தன் மகளை மணம் முடித்துக் கொடுத்திருப்பார் என்பதையும் விசுவநாதன் புரிந்து தான் இருந்தார்...

ரேவதி... நடைபெற்ற சம்பவத்தைத் தனக்குச் சாதாகமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல்... செந்திலை அந்த நெருக்கடியான சூழ்நிலையில இருந்து தப்பிக்க வைக்க... தகப்பனாரிடம் மறுத்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட விசுவ நாதன்... அவளுடைய குண இயல்பின் மேன்மையைக் கண் கூடாகக் கண்டார்...

ரேவதி கிடைப்பதற்கரிய வைரம் என்பதை விசுவநாதன் உணர்ந்து கொண்டார்... எத்தனை பேர் இப்படிப்பட்ட நன்றி உணர்வுடன் இருப்பார்கள்... இந்தப் பெண் இருக்கிறாளே... தன் வாழ்க்கை எப்படிச் சிக்கலானாலும் பரவாயில்லை... தன்னைக் காப்பிறயவனின் வாழ்க்கை சிக்கலாகி விடக் கூடாதென்று துடித்துக் கொண்டிருக்கிறாளே...

விசுவநாதன் முடிவு செய்து விட்டார்...

"இதோ பாருங்க, ஐம்புலிங்கம்... எனக்கு ஒரு வார்த்தை பேசிவிட்டால்... அதை மாற்றிப் பேசத் தெரியாது.. நான் ஒரு சொல்... ஒரு வார்த்தையில் நிற்பவன்... உங்களின் நிலைமை எனக்கு நன்றாகப் புரிகின்றது... பெண்ணைப் பெறாவிட்டாலும் நாலு அக்கா தங்கையுடன் பிறந்தவன் தான்... உங்கள் பெண்ணிற்குக் காலம் பூராவும் ஒரு பழிச் சொல் ஏற்படுகிறதென்றால்... என் மகன் உயிரைத் துச்சமாக நினைத்து உங்கள் பெண்ணைக் காப்பாற்றியதற்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுமே... காப்பாற்றுகிறேன் என்று என் மகன்... உங்கள் மகளின் கையைப் பிடித்தது... பிடித்தது தான்... அவன் உங்கள் மகளை ஒரு நாளும் கைவிட மாட்டான்... வருகின்ற முகூர்த்தத்தில் என் மகனுக்கும்... உங்கள் மகளுக்கும் கல்யாணம்... இப்போ நான் சொன்ன வார்த்தையே... என் மகனுக்கு... உங்கள் மகளைப் பரிசம் போட்டது போலத்தான்..."

ஐம்புலிங்கம் முகம் மலர... மீனாட்சி... முகம் இருண்டாள்...

"என்னங்க... என்ன இப்படிப் பண்ணிப்புட்டிங்க..."

"ஸ் ... ஸ் ... பேசாதே மீனாட்சி... அந்தப் பெண்ணின் நிலைமையைக் கொஞ்சம் நினைச்சுப்பாரு..."

"அதை நாம ஏன் நினைக்கணும்... "

"ஏன்னா, நாம மனுசப் பிறவிகள். அதனால் நினைச்சுப் பார்த்துத்தான் ஆகணும்"

விசுவநாதனின் கண்டிப்புக்கு முன்னால்... மீனாட்சியின் மறுப்பு எடுபடவில்லை... திருமணப் பத்திரிகை அடிக்கப்பட்டது... மதுரையிலேயே மிகப் பெரிய திருமண மண்டபத்தில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது... ஐம்புலிங்கம் தன் பங்கிற்குக் குறைவில்லாமல் சீர் செய்து சபையை நிறைத்தார்...

"பொண்ணு இப்படி நம்ம சீமையிலேயே இல்லாத அழகோட மூக்கும்... முழியுமாய் இருக்கிறாளே..." என்று பேசாத ஜனம் இல்லை...

மீனாட்சி... தன்னால் எந்த அளவுக்கு நாவால் பெண்ணைச் சேர்ந்தவர் களைச் சுட முடியுமோ... அந்த அளவுக்குச் சுட்டாள்... அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் சிரித்த முகத்துடன் ஐம்புலிங்கமும் ஈஃவரியும் மண்டபத்தில் வளைய வந்தனர்...

திருமணத்திற்கு முன்னர் செந்தில் கவிதாவைச் சந்தித்தான்... தன் நிலைமையை எடுத்துச் சொன்னான்... இறுகிப் போன முகத்துடன் அதைக் கேட்டுக்

கொண்ட கவிதா... எதுவுமே பேசாமல் விர்ரென்று போய் விட்டாள்...

செந்திலுக்கே அது ஆச்சரியமாக இருந்தது... அவன் அவளிடமிருந்து அழுகையும்... கண்ணீரும் வரும்... எப்படி அதை எதிர் கொள்வது என்ற சங்கடத்துடன் இருந்தான்... பொதுவாகப் பெண்களின் கண்ணீர் செந்திலைப் பலவீனப்படுத்தி விடும்... மீனாட்சி கண்ணீர் விட்டால் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியாது... அவளுக்குக் கவிதாவைச் செந்திலுக்குத் திருமணம் பண்ணி வைக்க ஆசை...

அதனால்தான்... தாயின் ஒன்றுவிட்ட அண்ணன் மகளிடம் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் நினைவுடன் பழகினான் செந்தில்... அந்தக் கவிதா... தன் பாதிப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் போனது ஒரு பக்கம் அவனுக்கு ஆறுதலாகவும்... இன்னொரு பக்கம் ஏமாற்றமாகவும் இருந்தது... 'இவ்வளவுதானா...' என்ற எண்ணம் அவனுள் எழுந்தது....

## 15

தான் ஒரு கை தேர்ந்த சாகசம் தெரிந்தவள் என்பதை நிருபித்தாள் கவிதா... திருமணம் முடிந்தவுடன்... புதுமணமக்களை அழைத்துக் கொண்டு... வாகைக் குளத்தில் வரிசையாக வந்து நின்ற கார்களில் இருந்து

இறங்கிய உறவினர் கூட்டம் விசுவநாதனின் வீட்டை நிறைத்தது...

மாலை மயங்கிய அந்த நேரத்தில்... இரவு விருந்திற்கான ஏற்பாடு ஆரம்பித்திருந்தது... புது மணமக்களுக்குப் பால்... பழம் கொடுத்து... மாடியறைக்கு ஓய்வெடுக்க அனுப்பி வைத்தார்கள்... அன்று இரவு அவர்களுக்கு முதலிரவு என்று முடிவு செய்யப்பட்டிருந்தது...

செந்திலின் படுக்கையறைக்குள் நுழைந்த ரேவதி தயங்கி நிற்க... அவளை ஆதரவாகப் பார்த்தான் அவன்...

"என்னிடம் என்ன தயக்கம் ரேவதி... நாம் தனியறையில் தனித்து இருப்பது புதிதா...?"

'அதுவும்... இதுவும் ஒன்றா...' என்ற நினைவில் ரேவதி நிலம் பார்த்தாள்....

மணமகள் அலங்காரத்தைக் கலைக்காமல் இருந்தவளைப் பார்த்து... குளியலறையைக் காட்டினான் செந்தில்...

"இந்த அலங்காரம் கம்பர்டபிளாக இருக்காது... குளித்துவிட்டு... டிரஸ் சேன்ஜ் பண்ணிக் கொண்டு வா... உனக்கு ரிலீபாக இருக்கும்..."

"அத்தை திட்ட மாட்டாங்களா...?"

அவள் கவலையுடன் வினவ... அவன் சிரித்தான்...

"திட்டுவதை விட்டால் உன் அத்தைக்கு வேறு பேசத் தெரியாதே... ஆனால் ரேவதி... இந்த வீட்டிற்கு வர வேண்டிய ஊர்க்காரங்க வந்து உன்னைப் புதுப் பெண்ணாய்ப் பார்த்து விட்டுப் போயிட்டாங்களே... இனி புதிதாய் உன்னைப் பார்க்க யாரும் வரப்போவதில்லை... இருட்டி விட்டது... கவலைப்படாமல் போய்க் குளித்து டிரெஸ் மாற்றிக் கொள்..."

ரேவதியின் முகத்தில் ஒரு விடுதலை உணர்வு தெரிந்தது... அவனை நன்றியுடன் பார்த்தவாறு குளிக்கப் போய்விட்டாள்... செந்தில் அவளைப் பற்றிய நினைவுடன்... உடை மாற்றிக் கொண்டு... அங்கிருந்த சோபாவில்

அமர்ந்தான்... அறைக் கதவு தட்டப்பட்டது... கவிதா நின்று கொண்டிருந்தாள்...

'இவளெங்கே... இங்கே இப்போது வந்திருக்கிறாள்...' என்ற நினைவுடன் அவன் யோசனையாக நின்றான்...

"என்ன அத்தான்... அப்படிப் பார்க்கறீங்க நான் உள்ளே வரக்கூடாதா... எனக்கு உரிமையில்லையா...?" கவிதா அவன் முகத்தின் மேலிருந்த பார்வைய அகற்றாமல் சுவாதீனமாக உள்ளே வந்தாள்...

'உரிமையைப் பற்றிப் பேசும் நேரமா இது...' செந்தில் சங்கடத்திற்கு உள்ளானான்...

கவிதா செந்திலிடம் கண்ணீர் மல்கப் பேச ஆரம்பித்தாள்... குளியலறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது... சட்டென்று செந்திலின் கையைப் பிடித்து அதில் முகத்தைப் பதித்துக் கொண்டு கண்ணீர் விட ஆரம்பித்தாள்...

"எப்படி அத்தான் உங்களுக்கு மனம் வந்தது... என்னை விட்டு வேறொருத்தியின் கழுத்தில் எப்படி நீங்கள் தாலி கட்டலாம்...? ... தூங்கும் போது கூட நான் உங்களை மறந்தது இல்லையே..."

அதற்கு மேலே அவள் என்ன பேசினாள் என்பதையே செந்தில் கவனிக்க வில்லை... அவன் பார்வை முழுவதும்... கவிதாவின் முதுகிற்குப் பின்னால் அதிர்ந்துப் போய் நின்று கொண்டிருந்த ரேவதியின் முகத்தின் மீதே படிந்திருந்தது...

ரேவதியின் விழிகளில் அப்பட்டமான அதிர்ச்சி தெரிந்தது... கலக்கம் தெரிந்தது... கவிதாவிற்குச் சொந்தமான ஒன்றைக் களவாடி விட்ட குற்ற உணர்வு தெரிந்தது... கவிதாவின் சோகத்தைத் தாங்க முடியாத தவிப்பு தெரிந்தது...

ரேவதி... தலைப் பின்னலைப் பிரிந்து... விரிய விட்டு... குளித்து விட்டு... சாதாரணமான பிரிண்டெட் சேலையொன்றில் தேவதை போல் நின்று கொண்டிருந்தாள்... அப்பழுக்கு இல்லாத அழகு அவளிடம்

குடி கொண்டிருந்தது... அவளது அழகிய கருவிழிகளில் நீர் திரண்டிருந்தது...

"என்னிடம் உயிரையே வைத்திருந்தீங்களே, அத்தான்... கவிதா! நீயில்லைன்னா எனக்கு வாழ்க்கையே இல்லைன்னு சொல்வீங்களே... ஒரு நாள் என்னை பார்க்காவிட்டாலும் துடித்துப் போய் விடுவீங்களே.. எப்போது நம் கல்யாணம் நடக்கும்ன்னு ஏங்கித் தவிப்பீங்களே... அதெல்லாம் இப்போது எங்கே போனது அத்தான்..."

கவிதா பேசுவது நாடகபாணியாக இருக்க... செந்திலுக்கு அவளுடைய நோக்கம் புரிந்து விட்டது... அன்று ஏன் அவள் எந்த வித வார்த்தைகளையும் உதிர்க்காமல் விலகிப் போனாள் என்று... இன்று அவனுக்குத் தெளிவாகியது...

விசுவநாதன் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்... செந்தில் வாக்குத் தவற மாட்டான்... திருமணம் நடப்பது உறுதி... ஆனால்... கொட்ட வேண்டிய கண்ணீரையும்... வார்த்தைகளையும்... சரியான நேரத்தில்... சரியான இடத்தில் கொட்டினால் செந்திலின் வாழ்க்கையோடு விளையாடலாம்...

கவிதா... செந்திலின் வாழ்க்கையோடு விளையாடிப் பார்த்து விட்டாள்... ரேவதி அங்கிருப்பதை அறியாதவள் போல்... அவள் செந்திலின் மார்பில் தலை சாய்த்துக் கண்ணீர் உகுக்க... ரேவதி கண்களை இறுக மூடி... சுவரோடு சாய்ந்து நின்றாள்... அவளது மனம் படும்பாட்டைச் செந்திலினால் நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது...

அன்றைய முதலிரவின் தனிமையில்... ரேவதி அவன் முகம் பார்க்காமல் சோபாவில் சுருண்டு படுத்தாள்... ஊரறிய அவனுடைய மனைவி ஆவதற்கு முன்னால் அவன் முகம் பார்த்து சகஜமாகப் பேசியவள்... இன்று உரிமையுள்ள மனைவியான பின்பு... அவனுடன் பேசுவதைத் தவிர்த்தாள்...

# 16

அன்றோடு போயிருந்தால் கூடச் செந்தில் எப்படியாவது ரேவதியிடம் பேசி... அவளது மனதைத் தன் புறம் திருப்பியிருப்பான்... ஆனால்... அது முடியாமல் மறுநாள் காலையில் அவர்கள் மறுவீட்டிற்குப் போக நேர்ந்தது... மறுவீட்டு விருந்தில்... இருந்த போது... அவர்கள் ஊர் அம்மன் கோவிலுக்கு... ரேவதியுடன் அவன் போக வேண்டி வந்தது...

ரேவதி அமைதியாய் அவனுடன் வந்தாள்... எதிர்படும் உறவினர்கள் நலம் விசாரித்த போது பதில் சொல்லி... அவர்களை இன்னாரென்று செந்திலிடம் அறிமுகப்படுத்தினாள்... செந்திலும் தலை அசைத்து அவர்களுடன் புன்னகையுடன் பேசினான்.

பூ மணத்துடன் அருகில் நடந்து வரும் அழகிய... இளம்... புது மனைவி... அவளுடைய... அவனறியாமல் ஊர்... முதலிரவிற்குப் பிறகு... முகம் கொடுத்து அவனுடன்... அவள் பேசிக் கொண்டு வந்ததில் ஏற்பட்ட மன நிறைவு... எல்லாமே நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது...

அவர்கள் கோவிலுக்கு போய் அம்மனை வணங்கினார்கள்... பிராகாரத்தைச் சுற்றி வலம் வரும் போது... செந்தில் கோவிலின் சுவரில் செதுக்கியிருந்த சிற்பங்களைப் பார்த்தபடி தேங்கிவிட... ரேவதி... அவன் நின்று விட்டதைக் கவனிக்காதவளாய் முன்னே நடந்து விட்டாள்... அவள் சுற்றுப் பிராகாரத்தில் திரும்பிச் செந்திலின் கண் பார்வையிலிருந்து மறைந்த போது... கோவிலின் சுற்றுப் பிரகாரத் தூண் மறைவிலிருந்து சுதாகரன் வெளிப்பட்டான்...

"ரேவதி..."

"இந்தக் குரல்... இந்தக் குரல்... சுதாகரனின் குரல் அல்லவா...?"

ரேவதி அதிர்ந்து போய் நின்று விட்டாள்... அதே நேரம்... ரேவதி முன்னால் போய்விட்டதைக் கவனித்த செந்தில் வேகமாய் நடந்து வந்து... சுதாகரனின் குரல் கேட்டு... சுற்றுப் பிரகாரத்தின் தூண் மறைவில் நின்று விட்டான்... அவன் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து ரேவதியையும் சுதாகரனையும்... அவனால் நன்றாகப் பார்க்க முடிந்தது... அவர்கள் பேசுவது தெளிவாக அவன் காதுகளில் விழுந்தது...

"சுதாகர்... நீங்களா...?"

"நானேதான்... என்னை நீ இங்கே எதிர்பாத்திருக்க மாட்டாய்தானே..."

ரேவதி தவிப்போடு... திரும்பிச் செந்தில் வரும் பாதையைப் பார்த்தாள்...

"என்ன தேடுகிறாய் ரேவதி... உன் புருசனையா...?"

"சுதாகர்... அது வந்து..."

"எனக்கு உன் பொய் விளக்கமெல்லாம் வேண்டாம், ரேவதி..."

"பொய்யா...? நானா...?"

"ஆமாம்... நீதான்... நீ பொய்த்துப் போனாய், ரேவதி... உன் காதல் பொய்த்துப் போனது..."

"என் சூழ்நிலை அப்படி..."

"சூழ்நிலையைக் காரணம் சொல்லாதே... என்னைவிட உன் புருசன் பணக்காரன்... வசதியானவன்... அதைக் காரணம் சொல்லு..."

"சுதாகர்..."

"அந்த மழைநாளின் இரண்டு இரவுகளில் உனக்கு எது நேர்ந்திருந்தாலும்... நான் உன்னைக் கேள்வியே கேட்காமல் ஏற்றுக் கொண்டிருப்பேன்... என் வாழ்நாளில் ஒருமுறை கூட உன் அப்பா பயந்தது போல உன்னைச் சொல்லிக் காண்பித்து இருக்க மாட்டேன்... ஏனென்றால்...

அதுதான் காதல்... நான் உன்னைக் காதலித்தேன், ரேவதி... நீ என் காதலில் நம்பிக்கை வைக்கவில்லை..."

"சுதாகர்..."

"நீ என் காதலை நம்பியிருந்தால் என்னையும் நம்பியிருப்பாய்... இப்படி நடந்து விட்டது சுதாகர்... என்ன செய்வதுன்னு என்னிடம் வழி கேட்டிருப்பாய்... நீ அதைச் செய்யவில்லையே... உன் புருசன்... கொள்ளை... கொள்ளையாய்ப் பணம் சம்பாதிக்கும் வியாபாரி... இந்த மாதச் சம்பளம் வாங்கும் சுதாகரனைவிட அவன் உனக்கு அதிக வசதிகளைக் கொடுப்பான்... அதனால் என்னை கை கழுவி விட்டாய்"

ரேவதியின் முகம் கலங்கிச் சிவந்ததைச் செந்தில் பார்த்தான்... அன்று கவிதா செந்திலின் கரம் பிடித்து அழுத போது... ரேவதியின் முகம் எப்படி அதிர்ந்து போனதோ... அதே போல் இன்றும் அதிர்ந்து போனது...

"நான் துரோகியா சுதாகர்... நான் துரோகம் செய்பவளா...? எங்கே... என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்..."

"இன்னொருவனிடம் தாலியை வாங்கிக் கொண்டு நீ வந்த பின்னால்... உன் முகத்தைப் பார்த்து எனக்கு என்ன ஆகப் போகிறது...?"

"இப்போதுதான் நான் அவரிடம் தாலியை வாங்கிக் கொண்டேனா...? அந்த இரண்டு நாள்களில் நடந்த நிகழ்வுகளில் அவர் என் கழுத்தில் தாலியைக் கட்டிய நிகழ்வும் ஒன்றாயிற்றே, சுதாகர்..."

மறைந்து நின்று கேட்டுக் கொண்டும்... பார்த்துக் கொண்டும் இருந்த செந்தில் மனம் வருந்தினான்...

'இவளுக்குத்தான் எவ்வளவு மன வலி...?'

'அது முறைப்படி கட்டப்பட்ட தாலியில்லையே...'

"எப்படிக் கட்டினாலும்... தாலி... தாலிதானே, சுதாகர்...?"

செந்திலின் மனதில் ரேவதி இமயமாக உயர்ந்து நின்றாள். சுதாகரோ விடாமல் வழக்கடித்துக் கொண்டு நின்றான்...

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா... ஒரு வேளை அவனுடைய வீட்டில் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்காமல் போயிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்...? என்னைத் தேடி வந்திருக்க மாட்டாயா...?"

"இல்லை, சுதாகர்... உங்களைத் தேடி வந்திருக்க மாட்டேன்... இந்தக் கல்யாணம் நான் விரும்பிச் செய்து கொண்டதில்லை... என்னைக் காப்பாற்றிய ஒரு நல்ல மனிதரை அவரைக் காதலித்தவளைக் கை விட வைத்தது இந்தக் கல்யாணம்... இது நடந்திருக்காவிட்டால்... அவர் நிம்மதியாகவும்... சந்தோசமாக வும் வாழ்ந்திருப்பார்... ஆனால் நான்... கடைசிவரை இந்தத் தாலியைக் கழற்ற முடியாமல் மனதிற்குள் போராடிக் கொண்டிருந்திருப்பேன்..."

செந்திலின் மனம் அசைந்தது...

## 17

சுதாகரின் முகம் ரத்தமெனச் சிவந்தது... அவன் ரௌத்ரமானான். ரேவதியிடம் ஆவேச மாகக் கேட்டான்....

"எனக்கு இதற்கு மட்டும் பதில் சொல்லு... என்னைக் காதலித்தாயா... இல்லையா...?"

"காதலித்தேன்..."

செந்தில் கண்களை இறுக மூடிக் கொண் டான்... ரேவதியின் வாயிலிருந்து வந்த வார்த்தை களில் வெளிப்பட்ட துயரம் அவனுடைய நெஞ்சை உலுக்கியது...

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று மனதார நினைத்தாயா... இல்லையா...?"

"நினைத்தேன்..."

பேசாமல் அங்கேயிருந்து போய் விடலாமா என்று செந்தில் யோசித்தான்...

"அப்புறம் ஏன் என்னை விட்டு வேறொருவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்...?"

"விதி..."

ரேவதியின் துயரம் மிகுந்த வார்த்தையில் விதி விளையாடியது. கோவிலுக்கு வந்த செந்திலின் மனம்... அவளுடைய இந்த வார்த்தையைக் கேட்டதும் மாறிவிட்டது...

சுதாகரிடமிருந்து விலகி ரேவதி வேகமாய்ப் போய் விட்டாள்... சுதாகர்... வேறு பக்கம் திரும்பிச் சென்று விட்டான்... செந்தில் தூண் மறைவிலிருந்து வெளிப்பட்டான்... மெதுவாக நடந்து கோவிலைச் சுற்றி முன் பிரகாரத்துக்கு வந்தான்... ரேவதி அங்கே ஒரு தூணில் சாய்ந்த வண்ணம் வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்...

'விதி விட்ட வழியென்று நினைத்து மறுகுகிறாளோ...' செந்தில் பெருமூச்சுடன் அவளருகில் அமர்ந்தான்... சட்டெனக் கவனம் கலைந்தது... அவள் அவனைப் பார்த்தாள்....

"போகலாமா...?" அவன் பற்றில்லாமல் கேட்டான்...

"ம்ம்..." அவள் உயிரில்லாமல் முணுமுணுத்தாள்...

இருவரும்... வேறு வேறு திசைகளில் பயணித்த மன உணர்வுகளுடன் வீட்டுக்குத் திரும்பினர்....

முதல் நாள் இரவைப் போல்... அவள் சுருண்டு ஒதுங்கிப் படுக்க.... அவன் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துத் தூங்கி விட்டான்... அன்றிலிருந்து... அது ஒரு தொடர்கதையாக ஆகிப் போனது...

வாகைக்குளம் திரும்பி வந்த பின்னால்... கவிதா அடிக்கடி செந்திலைப் பார்க்க வருவாள்... ஒருமுறை ரேவதி மாடி ஹாலில் இருக்கும் போது... செந்தில் அறைக்குள்

இருந்தாள்... படியேறி வந்த கவிதா... ரேவதியை அலட்சியமாய்ப் பார்த்தபடி... வினவினாள்...

"என் அத்தான் எங்கே...?"

'உன் அத்தானா...?' வெகுண்ட மனதை அதட்டி... அடக்கியபடி ரேவதி பதில் சொன்னாள்...

"பெட்ரூமில் இருக்கிறார்..."

"ஓ..."

உதட்டைக் குவித்து அழகாகச் சொல்வதாக நினைத்துக் கொண்டு வாய் கோணியவள்... அறைக்குள் புயலென நுழைந்து... கதவைச் சாத்திக் கொண்டாள்... ரேவதி விதிர்த்துப் போனாள்.... சற்று நேரத்தில் கதவைத் திறந்த செந்திலின் முகத்தில் கோபம் இருந்தது... அதை சட்டை செய்யாதவளாய்... அவனது கையைப் பற்றி...

"நான் போய் விட்டு வரவா அத்தான்..." என்று கொஞ்சி விட்டு அவள் படியிறங்கி விட்டள்...

பாதிப் படிகளில் நின்று திரும்பி... ரேவதியை ஒரு வெற்றிப் பார்வை பார்க்கவும் அவள் தவறவில்லை...

ரேவதி மனக் கொதிப்பை வெளியே காட்டாமல் துணிகளை மடித்துக் கொண்டிருந்தாள்... செந்தில் அவளையே உறுத்துப் பார்த்தான்....

"நான் ரூமில் இருக்கிறதை அவளிடம் சொன்னாயா...?"

"ம்ம்..."

"உனக்கு அறிவு இல்லையா...?"

அதுதான் செந்தில் முதன் முதலில் ரேவதியிடம் சீற்றம் கொண்டு பேசிய வார்த்தை... ரேவதியும் கொதிக்கும் மனத்தோடு இருந்தால் பதிலுக்குப் பேசிவிட்டாள்...

"ஏன்... என் அறிவுக்கு என்ன குறை...?"

"உன் புருசன் உள்ளே இருப்பதை இன்னொருத்தியிடம் சொல்லி... உள்ளே அனுப்புவதுதான் அறிவான செயலா...?"

"ஓ... பழியை என் மேல் போட்டாகிறதா...? உங்கள் மாமாவின் பெண்... உங்கள் ரூமிற்கு இன்றுதான் புதிதாய் வருகிறாளா...?"

முதலிரவின் போது... அவர்களது அறைக்குள் கவிதா பிரவேசித்ததை ரேவதி நினைவு படுத்துகிறாள் என்பதைப் புரிந்து கொண்டான் செந்தில்...

"அதனால்... உனக்கு வசதியாகப் போய் விட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா...?"

"இது என்ன புதுக்கதை...?"

"புதுக் கதையில்லை... பழைய கதைதான்... உன் காதலனிடம் விதி செய்த சதியால் எனக்குக் கழுத்தை நீட்டி விட்டதாகச் சொன்னவள்தானே நீ... விரும்பாத கல்யாணத்தை வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொன்னவளும் நீதானே... விரும்பாத புருசனிடம் எவள் வந்து பேசினாலும்... உன்னை அது பாதிக்காதுதான்..."

செந்தில் வார்த்தைகளைச் சிதற விட்டு விட்டான்... ரேவதி அதிர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

## 18

ரேவதி அன்று பார்த்த பார்வையை... அதன் பின்னால் செந்தில் அடிக்கடி நினைத்துப் பார்த்ததுண்டு... ஆவேசத்துடன்... அடி மனதின் அக்கினியை விழிகளில் ஏற்று அன்று அவள் பார்த்தாள்...

"இது உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"நான் கேட்டேன்..."

"மறைந்திருந்து கேட்டீங்களா...?"

"மறைய வேண்டுமென்ற அவசியம் எனக்கில்லை..."

"அப்படி அவசியமில்லாதவர் அன்றே என்னிடம் விளக்கம் கேட்டிருக்கலாமே"

"என்னை கல்யாணம் பண்ணிக் கொண்டதை நீ 'விதி' என்பாய்... அதற்கு உன்னிடம் நான் விளக்கம் வேறு கேட்க வேண்டுமா...?"

"ஆமாம்... கேட்டிருக்க வேண்டும்..."

"கேட்டிருந்தால் என்ன சொல்லியிருப்பாய்..."

"நான் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது என்று பதில் கேள்வி கேட்டிருப்பேன்..."

"தவறு இல்லையா...? நீ சொன்னதில் தவறே இல்லையா...?"

"ஆமாம்... தவறே இல்லை... இன்னார்க்கு இன்னார் என்பது இறைவன் போடும் முடிச்சு... அதை மாற்ற உங்களாலும்... என்னாலும் முடியுமா? எங்கோ பிறந்த நான்... சுதாகரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்பட்டேன்... வேறெங்கோ பிறந்த நீங்கள் கவிதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப் பட்டிங்க... நாம் நினைத்தது நடந்ததா...? இல்லையே.... ஏன்... அதுதான் விதி..."

"விளக்கம் பிரமாதம்..."

"இப்போதே பிரமாதமென்று சொல்லி விட்டால் எப்படி...? இன்னும் கேளுங்கள்... நாம் ஏன் பெரிய குளத்தில் ஒரே பÞஸில் ஏற வேண்டும்...? ஏன்... ஊரிலிருக்கிற மற்ற பÞஸையெல்லாம் விட்டுவிட்டு... நாம் ஏறிய பÞஸை மட்டும் தீவிரவாதிகள் கடத்த வேண்டும்...? ஏன் அவர்களில் ஒருவன் காமுகனாக இருக்க வேண்டும்...? ஏன்... அவனுடைய காமப் பார்வையில் நான் பட்டுத் தொலைக்க வேண்டும்? ஏன்... என்னைக் காப்பாற்ற நீங்கள் வர வேண்டும்...? என் அன்றைக் கென்று அவ்வளவு மழை பெய்ய வேண்டும்...? ஏன் ஆறு கரையை உடைக்க வேண்டும்...? ஏன்... நாம் அடைக்கலம் கேட்டுப் போன இடத்தில்... நம்மைக் கணவன் - மனைவியாக அவர்கள் பார்க்க வேண்டும்...? ஏன் உங்கள் கையில் தாலியை

கொடுத்து என் கழுத்தில் கட்ட வைக்க வேண்டும்...? ஏன்.. ஏன்.. ஏன்.. ஏன்.? இத்தனை ஏன்களுக்கும் உங்களிடம் விடை இருக்கிறதா... இருந்தால் சொல்லுங்கள்..."

செந்தில் பதில் பேச இயலாதவனாக நின்றான்... ரேவதி கேட்ட கேள்விகளில் இருந்த உண்மை அவனுக்குப் புரிந்தது...

"நீங்கள் பதில் சொல்ல மாட்டிங்க... ஏன்னா... உங்களுக்குப் பதில் தெரியாது... உங்களுக்கு இல்லை யாருக்குமே இதற்குப் பதில் தெரியாது... இவைகளைத் தான் நான் விதியென்று சொன்னேன்...

"ரேவதி..."

"தயவு செய்து இனி என்னுடன் தேவையில்லாமல் பேசாதீங்க... உங்களை எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்திருந்தேன், தெரியுமா? நீங்கள் என்னடாவென்றால்... 'விதி'... என்று நான் கடவுள் வகுத்ததைச் சொன்னதை... 'தலைவிதி'யென்று சலித்துக் கொள்வதாய் எடுத்துக் கொண்டீங்களே... இவ்வளவுதானா நீங்க..."

"இல்லை... ரேவதி..."

"வேண்டாம்... இனி இதைப் பற்றிய விளக்கம் எதுவும் எனக்கு வேண்டாம்... சுதாகரின் மனக்குமுறல் கேட்டவுடன் அவரிடம் நின்று ஒரு வார்த்தை விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருந்ததால் நின்று பேசினேன்... வேறு எந்த வித எண்ணமும் என் மனதில் இல்லை..."

"நீ என் நிலைமையையும் கொஞ்சம் யோசிக்க வேண்டும்..."

"என்ன நிலைமை... உங்கள் நிலைமை...? காலையில் தாலியைக் கழுத்தில் கட்டி விட்டு... பொழுது மயங்கும் போது... கட்டிய மனைவியின் கண் முன்னால்... காதலியைக் கட்டிப் பிடித்து ஆறுதல் சொன்னீங்களே... அதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றேனே... என் நிலைமையை விடவா... உங்கள் நிலைமை மோசமாகப் போய் விட்டது...?"

"ஏன் பேசாமல் நின்றாய்...?"

"என்ன பேசுவது...? எதைப் பேசுவது...?"

"உன் உரிமையைப் பேச வேண்டியதுதானே... யார் உன்னைத் தடுத்தார்கள்...? என்னை விட்டு விலகிப் போவதற்குப் பதில்... எதிர்த்துப் போராடியிருக்கலாமே... என்னை நான்கு கேள்விகள் கேட்டிருக்கலாமே... நானும் சந்தோசப்பட்டிருப்பேனே...?"

"எப்படிக் கேட்க முடியும்? கவிதாவின் வாழ்வைப் பறித்துக் கொண்ட குற்ற உணர்ச்சி எனக்கு இருக்காதா...? அவள் வாழ வேண்டிய வாழ்க்கையை நான் வாழ்கிறேனே என்ற உறுத்தல் எனக்கு இருக்காதா...? என்னால் எப்படி வாய் திறந்து பேச முடியும்...?

ரேவதி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் செந்தில் ஊமையாகிப் போனான்... ரேவதி அவனிடமிருந்து விலகிச் சென்றாள்...

## 19

ரேவதி அதற்குப் பின்னால் செந்திலிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை... அவளிடம் அவள் கொட்டிய மனக்குமுறலின் விளைவாகக் கவிதா அவனைத் தேடி வந்த போது... செந்திலே அவளுடன் தனிமையில் பேச ஆரம்பித்தான்... அதைக் கவனித்த ரேவதி... மனதிற்குள் இன்னும் நொறுங்கிப் போனாள்... அவன் வீட்டில் இருந்தால்... தோட்டத்திலும்... மொட்டை மாடியிலும் போய் நிற்க ஆரம்பித்தாள்...

மீனாட்சி இதைக் கண்டு பிடித்து விட்டாள்... திருமணமாகி வருடம் ஒன்றாகியும்... மகனும்... மருமகளும் இணக்கமில்லாமல் வாழ்வதைக் கணவனுக்கு உணர்த்த ஆரம்பித்தாள்... விசுவநாதன் மனைவியைக் கண்டித்தார்...

"அதுக்கு இப்ப என்னாங்கிறடி...?"

"என்னன்னு ஈஸியா சொல்லிட்டா எப்படி?"

"வேறு என்னத்தைச் செய்யச் சொல்கிற...?"

"இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்தது நீங்கதானே..."

"ஆமாம்.."

"இதில வருகிற நல்லது.. கெட்டதுக்குப் பொறுப்பும் நீங்கதானே..."

"அதுக்கு...?"

"ரெண்டு பேத்தையும் கூப்பிட்டு விசாரியுங்க..."

"அறிவு கெட்டவளே... இது புருசன்... பெண்டாட்டி விவகாரம்டி... இதில... மூன்றாம் மனுசங்க மூக்கை நுழைக்கக் கூடாது..."

"ஏங்க... நாம என்ன மூன்றாம் மனுசங்களா? பெத்தவங்க..."

"பெத்தவங்க கூட மூன்றாம் மனுசங்கதான்..."

"அப்போ... இதுக்கு என்னதான் வழி...?"

"நடக்கிறது நடக்கட்டும்டி..."

"அப்படி என்னால் விட முடியாது..."

"விடாமல் என்ன செய்யப் போகிற...?"

"என் மகனுக்கு இரண்டாம் கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறேன்..."

"நினைச்சேன்டி... அங்க சுத்தி... இங்க சுத்தி கடைசியில் இந்தப் பேச்சுக்குத் தான் நீ வருவேன்னு எனக்குத் தெரியும்டி... என்னடா... சோழியன் குடுமி... சும்மா ஆடுமான்னு பார்த்தேன்... கதை இப்படிப் போகுதா...? அடியேய்... இது ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பிரச்சனை... அதில நீ விளையாடிப் பார்க்கணும்னு நினைத்தால் உன்னைச் சும்மா விட மாட்டேன்..."

"ஒன்று அந்தப் பெண் இசைந்து வாழணும்..."

"இல்லேன்னா..."

"என் மகனை வாழ விட்டு ஒதுங்கணும்..."

"இங்கே பாருடி... காலம் போன கடைசியில... நீ ஒதுங்கிப் போயிராதே... உன்னை ஒதுக்கி வைக்கிற நிர்பந்தத்தை எனக்குக் கொடுத்துராதே... அவ்வளவு தான் நான் சொல்லுவேன்..."

மீனாட்சி வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே எழுந்து சென்று விட... விசுவநாதன்... அன்று மாலையில் மகனைத் தேடிப் போனார்... சர்க்கரை ஆலையிலிருந்தான் அவன்...

"என்னப்பா... என்ன செய்கிற...?"

"இதென்னப்பா கேள்வி... எப்பவும் போல... வேலையைப் பார்க்கிறேன்..."

"செந்தில்..."

"அப்பா..."

"கொஞ்சம் காலாற நம்ம தோப்புப் பக்கம் நடந்து விட்டு வரலாமா...?"

செந்தில் வியப்புடன் தகப்பனாரின் முகத்தைப் பார்த்தான்... பதில் பேசாமல்... அவரைப் பின் தொடர்ந்தான்....

மாலை நேரக் காற்று இதமாக அவர்களின் உடலை வருடிச் சென்றது... கூட்டிற்குத் திரும்பும் பறவைகளின் சத்தம் இடைவிடாமல் கேட்டது... வானம் மேகங்கள் இல்லாமல் நிர்மலமாய்க் காட்சி தந்தது...

"உன் அம்மா கவலைப்படுவது உனக்குத் தெரியுமா... செந்தில்...?"

"எதற்காகப்பா கவலைப்படுகிறாங்க...?"

"நீ ரேவதியுடன் ஒற்றுமையாய் வாழவில்லைன்னு தான்... வேறு என்ன...? இதோ பார் செந்தில்... புருசன்... பெண்டாட்டி சண்டை எப்பவும் நான்கு சுவத்துக்குள்ள இருக்கணும்... அதைத் தாண்டி வெளியே வரக்கூடாது..."

"எனக்கும் ரேவதிக்கும் சண்டையே இல்லையேப்பா.."

"அதுதான் எனக்கும் வருத்தமாக இருக்கிறது... உங்களைப் போல்... ஒருவர் மேல் இன்னொருவர் அன்பாக இருக்கிற புருசன் பெண்டாட்டியைப் பார்ப்பது அபூர்வம்... ஆனால் நீங்க இரண்டு பேரும் கிழக்கும் மேற்குமா... எதிரும்... புதிருமா பிரிஞ்சு நிற்கறீங்க... ஏன்...?"

"எனக்குச் சொல்லத் தெரியலைப்பா..."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்... உனக்குச் சொல்லத் தெரியவில்லை"

"என்னப்பா சொல்கிறீங்க..."

"உன் மனசில் இருக்கிற பிரியத்தை உன் பெண்டாட்டியிடம் சொல்லத் தெரியவில்லைன்னுதான் நான் சொல்கிறேன்..."

'எனக்கா சொல்லத் தெரியாது...?' கசப்பான புன் முறுவல் ஒன்று செந்திலின் இதழ்களில் உதயமானது...

'எப்படிச் சொல்வேன்ப்பா...? அவள்தான் என்னிடமிருந்து விலகி... விலகிப் போகிறாளே... விலகிப் போகிறவளை இழுத்துப் பிடித்துக் குடும்பம் நடத்த

எனக்கு விருப்பமில்லையேப்பா... அவள் மனதில் தைத்த முள்ளைப் பிடுங்கி எறியாமல் அவளை நான் நெருங்குவதும் எனக்குச் சாத்தியமில்லையேப்பா...'

## 20

வயலில் நீருக்குள் நடப்பட்டிருந்த நாற்று களையும்... அதில் நின்று கொண்டிருந்த நாரைகளையும் பார்த்தபடி செந்தில் மௌனமாக இருந்தான்... அவனது மனம் புரியாமல் விசுவநாதன் தன் போக்கிலல் பேசிக் கொண்டே இருந்தார்....

"எதையும் வாய் விட்டுச் சொல்லாமல் மனசில் போட்டு உழட்டிக்கிட்டு இருக்கிறதில எந்தப் பிரயோஜனமும் இல்லை... உன் அம்மா இதுதான் சாக்குன்னு உனக்கு இரண்டாம் கல்யாணம் பண்ணிப் பார்க்க அலைகிறாள்..."

"என்னது...?"

"உனக்கு அதிர்ச்சியாயிருக்கு... எனக்கு அதிர்ச்சியே இல்லை... பொழுது விடிஞ்சு... ஜாமமாகிற வரைக்கும்... டிவியைக் குத்தகைக்கு எடுததுக்கிட்டு டிவி முன்னாலேயே குடியிருக்கிறா... ஊருப்பட்ட சீரியல்... அதில ஒன்னுலயாவது இரண்டாம் கல்யாணம் வராமல் இருக்கா...? இது ஒரு நச்சு விதை செந்தில்... ஒருவனுக்கு ஒருத்தி என்பது மாறி... இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் தவறில்லை... அது இயல்பான விசயம்ன்னு மனுசக் கழுதை மனதில் ஏத்திக்கிட்டு இருக்காங்க... அதைப் புரியாமல் உன் அம்மா... தானும் ஒரு பொம்பளை தான்கிறதை மறந்து... இன்னொரு பெண்ணுக்கு எதிரியாகப் பார்க்கிறா...."

"ரேவதி... அம்மா எவ்வளவு பேசினாலும் வாயைத் திறக்கவே மாட்டாளேப்பா..."

"அதுதங்கமான பொண்ணு... அதோட அருமை உன் அம்மாவுக்கும் தெரியலை... உனக்கும் தெரியலை..."

"என்னப்பா இப்படிச் சொல்கிறீங்க..."

"நானும் கவனிச்சுக்கிட்டுத்தான்டா வருகிறேன்... நேற்றைக்குக் கூட நான் மருமகப் பெண்ணோட சமையலைப் பத்தி எவ்வளவு புகழ்ச்சியாய்ப் பேசினேன்... நீ பாராட்டி ஒரு வார்த்தை சொன்னாயா...?"

"அவ எதைச் செய்தாலும்... நல்லாவே செய்வா... அவ செய்வதற்கெல்லாம் பாராட்ட ஆரம்பித்தால்... நமக்குத்தான் வாய் வலிக்கும்..."

மகனின் சாதுர்யமான பேச்சைக் கேட்டு விசுவநாதன் சிரித்து விட்டார்...

"இந்தக் கெட்டிக்காரத்தனத்தைக் குடும்பம் நடத்துவதில் காண்பி... உனக்கும் கல்யாணமாகி வருசம் ஒண்ணாகிடுச்சு... இன்னும் மனசு ஒட்டாம இருந்தால் எப்படி...? உனக்கும்... உன் பெண்டாட்டிக்கும் ஆயிரம் இருக்கட்டும்... அதைத் தனியறையில் வைத்துக் கொள்... உன் அம்மாவிற்கும்... எனக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்... உன் அம்மாவுக்கு ஒரு விசயம் தெரிந்தால் அது ஊருக்கே தெரிந்தது போல... புரிந்ததா...?"

"ம்ம்..."

"என்னடா... அப்பா... நம்ம விசயத்தில் இவ்வளவு மூக்கை நுழைக்கிறார்ன்னு நினைக்காதே... இந்த ஒரு வருசமா நீங்க ஒற்றுமையில்லாம இருக்கிறதை நான் கண்டும் காணாமல்தான் இருந்தேன்... உன் அம்மா பேசினாலும் அதைக் காதில் போட்டுக்க மாட்டேன்... ஆனால்... இப்ப நிலைமை சிக்கலாயிடும் போல இருக்குடா. உன் அம்மா மனசில்... உன்னையும்... ரேவதியையும் பிரிக்கணும்கிற எண்ணம் விழுந்துருச்சு... இதை வளர விடுவது ஆபத்து... புரியும்ன்னு நினைக்கிறேன்..."

"புரியுதுப்பா..."

"உனக்குப் புரிந்தால் மட்டும் போதாது... ரேவதிக்கும் புரியவை..."

"ம்ம்ம்..."

அவர்கள் வீடு திரும்பினார்கள்... வழக்கம் போல்... மீனாட்சி டிவியின் முன் உட்கார்ந்து சீரியலில் ஆழ்ந்திருந்தாள்...

"இதைச் சொல்லு... ஏன்டி... விளம்பர இடைவேளையிலாவது காபி கொடுப்பாயா....?"

"ஊம்... பார்க்கலாம்... பார்க்கலாம்... இப்பல்லாம் விளம்பரங்களும் சீரியல் போலவே வருது..."

பெற்றோரின் பேச்சைக் கேட்டுச் செந்திலுக்கு சிரிப்புத் தான் வந்தது... 'ரேவதி... எங்கே...'யென்று அவனுடைய கண்கள் தேடின... அவள் சமையலறையிலிருந்து காபித்

தம்பளர்களுடன் வெளிப்பட்டாள்... மருமகளைப் பரிவுடன் பார்த்தபடி காபியை வாங்கிக் கொண்டார் விசுவநாதன்... அவள் செந்திலின் அருகே செல்லும் போது அவன் மாடிப் படியில் ஏற ஆரம்பித்தான்...

"காபி..." ரேவதியின் குரல் அவனைத் தடுத்தது... திரும்பிப் பார்த்தான்...

"மாடிக்குக் கொண்டு வா..." அவன் மடமடவென்று போய் விட்டான்...

ரேவதி யோசனையுடன் அவனைத் தொடர்ந்து மாடியேற... மீனாட்சியின் புருவங்கள் உயர்ந்தன... விசுவநாதன் மனத்திற்குள் மகனைப் பாராட்டியவாறு காபியைப் பருக ஆரம்பித்தார்...

ரேவதி அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போன போது செந்தில் சட்டையைக் கழற்றிக் கொண்டே... நிதானமாய் அவளைப் பார்த்தான்... அதற்கு முன்னால்... அவன்... அவள் முன்னிலையில் உடை மாற்ற முயன்றதில்லை...

ரேவதி முகம் சிவக்க... தன் வழக்கப்படி காபியை டீப்பாயின் மேல் வைத்து விட்டு வெளியேறப் போனாள்...

"ரேவதி..." செந்தில் அதட்டினான்...

"ம்ம்..." அவள் தான் என்ன தவறு செய்தோமென்ற யோசனையுடன் அவனைப் பார்த்தாள்...

"எங்கே போகிறாய்...?"

"கீழே..."

செந்தில் எரிச்சலை முகத்தில் வெளிப்படையாகக் காண்பித்தபடி சென்று அறைக் கதவை மூடிவிட்டு வந்தான்... ரேவதி புரியாதவளாய் அவனையே பார்த்துக் கொண்டு நின்றான்...

செந்திலின் முகத்தில் ஒருவருடமாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்த தாபமும்... அது நிறைவேறாத கோபமும் வெளிப்படையாகத் தெரிந்தது... சட்டையைக் கழற்றி சோபாவில் விசிறி விட்டு... வெறும் பனியன்.. பேன்டோடு நின்றவனைப் பார்க்கச் சங்கடப்பட்டுக் கொண்டு ரேவதி பார்வையைத் தழைக்கவும் அவனது கோபம் இன்னும் அதிகமானது...

"ரேவதி..."

"ம்ம்..."

"என்னைப் பார்..."

செந்திலின் குரலில் என்றுமில்லாமல் அன்று கண்டிப்பு அதிகமாகத் தெரிய... ரேவதி தயக்கத்துடன் பார்வையை உயர்த்தினாள்...

"நான் யார்...?"

"இது என்ன அர்த்தமில்லாத கேள்வி..."

ரேவதி பதில் பேசாமல் நிற்க... செந்திலின் குரல் உயர்ந்தது...

"சொல்லுடி... உனக்கு நான் யார்...?"

"சொல்லு... டீ... யா...?"

"ஆமாம்... இப்ப அதுக்கு என்னாங்கிற...? நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு... நான் யார் உனக்கு...?"

"ச்சு... இதென்ன கேள்வின்னு கேட்கறீங்க..."

"அதுதான் கேட்டுட்டேனில்ல... பதில் சொல்லு..."

"என்னத்தைப் பதில் சொல்ல...?"

"உன் மனசில் என்னை யாருன்னு நினைத்துக் கொண்டு இருக்கிறாய்... தெருவில் போகும் வழிப்போக்கனாகவா...? அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் அதையும் சொல்லி விடு..."

ரேவதி அடிபட்ட பார்வை பார்க்க... செந்தில் அசைந்து கொடுக்காமல் பிடிவாதமாக நின்றான்...

"ஏன் இப்படியெல்லாம் இன்றைக்குப் பேசுகிறீங்க..."

ரேவதி குரல் கம்மக் கேட்டாள்... செந்தில் இரக்கமில்லாமல் அவளை உறுத்துப் பார்த்தான்...

"ஏனா...? ஏனென்றால்... என்னை நீ என்னவென்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறாயென்று எனக்கு இன்றைக்குத் தெரிய வேண்டும்... வாயைத் திறந்து சொல்..."

"சொல்லு... சொல்லுன்னா எதைச் சொல்ல....?"

"நான் உனக்கு யார்...?"

"கடவுளே... எனக்கு இருக்கும் இம்சைகள் போதாதா...?"

"நான் பேசுவது உனக்கு இம்சையாக இருக்கிறதா...?"

"நான் அப்படிச் சொன்னேனா...?"

"வேறு எப்படிச் சொன்னாய்...?"

"இப்போது உங்களுக்கு என்னதான் வேண்டும்...?"

"என் கேள்விக்குப் பதில் வேண்டும்..."

"பதில் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய உறவா நம் உறவு...?"

"பேச்செல்லாம் வெல்லக்கட்டி போல் நன்றாகத்தான் பேசுகிறாய்... சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தானே என்னை நீ வைத்திருக்கிறாய்...?"

"இன்றைக்கு உங்களுக்கு என்னவோ ஆகிவிட்டது..."

"நான் இல்லையென்று சொல்லப் போவதில்லை"

"நீங்கள் என்னுடைய புருசன்... போதுமா...? காது குளிர்ந்ததா..."

"போதாது... என் மனம் இன்னும் குளிரவில்லை..."

செந்தில் சட்டென்று அவளை இழுத்து அணைத்து... அவளது கன்னத்தில் முத்தமிட்டு விட்டான்... அதைச் சற்றும் எதிர்பார்க்காத ரேவதி நிலை குலைந்து போனாள்... சட்டென்று அவனிடமிருந்து விலகி நின்றாள்...

"என்ன... இது...?" நடுக்கத்துடன் முகம் சிவக்கக் கேட்டாள்....

"தெரியவில்லையா...? முத்தம்..." அவன் உல்லாசமாகச் சிரித்தான்...

"புதிதாக இது என்ன?"

"புதிதா...? நீ என் பெண்டாட்டியாகி ஒரு வருசத்திற்கு மேல் ஆகிவிட்டது... நினைவிருக்கிறதா...?"

"இத்தனை நாள்... உங்களுக்கும்தான் இந்த நினைவில்லாமல் இருந்தது... இன்று மட்டும் புதிதாய் என்ன நினைவுக்கு வந்து விட்டது...?"

உணர்ச்சி வேகத்தில் தன்னையுமறியாமல் ரேவதி கூறிவிட்டு... நாக்கைக் கடித்துக் கொண்டாள்...

'இத்தனை நாள்... ஏன் என்னைத் தொடவில்லையென்று அவள் கேட்பதாக அவன் நினைத்துக் கொள்ள மாட்டானா? யோசிக்காமல் பேசிவிட்டேனே...'

அவள் நினைத்தது போலவே... அவனது கண்கள் மின்னின... அவன் அவளை நெருங்கினான்... அவள் பாய்ந்து சென்று கதவைத் திறக்கப் போனாள்...

"நில் ரேவதி... எனக்குக் காபியை எடுத்துக் கையில் கொடுத்து விட்டுப் போ..." என்றான் செந்தில்...

அவன் குரல் பிடிவாதமாக ஒலிக்க... ரேவதி தயக்கத்துடன் வந்து காபியைத் தொட்டாள்... தம்ளர் சில்லென்று இருந்தது...

"அடடா... ஆறிவிட்டதே..." அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அவன் கூர்மையாக அவளைப் பார்த்தான்... அவனது பார்வை ஏதோ பேசப் போகிறான் என்பதை உணர்த்த

ரேவதி... மனம் படபடக்க நின்றிருந்தாள்...

"ஒரு காபி கூட ஆறி விட்டால் ருசிப்பதில்லை ரேவதி... மனிதர்களின் உணர்வும் கூட அப்படித்தான்..."

அவனது கைகள் அவளை அணைத்துத் தன் வசப்படுத்திக் கொண்டன... ரேவதி விடுபட முடியாமல் அவனுடைய பிடியில் அகப்பட்டுக் கொண்டாள்....

## 22

செந்தில்... அணை உடைந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்தான்... ரேவதி முகம் சிவக்க... விடுபட முயன்றாள்... அவளால் அது முடிய வில்லை... மெல்ல... அவள் தன்னிலை மறந்து... அவன் வசமாகிக் கெர்ணடிருந்த போது... அறைக் கதவு படபடவென்று தட்டப்பட்டது... ரேவதி சட்டென்று அவன் பிடியிலிருந்து விலகினாள்... செந்திலின் முகத்தில் ஏமாற்றமும்... கோபமும் அப்பட்டமாகத் தெரிந்தது... எரிச்சலுடன் சென்று கதவைத் திறந்தான்...

"கதவைத் திறக்க இவ்வளவு நேரமா...? ஏன் அத்தான்..." என்றபடி அறைக்குள் வந்தாள்... கவிதா...

ரேவதியின் உடலில் பொங்கியெழுத்திருந்த உணர்வுகள் தண்ணீர் பட்ட சுடுபாலாய்... அடங்கிப் போயின... அவள் முகம் இறுகியது...

கவிதா... சிவந்திருந்த ரேவதியின் முகத்தை பார்த்தாள்... கலைந்திருந்த அவளது தலையைப் பார்த்தாள்... கசங்கியிருந்த அவளது உடையைப் பார்த்தாள்.

தன்னை ஆராயும் கவிதாவின் பார்வை ரேவதியை அருவருக்க வைத்தது... அவளது முகம் இன்னும் இறுகியது... மௌனமாகக் காபித் தம்பளரை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேற முயன்றாள்...

"எங்கே போகிறாய் ரேவதி..." செந்தில் கோபத்துடன் கேட்டான்...

"கீழே..." அவன் முகம் பார்க்காமல் பதில் சொன்னாள் ரேவதி...

"நான் இங்கேயிருக்கிறேன்... கீழே உனக்கு என்ன வேலை...?" செந்தில் ரேவதியைத் தடுத்துக் கொண்டிருக்கும் போது...

"அவளுக்குக் கீழே ஆயிரம் வேலைகள் இருக்கும்... அவள் போகட்டுமே... உங்களுக்கு என்ன வேண்டுமென்று என்னிடம் சொல்லுங்கள், அத்தான்... நான் உங்கள் பக்கத்தில் இருக்கும் போது அவளுக்கு இங்கே என்ன வேலை...?" என்று ஊடே குறுக்கிட்டுச் சொன்னாள் கவிதா...

ரேவதியின் முகம் கன்றிச் சிவந்தது... அடிபட்ட வலியின் வேதனை கண்களில் தெரிய... அதை மறைக்க முயன்றவளைக் கவிதா ஏளனமாகப் பார்ப்பதை... உணர்ந்த செந்தில் கோபம் அதிகமானான்...

"ரேவதி... அந்தக் காபி தம்பளரை ஏன் கட்டிக் கொண்டு அழுகிறாய்..? அதை முதலில் அங்கே வை..." செந்தில் அதட்டினான்...

"அது எதற்கு அத்தான் வேÞடாக இந்த ரூமில் இருக்க வேண்டும்? அவள் கீழே கொண்டு போய்க் கொட்டட்டுமே..." கவிதாவின் பார்வையின் பொருள் ரேவதிக்குப் புரிந்தது...

'வேÞடாக இந்த ரூமில் இருப்பது... காபி மட்டுமில்லை... நீயும்தான்...' என்று சொல்லாமல் சொல்கிறாள்... ரேவதியின் மனம் இன்னும் வலித்தது...

"ரேவதி... அதை வைக்கப் போகிறாயா இல்லையா...?"

இப்போது செந்தில்... தானே அந்தக் காபித்தம்பளரைப் பிடுங்கி அங்கிருந்த டீப்பாயின் மேல் வைத்தான்...

"இப்படி உட்கார்..." என்று ரேவதியை அங்கிருந்த சோபாவில் அமர வைத்து... தானும் அருகே அமர்ந்து கொண்டான்...

இதை எதிர்பார்க்காத கவிதாவின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது... அவள் கண்கள் சிவக்கச் செந்திலை உறுத்து விழித்துப் பார்த்தாள்...

"அத்தான்... என்ன இது...?"

"எதைச் சொல்கிறாய்... கவிதா...?"

"நான் உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்..."

"பேசு..."

"நீங்கள் தனியாகவா இருக்கிறீங்க..."

"ரேவதிதானே இருக்கிறாள்..."

"அவள் எதற்கு நமக்கு நடுவில்... அவளைக் கீழே போகச் சொல்லுங்கள்..."

"இதென்ன பேச்சு கவிதா... அவள் ஏன் கீழே போக வேண்டும்? அவள் என் பெண்டாட்டி... என்னுடன்தான் இருப்பாள்... நீ சொல்ல வந்ததைச் சொல்லு..."

"இவளை வைத்துக் கொண்டு... நான் எப்படிச் சொல்வது...?"

"இவளை வைத்துக் கொண்டுதான் நீ இனிப் பேசிப் பழக வேண்டும்..."

"இது என்ன அத்தான் புதுப்பழக்கம்...? இத்தனை நாளும் இவள் உங்கள் பெண்டாட்டின்னு உங்களுக்கு மறந்து விட்டதா...? இவளில்லாமல் தனிமையில் பேசித்தானே நமக்குப் பழக்கம்...?

"இத்தனை நாளும் தனிமையில் நான் உன்னிடம் என்ன சொன்னேன், கவிதா... எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது... இது ஓர் வழிப் பாதை... திரும்ப முடியாது... நீ உனக்கென்று உன் வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நிம்மதியாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றுதானே படித்துப் படித்துச் சொன்னேன்... அது உன் தலையில் ஏறிய பாடில்லை... இனி உன்னைப் பற்றிக் கவலைப்படுவதை விட என்னைப் பற்றிக்

கவலைப்படுவதே சரியாக இருக்கும் என்ற முடிவிற்கு நான் வந்துட்டேன் கவிதா... இனி உன் வாழ்க்கை உன் பாடு... நான் செய்வதற்கு எதுவுமில்லை..."

செந்தில் பேசியதைக் கேட்டு ரேவதி விழிவிரியத் தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள்...

'இத்தனை நாள்களாகத் தனிமையில் இதைத்தான் பேசினீர்களா...?' என்று அவள் விழி கேட்டது... முகம் விகசித்தது... அதைக் கண்ட கவிதாவின் முகம் குரோதத்தைக் கக்கியது... தான் போட்ட வேடம் கலைந்து விட்டதை உணர்ந்து கொண்டாள் அவள்... அவள் கண்முன்னேயே பரிவாகச் செந்தில்... ரேவதியின் தோள் மேல் கை போட்டு அணைத்துக் கொண்டான்...

## 23

கவிதாவினால் தன் தோல்வியைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை... அவளுடைய கிராமத்திலேயே அவளுடைய தகப்பனார்தான் முதன்மையானவர்... வசதியும்... வளமும் கொழிக்கும் பெற்றோருக்கு ஒரே பெண்ணாகப் பிறந்து வளர்ந்தவள்... அவங்களுக்கு சமமான அந்தÞதுடைய மாப்பிள்ளையாகச் செந்தில் மட்டுமே... அவளுடைய உறவு வட்டாரத்தில இருந்தான்... இரண்டு வீட்டாரும் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்வதைப் பற்றி நிச்சயமாகப் பேசி வைத்திருந்தனர்... அதனாலேயே கவிதா செந்திலின் பின்னால் சுற்றிச் சுற்றி வந்தாள்...

அத்தோடு... செந்திலின் தோற்றமும் அவளை ஈர்த்தது... மாநிறமாய்... உயரமாய்... களையான முகத்துடன் இருப்பவனைச் சொந்தம் கொண்டாடுவது அவளுக்குப் பிடித்தமானதாக இருந்தது... அந்தச் சொந்தம் ஒரு நாள் பறிபோனது... அவளிருக்க வேண்டிய இடத்தில் ரேவதி வாழ வரப் போகிறாள் என்ற செய்தியை அறிந்ததும் கவிதாவின் மனதில்... காதல் தோல்வியினால் ஏற்படும்

வலி உருவாகவில்லை... மாறாக... செந்திலை விட அழகானவனாக... படித்தவனாக... பணக்காரனாக... ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு... செந்திலை மட்டம் தட்ட வேண்டுமென்ற வெறிதான் அவள் மனதில் மூண்டது...

"அப்பா... எனக்கு... வெளிநாட்டில் வேலை பார்க்கும் மாப்பிள்ளையாகப் பாருங்கள்... அதுவும் கூடிய சீக்கிரமே..."

கவிதா... செந்திலிடம் பேசிவிட்டு வந்த அன்றே தன் தந்தையிடம் இதைச் சொல்லிவிட்டாள்... அவரும் மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விட்டார்... ஆனால்... வந்த மாப்பிள்கைளில் கவிதா எதிர்பார்ப்பதற்குத் தகுந்தது போல ஒரு மாப்பிள்ளை கூட அமையவில்லை... ஒன்றிருந்தால்... ஒன்றில்லை என்ற நிலைமையில்... அவளது தந்தையே சலித்துக் கொண்டார்...

"என்னம்மா இது... மற்றது கொஞ்சம் முன்னே... பின்னே... இருந்தாலும்... நீ கொஞ்சம் அனுசரிச்சுப் போகக் கூடாதா...? நீ பிடிச்ச முயலுக்கு மூன்று கால்தான் இருக்க வேண்டும்ன்னு நீ எதிர்பார்த்தால் கூடப் பரவாயில்லை... ஒன்றைக்கால் தான் இருக்கணும்னு பிடிவாதம் பிடித்தால்... நான் எங்கேன்னு போய்த் தேடுவேன்..."

"அப்பா... நீங்க என்ன புலம்பினாலும்... எனக்கு நான் கேட்கிற அனைத்துத் தகுதிகளும் இருக்கிற மாப்பிளை தான் வேண்டும்..."

"ஏம்மா... செந்திலை மனதில் நினைத்துக் கொண்டு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாயா...?"

"யார்... யாரை மனதில் நினைத்துக் கொண்டிருப்பது...? இன்னொருத்தியின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டவனை நினைத்துக் கொண்டிருக்க நானென்ன முட்டாளா...?"

"இல்லைம்மா... சின்ன வயது முதல் உயிருக்குயிராய்ப் பழகி விட்டு... இப்போ மறந்து விட்டு இருக்கிறதுன்னா உனக்குச் சங்கடமாய்த்தான் இருக்கும்..."

"உயிருக்குயிராய்ப் பழகினேனா...? நானா...? போங்கப்பா... கண்ணுக்கு முன்னால... அவன் குடும்பம் தான் வசதியாய் இருக்கிறது... இவன் எனக்குத் தோதான மாப்பிள்ளைன்னு தோணியது.... பழனினேன்..."

"அப்புறமும் ஏம்மா... அடிக்கடி அவன் வீட்டுக்குப் போய் அவனைப் பார்த்துப் பேசி விட்டு வருகிற...?"

"அப்பா... என்னை விட இன்னொருத்தி மூக்கும்... முழியுமாய்... லட்சணமாய் இருக்கிறான்னு அவள் கழுத்தில் தாலியைக் கட்டினானில்ல... அவ கூட அவன் குடும்பம் நடத்தற லட்சணம் எப்படின்னு பார்த்து விட்டு வரத்தான் அடிக்கடி அங்கே போகிறேன்... வேறு வேலையில்லாமல் போகவில்லை..."

கவிதாவின் நோக்கமே வேறு.. தான் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்னால்... செந்தில் வாழ்க்கையைத் தொடங்கி விடக்கூடாது... அதோடு... செந்திலுக்கும்... ரேவதிக்கும் இடையில் ஏற்படும் இடைவெளி... பின்னாளில் நிரப்ப முடியாத பள்ளமாக ஆகிவிடக்கூடிய வாய்ப்பும் உண்டு... எனவே ஆரம்பதிலேயே... அவர்களுக்கு இடையில் மனதளவில் ஒட்ட விடாமல் செய்து விட வேண்டும்...

போதாக் குறைக்குச் செந்திலிடம் தனியறையில் உட்கார்ந்து பேசுவதைக் கவிதா வேண்டுமென்றே வழக்கமாக்கிக் கொண்டாள்... செந்தில் என்னவோ அவளுக்கு அறிவுரை சொல்லி நல்வழிப்படுத்த எண்ணித்தான் அவளுடன் தனிமையில் பேசிவந்தான்... ஆனால் அவள் செந்திலிடம் தலையைத் தலையை ஆட்டி... வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அறிவுரை கேட்டுவிட்டு அறையை விட்டு வெளியே வரும் போது ரேவதியிடம் ஒரு வெற்றிப் பார்வையைச் செலுத்திவிட்டுச் செல்வாள்...

இன்று... அறையினில் நடந்த பேச்சு வார்த்தை என்னவென்பதைச் செந்தில் தன் வாயாலேயே சொல்ல... கவிதா... தன் வெற்றிக் கேட்டை... சீட்டுக் கோட்டையாய் மாறிச் சரிவதைக் கண்டாள்...

ரேவதியின் முகம் மலர்ந்திருந்தது... தன் தோள் மேல் கிடக்கும் கணவனின் கையை நம்ப முடியாத பிரமிப்புடன் பார்த்தாள் அவள்...

"அப்போ... நீ கிளம்பு கவிதா..." செந்தில் ரேவதியின் பக்கம் திரும்பி எதையோ கேட்க ஆரம்பித்தான்...

கவிதா முகம் சிவக்க எழுந்து கொண்டாள்... அறையை விட்டு வெளியேறும் போது... வழக்கமாக ரேவதியைப் பார்க்கும் வெற்றிப் பார்வையை இன்று அவளால் பார்க்க முடியவில்லை... அதை அவளால் தாங்கிக் கொள்ளவும் முடிய வில்லை... அந்தக் குரோதத்துடன் படியிறங்கி வந்தவளைப் பார்த்த மீனாட்சி...

"என்னம்மா கவிதா... அதற்குள் வந்து விட்ட...?" என்று கேட்டு வைத்தாள்...

விசுவநாதன் ஊர்க்காரர்கள் சிலர் தேடி வந்திருந்ததால் அவர்களுடன் பேசச் சென்று விட... தனிமையில் டிவி பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சி... சாதாரணமாய்க் கேட்ட கேள்வியில் கவிதா அணை உடைத்த வெள்ளமாய் அழ ஆரம்பித்தாள்... மீனாட்சி பதறிப் போய் டிவியை அணைத்து விட்டு... கவிதாவை உட்கார வைத்து விவரம் கேட்டாள்...

"ஏம்மா அழறே... பெண்ணாய்ப் பிறந்தவள் வீட்டில் விளக்கு வைத்தபின் கண்ணீர் விடக் கூடாதும்மா... அது அந்த வீட்டிற்கு ஆகாது..."

"ஏன் அத்தை... நான் கண்ணீர் விட்டால் உங்கள் வீட்டிற்கு ஆகாது என்ற கவலைதானே உங்களுக்கு...? நான் கண்ணீர் விடுவதைப் பற்றிக் கவலையில்லையே..."

அடி ஆத்தி... நான் அப்படிச் சொல்லுவேனா... என் அண்ணன் அவரு மகளை... தங்கத்தாம்பாளத்தில் நிறுத்தி.... தரையில பாதம் பட விடாமல் வளர்க்கிறாருன்னு எனக்குத் தெரியாதா...? உன் கண்ணில் ஒரு சொட்டுக்

கண்ணீர்த் துளி வந்தால்... என் அண்ணன் மனசில ரத்தம் கொட்டுமேடி தங்கம்... உன்னைப் போய் நான் அப்படி ஒரு வார்த்தையைச் சொல்லுவேனா...?"

கவிதா அதில் சமாதானமாகாமல் மேலும் அழுகையை அதிகப்படுத்தினாள்...

"எதுக்கும்மா அழுகறே... சொன்னால்தானே தெரியும்...?"

"அத்தை... அப்பா போன வாரம் எனக்கு வைர நெக்லÞ ஒன்று வாங்கி வந்தார்..."

"நிசமாவா...? உனக்கு இருக்கிற வைரமும்... வைடூரியமும் போதாதுன்னு எங்கண்ணன் இன்னும் வாங்கிக் குவிக்கிறாரா? ஒற்றைப் பொண்ணில்லையா...? உனக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போகிறார்..."

"எனக்கு இதிலெல்லாம் பிடிப்பு விட்டுப் போச்சுத்தை..."

"ஏம்மா அப்படிச் சொல்கிற...? தங்கத்தையும்... வைரத்தையும் பிடிக்காதுன்னு சொல்கிற முதல் பெண் பிள்ளை நீதான்..."

"என்னவோ போங்க அத்தை... இதெல்லாம் யார் வீட்டுக்கோ நான் கொண்டு போகப் போகிறேன்... அதை நினைத்தால்தான் எனக்கு மனம் அறவில்லை..."

"அதைச் சொல்லு... வைகை ஆற்றுப் பாசனம்... தோப்பும்... துரவும்... வயலும்... பத்தாக்குறைக்கு டவுனில் இருக்கிற நாலு பங்களாவும் எந்த மகராசன் கைக்குப் போகப் போகிறதோ..."

மீனாட்சி ஆற்றாமையுடன் கூற... கவிதா அதைக் குரூரமான பார்வையுடன் அளவிட்டாள்...

'வயிறு எரிகிறாயா... அப்படித்தான் உன் வயிறு எரிய வேண்டும்... என் சொத்துப் போகிறதே என்று நீ வயிற்றில் அடித்துக் கொள்ள வேண்டும்... உன் வயிற்றெரிச்சலில் உன் மருமகளின் நிம்மதி காணாமல் போய் விட வேண்டும்... உன் மனதில் பற்றியெரியும் தீயில்... அவளது உல்லாசப் பூரிப்பு பொசுங்கிச் சாம்பலாக வேண்டும்..."

கவிதாவிற்கு மீனாட்சியைப் பற்றி மிக நன்றாகத் தெரியும்.... அவளுக்குக் கவிதாவின் மீதோ... இல்லை, அவளுடைய குடும்பத்தின் மீதோ பாசப் பிணைப்பு என்பது கிடையவே கிடையாது... அவளுடைய நோக்கமெல்லாம் கவிதாவின் சொத்து அனைத்தும் சேர்ந்தால்... அந்த வட்டாரத்திலேயே அவளுடைய குடுபம்தான் யாராலும் எட்டி பிடிக்க முடியாத பணக்காரக் குடும்பமாகிவிடும். அதற்காகவே கவிதாவின் மீது பாசமழை பொழிந்தவள் அவள்...

"அத்தை... நான் சொல்ல வேண்டாமென்றுதான் பார்க்கிறேன். இருந்தாலும் மனசு கேட்கவில்லை..."

"என்னம்மா...?"

"எனக்கு வரும் மாப்பிள்ளைக்காக வெளிநாட்டுக் கார் புக் பண்ணியிருக் கிறாராம் அப்பா..."

"ம்ஹும்... எவனுக்குக் கொடுத்து வைக்கிறதோ..."

"எனக்குத்தான் உங்க மருமகளாகிற கொடுப்பினை இல்லாமல் போய்விட்டது... அதை நினைத்துத்தான் அழுகிறேன், அத்தை..."

கவிதா மீண்டும் கண்ணீர் சிந்திய நேரத்தில்... மாடியில் இருந்து முகமெல்லாம் சிரிப்புடன் ரேவதி இறங்கி வந்தாள்....

## 25

கவிதா வெளியேறியவுடன்... செந்தில் எழுந்து அறைக் கதவைத் தாழிட்டான்... ரேவதி முகம் சிவக்க... மனமெல்லாம் ஓர் எதிர்பார்ப்புடன் எழுந்து ஜன்னலோரம் சென்று நின்று கொண்டாள்.

செந்தில் திரும்பி அவளைப் பார்த்தான்... ஜன்னலில் தலை சாய்த்துத் தாமரைக் கொடி போல் அவள் நின்று

கொண்டிருந்த தோற்றம் அவனை ஈர்த்தது... எதிரில் நிற்பவள் தன் மனைவி... தனக்கே உரியவள் என்ற எண்ணம் அவனுள் கிளர்ச்சியை ஏற்படுத்த அழுத்தமான காலடிகளுடன் அவளை நெருங்கினான்...

'இதோ வரப்போகிறான்... இதோ வந்தே விட்டான்...' ரேவதி உடல் நடுங்க... கண்களை இறுக மூடிக் கொண்டாள்...'

அவளை அதிக நேரம் தவிக்க விடாமல்... அவளது தோள் தொட்டுத் தன் பக்கம் திருப்பி அவளது முகம் பார்த்தான் செந்தில்... அவள் நடுக்கத்துடன் சட்டென்று அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்... செந்தில் அவளது முகம் நிமிர்ந்திப் பார்க்க முயன்றான்... அவள் முகத்தை உயர்த்த மறுத்து மீண்டும் அவள் மார்பில் தலை சாய்த்துக் கொள்ளவும்... அவளது வெட்கத்தை ரசித்த சிரிப்பு ஒன்றைச் சிந்தினான் செந்தில்...

"ரேவதி..." அவனது குரல் அவளது காதோரமாய் ஒலித்தது...

"ம்ம்ம்..." அவளிடமிருந்து மெல்லிய முணுமுணுப்பு மட்டுமே பதிலாக வந்தது...

"நான் உன்னுடையவன் ரேவதி..." செந்தில் அவளது காதோரமாய்க் கூறினான்...

அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை சக்தி...!

அவள் சட்டென்று விழி மலர்த்தி அவன் முகத்தை ஆவலுடன் அண்ணாந்து பார்த்தாள்...

"நிஜமாகவா...?"

"நான் நிஜமில்லாததைச் சொல்வேனென்று நீ நினைக்கிறாயா...?"

"இல்லை..."

"ரேவதியின் கை அவனது தோளைத் தொட்டு வளைத்து அவனது கழுத்தைச் சுற்றி மாலையாக விழுந்தது... செந்தில் தன் இரு கரங்களாலும் அவளது முகத்தைப்

பிடித்து... கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்... ரேவதியின் விழிகள் அவனது விழிகளோடு கலந்தன...

"ரேவதி... என் ரேவதி..." செந்தில் காதலுடன் முணுமுணுத்தான்....

"உங்கள் ரேவதிதான்... இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்.."

"நான் எப்போது சந்தேகப்பட்டேன்...?"

"சுதாகாரனிடம் நான் பேசியதைப் பெரிதாக நினைத்துக் கொள்ளவில்லையா...?""

"ஏய்ய்... அது... நீ வருத்தப்படுகிறாய்ன்னு நினைத்தேன்டி..."

"ஆமாம்... இவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதற்கு நான் வருத்தப்படுகிறேனாம்... அதை இவர் ரொம்பத்தான் கண்டு விட்டாராம்..."

ரேவதி மையலுடன் செல்லமாகக் கணவனின் மார்பில் குத்தினாள்...

'இவளுக்கு இது போல இழையக்கூடத் தெரியுமா...?'

செந்தில் ஆச்சரியத்தோடு அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.. ரேவதி விழி மூடி... தன் உணர்வுகளை அடக்க... உதடு கடித்துக் கொண்டாள்...

செந்தில் அவளது நெற்றியில் முத்தமிட்டான்... அவளது கண்களின் இமைகள் இறுக மூடிக் கொள்வதை உணர்ந்து சிறு சிரிப்புடன்... அவளது இமைகளில் முத்தமிட்டான்... மெல்ல அவளது இதழோரம் இதழ் பதித்தான்...

ரேவதிக்குள் உணர்வுகள் பிரவாகமாய்ப் பொங்கி எழுந்தன... ஒரு வருடமாய் விலகி நின்று விரதம் காத்தவள்... இன்று கரை உடைந்த வெள்ளமாகப்

பொங்கி எழுந்த உணர்வுகளின் அலையில் அடித்துச் செல்லப்பட்டு... தொய்ந்து அவன் மேல் சரிந்தாள்...

சட்டென்று அவளைத் தாங்கிக் கொர்ணட செந்தில் கைகளில் அவளை ஏந்தினான்... ஒரு கொடி போலக் கைகளில் கிடந்தவளைத் தூக்கிக் கொண்டு... கட்டிலை அடைந்தான்... அவளை ஒரு பூப்போலப் படுக்கையில் கிடத்தி... அவள் மேல் சரிந்தான்...

கடலில் மூழ்கத் துடித்த இரு உள்ளங்களும்... மூழ்கிவிட நினைக்கும் போது முதலில் ரேவதி தன் உணர்வு வரப் பெற்றவளாய் அவனிடமிருந்து விலகி எழுந் தாள்... கண்களில் மயக்கத்துடன் அவளது கைபிடித்துத் தடுத்தான் செந்தில்....

"ஏய்... எங்கேடி போகிறாய்...?"

"கீழே...?"

"எதற்கு...?"

கணவனின் தாபம் கலந்த அழைப்பை அவனது கண்களில் கண்ட ரேவதி... ஒரு நிமிடம் அவனையே பார்த்தவாறு அசையாமல் நின்றாள்...

இன்று கண்ணெதிரே... கண்களில் காதல் பொங்க... தாபத்துடன் அவளது கைப் பிடித்து இருக்கும் இந்த நேரத்தில்... அவளுக்கு மட்டும் சொந்தமான காதலனாக அவன்... அவளது கண்களுக்குத் தோன்ற... ரேவதி... அவனது கரம் விலக்கிப் போக முடியாதவளாகக் கட்டிலில் அவனருகில் அமர்ந்து அவனது முடி கோதினாள்...

அவன் புரண்டு... அவளது மடியில் முகம் புதைத்துக் கொண்டான்... குனிந்து அவனது நெற்றியில் முத்தமிட்டவள்...

"இது சாயந்திர நேரம்..." என்று கொஞ்சலாகக் கூறினாள்...

"ச்சு... இருட்டி விட்டதுடி..." அவன் பிடிவாதமாய் அவளது இடுப்பை வளைத்தான்...

"இருட்டி விட்டதுன்னா... உடனே உங்களுடன் சயனிக்க முடியுமா..." அவள் அவனது கலைந்து கிடந்த தலையைச் சரிப்படுத்தி விட்டவாறு ஒரு குழந்தையிடம் கூறுவது போலக் கூறினாள்...

"ஏன்... சயனித்தால் என்ன...?" அவன் அதட்டினான்...

"ம்ம்... சயனிக்கலாம்... கூடாது என்று இல்லை... ஆனால் நைட் டிபன் இன்னும் நான் செய்யவில்லை... மாமா... பசியோடு வந்திருப்பார்..."

"எனக்கு வயிற்றில் பசியில்லை..."

அவனது கண்களின் தாகம்... அவனது மனப் பசியைக் கூற... அவள்... 'க்ளுக்'கென்று வாய் பொத்திச் சிரித்தாள்...

"ஏய்... ஏன்டி சிரிக்கிறாய்..?"

"உங்களுக்குப் பசியில்லை... மாமா பாவம் வயதானவர்... அவருக்குப் பசிக்காதா...?"

"அதை அம்மா கவனித்துக் கொள்வார்கள்..."

"உங்களுடைய அம்மா சமையல் கட்டுக்குப் போய் எத்தனை வருசங் களாகின்றன என்பது உங்களுக்குத் தெரியும்தானே..."

"சமையல்காரம்மா சமைக்க மாட்டாங்களா..."

"அதையாவது நான் போய்ச் சொல்ல வேண்டாமா...?"

"நீ போவதிலேயே குறியாக இரு..."

அவனது குரலில் தென்பட்ட நிறைவேறாத தாபமும்... கோபமும் அவளை ஈர்த்தன... கடமையை மறந்து அவனுடன் கலந்து விட மனம் துடித்தது...

ஏதேனும் ஒரு வகையில் அவனுக்குத் தன் காதலைச் சொல்ல அவள் மனம் துடித்தாள். மெல்ல... அவனுடைய முகத்தைத் திருப்பிக் கண்களுக்குள் பார்த்தாள்.

"விளக்கேற்றி வைக்கிறேன்...

விடிய விடிய எரியட்டும்...

நடக்கப் போகும் நாள்களெல்லாம்...

நல்லதாக நடக்கட்டும்..."

ரேவதி பாடிய போது... செந்தில் மெய்ம் மறந்து போனான்... அவனது முடிகளுக்குள் விரல் விட்டு அளைந்தவாறு அவள் பாடலைத் தொடர்ந்தாள்...

"மஞ்சளிலே நீ கொடுத்தாய் மங்களம் - இந்த

மஞ்சத்திலே நான் கொடுப்பேன் மந்திரம்...

நெஞ்சத்திலே பூசிவிடும் சந்தனம் - அதைக்

கொஞ்சட்டுமே நீ கொடுத்த குங்குமம்...

உன்னைத் தஞ்சமென்று...

தழுவிக் கொண்டது பெண்மனம்...

இனிக் கொஞ்சமல்ல...

கோடி பெறும் உன் மனம்..."

ரேவதியின் முகத்தோடு... செந்திலின் முகம் இழைய... அவள் கட்டிலில் சரிந்தாள். செந்தில் அவளது இடை வளைத்து... தோள் வளைவில் முகம் புதைத்தான்...

"ரேவதி... இப்போது போகாதே..."

"போனாலும் என்ன... ஒரு மணி நேரத்தில் டிபனை முடித்து விடுவேனே..."

"அதற்குப் பின் சாப்பிடச் சொல்வாய்..."

"அதற்கு அரை மணி நேரம் போதாதா...?"

"ஒன்றரை மணி நேரம் காத்திருக்க எனக்குப் பொறுமையில்லைடி..."

"ஒரு வருடத்திற்கு மேல் காத்திருந்தவர்தானே... இப்போது மட்டும்... என்ன வந்து விட்டதாம்...?"

"ஏய்... அப்போது இருந்த நிலைமை வேறு... இப்போது இருக்கும் நிலைமை வேறு..."

"இரண்டிற்கும் என்ன வித்தியாசம்...?"

"ம்ம்... சொல்லவா...? அப்போதும் இந்தக் கட்டிலில் தான் நாம் இரண்டு பேரும் படுத்திருப்போம்... நீ அந்த மூலையில்... நான் இந்த மூலையில்... இப்போது..."

அவன் மேலே பேசு முன்னால்... அவனது வாயைப் பொத்திய ரேவதி... முகம் சிவக்க... அவனது கன்னத்தில் முதன் முதலாக இதழ் பதித்தாள்...

## 27

"ஏய்..." செந்தில்... நம்ப முடியாமல் ரேவதியின் முகம் பார்க்க... அவள் அணை உடைந்த வெள்ளமாய் அவனது முகம் பற்றி... முகம் பூராவும் இதழ் பதித்தாள்...

"இத்தனை ஆசையை உன் மனதில்... என் மேல் வைத்துக் கொண்டு... இத்தனை நாளாய் விலகி யிருந்தாயே... என்ன நெஞ்சழுத்தமடி உனக்கு..."

அவன் முரட்டுத்தனமாய் அணைத்ததில்... அவளது எலும்புகள் நொறுங்கி விடும் போலிருக்க... அவள் இன்பமான வலியை உணர்ந்தாள்.

"அங்கே மட்டும் எப்படியாம்...? நீங்களும் தள்ளித்தானே நின்றீங்க..."

"நீ மட்டும் உன் மனதை உணர்த்தியிருந்தால் நான் தள்ளியா நின்றிருப்பேன்...?"

"எப்படி உணர்த்துவது...?"

"ஒரு சின்னப் பார்வை போதாதா...?"

"அப்படியே உங்களைப் பார்த்து விட்டாலும்..."

"ஏன்டி... இப்படி நொடித்துக் கொள்கிறாய்... உன் புருசன் என்ன உணர்ச்சியில்லாத ஜடமா...? உன் மேல் கரை காணாத காதல் வைத்திருப்பவன்டி..."

"டயலாக்கெல்லாம் பிரமாதம்... கவிதா கண்ணசைத்தால் அவள் முந்தானையைப் பிடித்துக் கொண்டு பின்னாலேயே போகிறவர்தானே நீங்க..."

"அடித்து விடுவேன், ரேவதி... உன் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டு... இன்னொருத்தி பின்னால் நான் போவேனா? முட்டாள்தனமாய்ப் பேசாதே..."

"ம்ப்ச்... இந்தப் பேச்சிற்கு ஒன்றும் குறைவில்லை..."

"உன் மேலிருக்கும் காதலுக்கும் குறைவில்லை, ரேவதி...."

"அந்தக் கரை காணாத காதலில் மூழ்கிச் சமையலை முடித்து விட்டு ஓடி வந்து விடுகிறேன்..."

செந்தில் எழுந்து அவளது கரம் பற்ற முயல... அவள் விலகி அறைக் கதவைத் திறந்து கொண்டு அவனுக்கு டாட்டா காட்டினாள்...

அவன் முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தை நினைத்து சிரித்துச் சிரித்தபடி... மாடிப் படிக்கட்டில் இறங்கினாள் ரேவதி...

அவளது சிரித்த முகத்தைக் கண்ட மீனாட்சிக்குக் கோபமும்... ஆற்றாமையும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன...

"பார்த்தீங்களா அத்தை... அவள் சிரிக்க... நான் அழுக வேண்டும்ன்னு ஆண்டவன் எனக்கு விதித்து விட்டானே..." கவிதா தூண்டி விட்டாள்....

"ம்ம்... ஆடட்டும்... இந்த ஆட்டம் எத்தனை நாளைக்குன்னு நானும் பார்க்கிறேன்..." மீனாட்சி வெறுப்புடன் கூறினாள்...

"அப்படி இவளை ஈஸியாக நினைத்து விட முடியாது அத்தை. அத்தானோடு பேசப் போன என்னை... ரூமை விட்டு வெளியே போன்னு இவள் சொல்லி விட்டாள் அத்தை... அதை அத்தானும் கேட்டுக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார்..." கவிதா பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள்....

"என்னது... உன்னை வெளியில் போகச் சொன்னாளா இவள்? அதைச் சொல்ல இவள் யார்...?" மீனாட்சி கொதித்துப் போனாள்...

தன் கனவில் மிதந்து கொண்டிருந்த ரேவதி... அவர்கள் இருவரையும் கவனிக்காமல் சமையலறைப் பக்கம் போகத் திரும்பினாள்...

"பார்த்தீங்களா அத்தை... இங்கே நீங்களும் நானும் குத்துக் கல் போல் உட்கார்ந்து இருக்கிறோம்... அவள் கொஞ்சமாவது நம்மைச் சட்டை செய்கி றாளான்னு கவனித்தீங்களா... திமிர்.... அத்தானைக் கைக்குள் போட்டுக் கொண்ட திமிர்... எனக்கே இந்த நிலைமையென்றால்... நாளைக்கு உங்க நிலைமை என்ன அத்தை...? தாய்க்கு மகனைச் சொந்தமில்லாமல் ஆக்கிவிடுவாளே..."

கவிதா பற்ற வைத்த நெருப்பு சட்டென்று பற்றிக் கொண்டது... மீனாட்சி கோபக் கனலுடன் தன் பார்வையை ரேவதியின் பக்கம் திருப்பினாள்...

"ஏய்ய்... ரேவதி.... இங்கே வா..." என்றாள் அதிகாரமாக... கனவு கலைந்த வளாய் ரேவதி திரும்பிப் பார்த்தாள்.... கவிதாவின் ஏளனப் பார்வையும்... விசமப் புன்முறுவலும் அவளை உசுப்பின... அவள் முன்னால் மீனாட்சி தன்னை அதட்டியது ரேவதிக்குப் பிடிக்கவில்லை... தனிமையில் மீனாட்சி என்ன திட்டி னாலும் இந்தக் காதில் வாங்கி... அந்தக் காதில் விட அவள் தயார்தான்... அதுவே கவிதா தூண்டிவிட்டு... அவள் முன்னால் மீனாட்சி ரேவதியை மட்டம் தட்டி அவமானப்படுத்த நினைத்தால்... அதைச் சகித்துக் கொள்ள அவள் தயாரில்லை...

"என்ன அத்தை..."

"நீ கவிதாவை என்ன சொன்னாய்...?"

"ஒன்றும் சொல்லவில்லையே..."

"பொய் சொல்லாதே..."

"நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்...?"

"இதோ பார்... கவிதா பொய் சொல்ல மாட்டாள்..."

"அப்படியா...?"

ரேவதியின் குரலில் தெரிந்த இகழ்ச்சி கவிதாவைத் தாக்கியது... அவள் அடிபட்ட பெண் புலியாய் நிமிர்ந்தாள்...

"பார்த்தீங்களா அத்தை... உங்கள் முன்னாலேயே என்னைப் பொய்காரின்னு இவள் சொல்வதை..."

ரேவதியின் முகம் இறுகியது... அவள் பெண் சிங்கம் போல் சிலிர்த்துக் கொண்டாள்...

வேங்கையும்... சிங்கமும்... ஒன்றையொன்று முறைத்தன...

மீனாட்சிக்கு ஆவேசம் உண்டானது... ஒன்று விட்ட அண்ணனின் ஒற்றைப் பெண்ணைத் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதின் மூலம்... அவளுடைய அனைத்துச் சொத்துக்களையும் கைப்பற்றி விடலாமென்று திட்டம் போட்டிருந் தாள்... அந்தத் திட்டம் தவிடு பொடியானதில் இடிந்து போயிருந்தாள்... இடிந்து போயிருந்த மனதில் நம்பிக்கைக் கீற்றாய்... செந்திலும்... ரேவதியும் தாமரையிலைத் தண்ணீராய் ஒட்டாமல் வாழ்வது பிடிமானமாய் இருக்க... மகனுக்குக் கவிதாவை மறு திருமணம் செய்து வைத்தால் என்ன... என்று யோசிக்கும் நிலைமைக்கும் போய் விட்டாள்... அந்தக் கனவும் சீட்டு மாளிகையாய்க் கலையும்படி... ரேவதி முகமெலலாம் சிரிப்பாக... செந்திலுடன் பேசி விட்டு வரவும் மீனாட்சியினால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை...

அவளுக்கு ஒன்று தெரியாது... செந்திலும்... ரேவதியும் பிரிந்தாலும்... கவிதா... செந்திலை ஒரு போதும் மணம் செய்து கொள்ள மாட்டாள்... அவளுடைய ஒரே நோக்கம் செந்திலையும்... ரேவதியையும் பிரிப்பது...

அதையறியாத மூட மனம் கொண்ட மீனாட்சி... மருமகளை ஒரு கை பார்க்கத் தயாரானாள்...

"ஏன் இவள் இப்படிச் சிரிக்க மாட்டாள் கவிதா... முறையாக முன் வாசல் வழியாக வந்திருந்தால்... ஒரு குடும்பத்தில் வாழ வேண்டிய வளமை தெரிந்திருக்கும்... இவள் முறையில்லாமல் பின் வாசல் வழியே வந்தவள்தானே... இவளுக்கு எப்படிப் பெரிய குடும்பத்து மனுசங்களிடம் தன்மையாகப் பேசிப் பழக வேண்டிய வளமை தெரியும்...?"

இப்போது கவிதாவின் முகத்தில் இகழ்ச்சிப் புன்னகை உதித்தது...

"நான் பின் வாசல் வழி... முறை தவறி வந்தேனா...?"

இதுவரை மீனாட்சி இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி அவள் கேட்டதில்லை... இன்று அவள் பேசியதும்... காதுகளில் யாரோ அமிலத்தை ஊற்றியது போல் ரேவதி துடித்துப் போய் விட்டாள்...

"அத்தை... என்னவெல்லாமோ பேசுகிறிங்க... பார்த்துப் பேசுங்க... இது நன்றாக இல்லை..."

"எது நன்றாக இல்லை...? நான் என்ன இல்லாததையா சொல்லி விட்டேன்...? நீ முறை தவறி வந்தவள்தானே..."

"வேண்டாம் அத்தை... திரும்பத் திரும்ப அந்த வார்த்தையைச் சொல்லாதீங்க..."

"சும்மா நிறுத்து... என்னவோ குரலை உயர்த்திப் பேசுகிறாயே... என்னவோ... இவள் ஏறிய பஸ்ஸில் மட்டும் கரெக்டா... தீவிரவாதி ஏறினானாம்.. பஸ்ஸில் இருக்கிற மத்த ஆளுகளை விட்டு... இவள் என் மகனை மட்டும் பிடித்துக் கொண்டாளாம்... அவனுடன் முன் பின் தெரியாத மனுசங்க வீட்டில்... புருசன்... பெண்டாட்டின்னு சொல்லிக்கிட்டுத் தங்கினாளாம்... இதெல்லாம் நல்ல குடும்பத்துப் பெண் செய்கிற காரியமா...?"

கவிதாவின் பார்வையைச் சந்திப்பதை விட... அப்படியே பூமியில் புதைந்து போகலாம் என்று ரேவதிக்குத் தோன்றியது... அவளுடைய உடலில் நடுக்கம் ஏற்பட்டது...

அவள் சட்டென்று திரும்பி... மடமடவென மாடிப்படிகளில் ஏறினாள்... போரில் புறமுதுகு காட்டி ஓடுவதைப் போல உணர்ந்தாலும் இந்தச் சொற்போரில் புறமுதுகு காட்டாமல் சரிக்குச் சரியாகப் பேச முடியாது என்று அவளுக்குத் தோன்றியது...

இது ஒரு சாபம்... பெண்களுக்கே உரித்தான சாபம்.. காலம் காலமாய்த் துரத்திக் கொண்டு வரும் சாபம்... சில நேரம்... தங்களை உயர்ததிக் கொண்டு... உடனிருப்பவளைத் தாழ்த்துவதற்காக... பெண்களே பெண்களை நோக்கி... ஏவிவிடும் சாபம்... ஆண்களை அணுக முடியாத சாபம்..

அந்தச் சாபம் ரேவதியையும் துரத்தியது... அவள் அதிலிருந்து தப்பிக்க முயல்பவள் போல்... அறைக்குள் விரைந்து சட்டென்று கதவை அடைத்தாள்...

சற்று முன் நிகழ்ந்த நிகழ்வுகளின் இனிமையில் இருந்து இன்னும் மீண்டு வராத செந்தில்... அறைக்குள் வந்து நின்ற மனைவியை ஆனந்தத்துடன் பார்த்தான்...

"ம்ம்... உன்னால் எப்படி... டிபன் பண்ண முடியும்...? மனசெல்லாம் என் மேல் வைத்துக் கொண்டு டிபன் செய்யப் போனால்... இப்படித்தான்..." என்று உல்லாசமாய்ச் சிரித்தான் செந்தில்...

ரேவதி... அவன் முகம் பார்க்காமல்... கண்களை மூடிக் கொண்டு கதவில்... சாய்ந்து நின்றாள்... செந்தில் அதை வெட்கமென்று நினைத்துக் கொண்டான்... எழுந்து அவளருகில் சென்று அவள் தோள் பற்றி... முகத்தை ஒரு கையால் நிமிர்த்தி... அவள் முகம் பார்த்தான்...

"ரேவதி..." அவன் தாபத்துடன் அழைக்க...

"ம்ப்ச்..." என்றபடி அவள் அவன் கையைத் தட்டி விட்டு விலகினாள்...

"ஏய்... என்ன ஆச்சு..." செந்திலின் முகத்தில் திகைப்பு படர்ந்தது...

"நான் தவறு செய்து விட்டேன்..."

"பேத்தாதே..."

"ச்சு... நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது..."

"இதைத்தான் நீ செய்த தவறாக நினைக்கிறாயா...?"

செந்தில் ஒரு மாதிரியான குரலில்... கோபமாய் வினவினான்... அவன் முகம் சுருங்கியிருந்தது... ரேவதி...

அதை உணர்ந்தாள்... ஆயினும்... அவனது கோபம் அவளைப் பாதிக்கவில்லை...

"ஆமாம்..."

அவள் வெறுப்புடன் பதில் சொன்னாள்... அவளது குரலில் தெரிந்த வெறுப்பை அவன் கவனிக்கவே செய்தான்... அவன் முகம் மேலும் கறுத்தது...

"என்னைக் கல்யாணம் செய்து கொண்டதால் என்ன கெட்டுப் போய் விட்டது...?"

"எல்லாமே கெட்டுப் போய் விட்டது... கவிதாவின் காதல்... உங்கள் அம்மாவின் கனவு... முக்கியமாய் என் பெயர்... எல்லாமே... எல்லாமே கெட்டுப் போய் விட்டது..."

"உன் பெயர் கெட்டுப் போய் விட்டதா...? அது கெட்டுப் போய் விடும் என்ற பயத்தில்தானே நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தேன்..."

"பெரிய தியாகிதான்..."

ரேவதி கசப்புடன் இந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"நான் தியாகியென்று உன்னிடம் சொன்னேனா...?"

"நீங்கள் பேசிய விதம் அப்படிச் சொல்கிறது..."

"நீ வேண்டுமென்றே என்னிடம் வம்பிழுக்கிறாய்ன்னு நான் நினைக்கிறேன், ரேவதி..."

"உங்களுடன் வம்பிழுக்க வேண்டுமென்று எனக்கு மட்டும் ஆசையா... என்ன...?"

"வம்பிழுத்தால் நான் விலகிப் போய் விடுவேன்னு நீ நினைக்கிறாயோ... என்னவோ..."

"நான் ஏன் அப்படி நினைக்க வேண்டும்..."

"என்னைப் படுக்கையில் தவிர்க்கத்தான்... வேற எதற்கு?"

"ம்ச்..."

ரேவதி பெருமூச்சுடன்... சலித்துக் கொண்டாள்... செந்தில் தன் கேள்விக்குப் பதில் கிடைக்காததால்... பேச்சை வளர்த்தான்...

"என்ன, பேச்சைக் காணோம்..."

"இந்தக் கல்யாணத்திற்குப் பின்னால்... எத்தனையோ காணாமல் போய் விட்டது... அதில் என் பேச்சும் ஒன்று..."

'திரும்பவும்... கல்யாணத்தைக் குறை சொல்கிறாள்...' செந்திலுக்குச் சுளுசுளுவென... கோபம் அதிகரித்துக் கொண்டு இருந்தது...

"அப்படி என்னடி காணாமல் போய் விட்டது...?"

"என் நிம்மதி... சந்தோசம்... கனவு... கற்பனை... ஏன்... நானே தொலைந்து போய் விட்டேன்... போதுமா...?"

செந்தில் கோபத்துடன் அவளை ஓங்கி ஒரு அறை விட்டான்... ரேவதி... துடித்துப் போய் விட்டாள்... தன் கையை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டு... தலையில் அடித்துக் கொண்டான்....

"ஏய்ய்... ஏன்டி என்னை மிருகமாக்குகிற...? பெண்டாட்டியைக் கை நீட்டி அடிப்பவன் மனிதனில்லை என்று நினைப்பவன் நான்... இத்தனை நாளாய் உன்னிடம் அதட்டி ஒரு வார்த்தை பேசியிருப்பேனா...? இன்றைக்கு என்னைக் கை நீட்ட வைத்து விட்டாயே... இப்போது ரூமை விட்டுப் போகும் போது சிரித்துக் கொண்டுதானே போனாய்...? ஒரு நிமிடத்தில் எல்லாம் மாறி விட்டதா...?"

ரேவதி பதில் சொல்லாமல்... கன்னத்தைப் பிடித்தபடி கட்டிலில் அமர்ந்து விட்டாள்... செந்தில் வருத்தத்துடன் அவளருகில் அமர்ந்து தோள் தொட்டான்.. அவள் சட்டென்று தள்ளி அமர்ந்தாள்... அவளுடைய விலகல்... செந்திலைப் பாதித்தது... சற்று முன் அவள் காட்டிய நெருக்கம் நேரம்... காலம் தெரியாமல் மனதிற்குள் வந்து இம்சித்தது...

"ஸாரி ரேவதி..."

"........."

"கோபத்தில் அடித்து விட்டேன்..."

"........"

"நீயும் அப்படிப் பேசியிருக்கக் கூடாது..."

"........."

"ஏய்ய்... பேசுடி... பேசாமல் என்னைக் கொல்லாதே..."

"எதற்கு... ஒரு கன்னத்தில் அடித்தாகி விட்டது... இன்னொரு கன்னத்தையும் ஏன்... விட்டு வைக்க வேண்டுமென்ற நினைவா.ட..? நானென்ன யேசுநாதரா... ஒரு கன்னத்தில் அறைந்தால்... மறு கன்னத்தையும் காட்டுவதற்கு...? நான் மனுஷி... ரத்தமும் சதையும்... மனதில் சுயமரியாதையும் உள்ள மனுஷி எனக்கு அடித்தால் கன்னம் வலிக்கும்... தரக்குறைவாய்ப் பேசினால் மனம் வலிக்கும்..."

"நான் உன்னைத் தரக்குறைவாய் எப்போது பேசினேன்..."

"நான் உங்களைச் சொன்னேனா..."

"பின்... வேறு... யார்..."

செந்திலுக்குச் சட்டென்று விளங்கி விட்டது... அறையை விட்டு வெளியேறியவள் உடனே திரும்பி வந்து மனம் குமுறுகிறாள் என்றால் அவளுடைய மனம் பாதிக்கும்படி யாரோ... எதையோ சொல்லியிருக்க வேண்டும்.. அது யார்..? கவிதாவா.. இல்லை, மீனாட்சியா..?

"அம்மா எதுவும் சொன்னாங்களா...?"

ரேவதி பதில் பேசாமல்... கட்டிலில் தன் முழங்கால்களை மடித்து வைத்து... அதில் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்....

"ரேவதி! உன்னைத்தான் கேட்கிறேன்... அம்மா... என்ன சொன்னாங்க...?"

ரேவதியிடம் அதற்கும் பதில் இல்லை... செந்தில் அவளருகே அமர்ந்து... அவள் முடி கோதிய போது... அவளுடைய உடல் தூக்கிப் போட்டது... அவசரமாய்க்

கையை விலக்கிக் கொண்டான்... ஏன் இப்படித் தவிக்கிறாள்... என்று புரியாத வனாய் அவன் குழம்பிய போது... அறைக் கதவு படபடவென்று தட்டப்பட்டது...

## 30

அறைக் கதவு உடை பட்டு விடும் போல... சப்தம் பலமாக இருக்க செந்தில் எழுந்து அவசரமாய்க் கதவைத் திறந்தான்... மீனாட்சி கோபாவேசத்துடன் நின்று கொண்டிருந்தாள்...

"என்னம்மா... ஏன் இப்படிக் கதவைப் போட்டு உடைக்கறீங்க...?"

"எங்கேடா உன் பெண்டாட்டி...?"

"ஏன்... என்ன விசயம்...?"

"இவள் என்ன பெரிய மகாராணியா...?"

செந்தில் பல்லைக் கடித்துக் கொண்டே எரிச்சலுடன் தாயைப் பார்த்தான்...

"விசயத்தைச் சொல்லுங்கம்மா... சும்மா வளவளன்னு பேசிக்கிட்டு..."

மகனின் வார்த்தைகளைக் கேட்டதும் மீனாட்சி வெகுண்டாள்...

"ஆமாம்டா... பெத்த தாய் பேசினால் உனக்கு வளவளன்னு பேசுகிறது போலத்தான் இருக்கும்... அதுவே... அந்த வீட்டைக் கெடுக்கிற மகராசி பேசினால்... குளுகுளுன்னு இருக்கும்..."

"இப்போ தேவையில்லாமல் அவளை ஏன் இழுக்கிறீங்க..."

"பெத்த தாய்க்கும்... மகனுக்கும் ஆகவிடாமல் அடிக்கிறா... என்னைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கச் சொல்கிறாயா...?"

"அவளென்ன அப்படி... உங்களுக்கும் எனக்கும் ஆகவிடாமல் செய்து விட்டாள்..."

"இந்நேரம் வரைக்கும்... கதவை மூடிக்கிட்டு உன்கிட்ட என்னைப் பற்றி மூட்டி விட்டாளே... அதை இல்லைன்னு சொல்லப் போகிறாயா...? ஆமாம்... அவ... அப்படி என்ன என்னைப் பத்தி தூபம் போட்டாள்...?"

"அம்மா... அவளுக்கு அதெல்லாம் தெரியாது... இப்போ நீங்க வந்து சொல்லும் வரை உங்களுக்கும்... அவளுக்கும் வாக்குவாதம் வந்ததே எனக்குத் தெரியாது..."

மீனாட்சி பகீரென்று... மனதில் சாட்டையடி வாங்கினாள்... மருமகளின் பெருந்தன்மை மகனின் மனதில் உயர்வதையும்... தனது சின்னத்தனம் வெளிப்பட்டு விட்டதையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை....

"ஆமாண்டா... உன் பெண்டாட்டிக்கு ஒன்றுமே தெரியாது... அப்படி அறியாப் பெண் போல நடித்து உன்னைக் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாளே... இந்த நடிப்பெல்லாம் எனக்குச் சுட்டுப் போட்டாலும் வராது..."

"அம்மா..."

செந்தில் கண்கள் சிவக்கத் தாயை அதட்டினான்... கட்டிலின் மேல் அமர்ந்திருந்த ரேவதி குனிந்த தலையை நிமிரவேயில்லை... இத்தனை நாள்களாக... தன் பேச்சிற்கு எதிர்ப்பேச்சுப் பேசாத மகன்... இன்று தன்னை எதிர்த்துப் பேசுவதோடு நில்லாமல்... வாய் விட்டு அதட்ட வேறு செய்யவும்... மீனாட்சியினால் தாங்கிக் கொள்ள முடியாமல் போய் விட்டது...

"ஏன்டா... எந்தக் காட்டுச் சிறுக்கிக்கா பரிந்து கொண்டு என்னையே நீ அதட்டுகிறாய்...?"

"அவள் என் பெண்டாட்டிம்மா... எந்தக் காட்டுச் சிறுக்கியோ இல்லை..."

"ஓஹோ... என்னை விட அவள் உனக்கு உயர்வாகப் போய் விட்டாளா...?"

"இப்ப நீங்க ஏன் அவளைக் கரித்துக் கொட்டுகிறீங்க... அதை முதலில் சொல்லுங்க..."

"இவள் எப்படிக் கவிதாவைப் பார்த்து ரூமை விட்டு வெளியே போன்னு சொல்லலாம்...?"

"ஓஹோ... இது கவிதா பற்ற வைத்த தீயா...?"

"கவிதாவைக் கூட நீ இப்படிப் பேசுவாயா...?"

"யாராக இருந்தாலும் பேசுவேன்... அவள் மட்டும் என்ன Þபெசல்? அம்மா... முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்க... கவிதாவை வெளியே போகச் சொன்னது ரேவதியில்லை... நான்தான்... அப்புறம்... இன்னும் ஒன்றையும் சொல்லி விடுகிறேன்... இனிமேல் எங்கள் ரூமிற்குள் வரும் வேலையை அவள் வைத்துக் கொள்ளக் கூடாது..."

"செந்தில்... நீயா இப்படிப் பேசுகிறாய்...? அவள் இந்த வீட்டிற்கு அவ்வளவு வேண்டாதவளாக ஆகிவிட்டாளா...? நாளைக்கு உன் பெண்டாட்டி சொல்லைக் கேட்டுக் கொண்டு... என்னையும் இப்படித்தானே நீ தூக்கி எறிந்து விடுவாய்...?"

"கவிதாவை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லவில்லையே... ரூமை விட்டுத்தானே வெளியே போகச் சொன்னேன்..."

"ஏன்ப்பா... அதுவும் ஒரு குறையை ஏன் மீதம் வைக்கிறாய்... அவளைப் பார்த்து அதையும் சொல்லிவிடு... பாவம்... பச்சைப் பிள்ளை போல் வெள்ளந்தி மனசுடா அவளுக்கு... அவளைப் போய் நீ இப்படிச் சொல்லலாமா...? அவள் மனதொடிந்து விட்டாள்டா... அந்தத் தூய்மையான அன்பிற்கு நீ செய்யும் உபகாரமாடா இது... நீயாய் இதையெல்லாம் பேசவில்லைடா... உன்னைப் பிடித்திருக்கும் பிசாசு உன்னைப் பேச வைக்கிறது..."

கட்டிலில் தலையை நிமிர்த்தாமல் அமர்ந்திருந்த ரேவதியைக் குரோதத்துடன் பார்த்தபடி மீனாட்சி பொரிந்து தள்ளினாள்...

'இப்படி தொண்டைத் தண்ணீர் வற்றிப் போகக் கத்திக் கொண்டிருக்கி றேன்... நிமிர்ந்து பார்க்கிறாளா பாரு... கடன்காரி... அவ்வளவு நெஞ்சழுத்தம்...' அவளுடைய மனம் பொருமியது...

"இங்கே என்னடி சத்தம் போட்டுக் கொண்டிருக்கிற...?" விசுவநாதனின் சத்தம் கேட்டதும்... மீனாட்சி அடங்கிப் போனவளாய்... திரும்பிப் பார்த்தாள்...

கண்கள் சிவக்க விசுவநாதன் நின்று கொண்டிருந்தார்...

31

"உன் மருமகள் பிசாசுன்னா... நீ யாரு...? உன்னைத் தூண்டி விட்டு விட்டு ஒன்றும் தெரியாதது போல் போய் விட்டாளே... அந்தக் கவிதா யாரு...?"

கணவனின் முன்னால் தன் பேச்சு எடுபடாது என்ற நினைவில் வாய் மூடிய மீனாட்சி... அவர் கவிதாவை இழுத்ததும் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள்....

"அவள் ஒன்றும் தெரியாதவள் போல் நடிக்கிறாளா...? ஏன் சொல்ல மாட்டீங்க... இங்கே ஒன்றும் தெரியாதவள் போல் வேசம் போட்டுக் கொண்டு நீலிக் கண்ணீர் வடிச்சுக்கிட்டு என் மகனின் மனசைக் கலைக்கப் பார்க்கிறாளே... இந்தக் கைகாரி... இவள் தான் ஒன்றும் தெரியாதவள் போல் நடித்துக் கொண்டு... இந்த வீட்டை ரெண்டு பண்ணிக் கொண்டு இருக்கிறாள்... என்றைக்கு இவள் காலடி எடுத்து வைத்து இந்த வீட்டிற்குள் வந்தாளோ... அன்றைக்கு இந்த வீட்டின் நிம்மதி போய் விட்டது..."

"மீனாட்சி... பேச்சை நிறுத்து... போய் வேலையைக் கவனி... ஊரான் வீட்டுப் பெண்ணிற்காக... நம் வீட்டுப் பெண்ணை மட்டம் தட்டிப் பேசுவது நியாயமில்லை."

"நேற்றுவரை நம் வீட்டில் ஒருத்தியாக இருந்த கவிதாவை இன்றைக்கு ஊரான் வீட்டுப் பெண்ணுன்னு

சொல்கிறீங்களே... அது மட்டும் நியாயமா...?"

"அறிவோடுதான் பேசுகிறாயா மீனாட்சி... நம்ம செந்திலுக்குன்னு ரேவதி வந்து விட்ட பின்னால்... கவிதா எப்படி நம் வீட்டுப் பெண்ணாவாள்....?"

"அதற்காக... அவளுடைய சொந்தத்தை அம்போன்னு விட்டு விட முடியுமா...?"

"சொந்தம் ஒரு எல்லை வரைதான் மீனாட்சி... அது செந்திலின் குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கக் கூடாது..."

"இப்போது இவளின் குடும்ப வாழவிற்கு என்ன கேடு வந்து விட்டது...?"

"விளக்கு வைத்த பின்னால்... வீட்டுக்கு வாழ வந்த பெண்ணை இப்படி நாக்கில் நரம்பில்லாமல் பேசுவதை விட வேறு பெரிய கேடு எதுவும் இருக்க முடியாது, மீனாட்சி..."

"இவளுக்கே சப்போர்ட் பண்ணுங்க... இவள் செய்தது மட்டும் சரியா...?"

"ரேவதி அப்படியென்ன செய்து விட்டாள்...?"

"கவிதாவை வீட்டை விட்டு வெளியே போன்னு சொல்லலாமா...?"

"அவள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்..."

"அடேங்கப்பா... மருமகளின் மீது எவ்வளவு நம்பிக்கை... அந்த நம்பிக்கையில் நூற்றில் ஒரு பங்கை என் மீதும் வைக்கக் கூடாதா...?"

"எனக்கு உன் மீது நம்பிக்கை இருக்கிறது, மீனாட்சி... ஆனால் உன்னைத் தூண்டி விட்டிருப்பது கவிதா... அவள் மேல் எனக்கு நம்பிக்கையில்லை..."

"சரி... உங்கள் பாயிண்டிற்கே வருகிறேன்... உங்க மருமக கவிதாவை வீட்டை விட்டு வெளியில் போகச் சொல்லவில்லை.... ஆனால் ரூமை விட்டு வெளியே போன்னு சொல்லியிருக்கிறாள்..."

"அதிலென்ன தப்பு... மீனாட்சி...! தோளுக்கு மேல் வளர்ந்தால் பெற்ற மகன் கூடத் தோழன்தான்... அவனுக்குக் கல்யாணமாகி... பொண்டாட்டின்னு ஒரு வந்து விட்டால்... அவங்களுடைய பெட்ரூமிற்குள்... பெத்தவங்களான நாமே அனுமதியில்லாமல் போகக் கூடாது... கவிதா மூன்றாம் மனுஷி... அவள் போகலாமா...?"

கணவர் பேசியதில் தொனித்த நியாயத்தை உணர்ந்த மீனாட்சி வாயை இறுக மூடிக் கொண்டாள்...

"கீழே வா, போகலாம்..."

"எப்படிப் போகிறது... இன்னும் இவள் எதையும் சமைக்கல..."

"ரேவதி வருவதற்கு முன்னால் இந்த வீட்டில் எல்லோரும் பட்டினியாகவா கிடந்தோம்...?"

"ஏன் மகாராணிக்கு இதைக் கூட செய்ய முடியாதா?"

"இன்றைக்கு முடியாது... சமையல்காரம்மா சமைத்து வைத்து விட்டது... சாப்பிடப் போகலாம், வா..."

"நான் சொல்லாமல் தானாய் ஆடச் சமையல்காரி கூடக் கற்றுக் கொண்டு விட்டாளா...?"

"அதை நினைத்து எனக்குச் சங்கடமாக இருக்கிறது உனக்கு இல்லையா...? நடுவீட்டில்... வேலையாள்களும்... வெளியாள்களும் பார்க்கிறது போல... உன் மருமகளைச் சண்டை போட்டு அவமானப்படுத்தியிருக்கிறாய்... சமையல் காரம்மா ரேவதியின் மேல் பரிதாபப்பட்டுத் தானாய்ச் சமைத்திருக்கிறாள்... உன் மருமகளின் நிலையை நீ இப்படியா ஆக்க வேண்டும்...?"

விசுவநாதனின் நியாயமான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவளாய் மீனாட்சி விர்ரென்று சென்று விட்டாள்...

விசுவநாதன் அறைக்குள் திரும்பி ரேவதியைப் பார்த்தார்... அவள் அப்போதும் தலையை நிமிரவில்லை...

ஒரு பெருமூச்சுடன் செந்திலின் தோளைத் தட்டிக் கொடுத்தவர் படியிறங்கிப் போய் விட்டார்...

கதவைத் தாழிட்டு விட்டு செந்தில் ரேவதியின் அருகே வந்து அமர்ந்தான்... ரேவதி... கட்டிலின் மறுமுனைக்கு நகர்ந்து சுருண்டு படுத்து விட... செந்தில் மன வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டான்....

## 32

வெளியே இடி இடிக்கும் சத்தம் கேட்டது... ஒரு நாள் பிழைத்துப் போகட்டும் என்று கருணை காட்டி விட்டிருந்த மழை மீண்டும் பிடித்துக் கொண்டது... வானம் கிழிந்து விட்டது போல்... ஆவேசமாய் மழை கொட்டிக் கொண்டிருந்தது...

செந்திலும் ரேவதியும்... அன்று இரவு சாப்பிடவில்லை... ரேவதி அசையக் கூட மறுத்து விட்டாள்... அவள் பட்டினி கிடக்கும் போது தான் மட்டும் சாப்பிட மனமில்லாததால் செந்திலும் வெறும் வயிறோடு படுத்து விட்டான்....

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு அவள் கூட சேர்ந்துக்கிட்டு... இவனும் வயிற்றைக் காயப் போடுகிறான்...?"

ஆற்றாமையுடன் பேசிய மீனாட்சியை அடக்கி விட்டார் விசுவநாதன்...

நள்ளிரவைத் தொட்ட நேரத்தில்... ரேவதி சப்தமின்றிப் படுக்கையை விட்டு எழுந்தாள்... சப்தமில்லாமல்... தன் அலமாரியைத் திறந்து ஒரு பையில் கொஞ்சம் உடைகளை எடுத்து அடுக்கிக் கொண்டாள்... தோளில் பையை மாட்டிக் கொண்டு அறைக் கதவைத் திறந்து படியிறங்கினாள்... வாசல் கதவைத் திறந்து பார்த்த போது... வெளியே பேய் மழை பெய்து கொண்டிருந்தது...

'இந்த மழைக்கும் எனக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது போல...' கசப்புடன் நினைத்துக் கொண்டாள் ரேவதி...

அன்றைக்கும் இதே போல்தான் மழை பெய்தது... அவள் மானத்தைக் காப்பாற்றியவனின் கரம் பிடித்து... உயிரையும்... மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள ஓடினாள்... உயிர் தப்பியது... மானமும் தப்பியது... ஆனால் மரியாதை...? இன்று அவளைப் பார்த்து பின் வாசல் வழியாக வந்ததாக அவளுடைய மாமியாரே சொல்லிவிட்ட பின்பு... அவள் வாழ்வில் என்ன மீதம் இருக்கிறது...

ரேவதி மழையை லட்சியம் பண்ணாமல் இறங்கி காம்பவுண்டு கேட்டைத் திறந்து தெருவில் இறங்கி நடந்தாள்...

பளீரென்று மின்னல் வெட்டியது... தொடர்ந்து இடி இடிக்க... அவள் மேனி தூக்கிப் போட்டது... உடல் நடுங்கக் கண்களை இறுக மூடிக் கொண்டு... அவள் தொடர்ந்து நடந்தாள்...

ரேவதிக்கு மழையென்றால் பயம்... லேசாக மின்னல் வெட்டினாலே... ஜன்னல் கதவுகளை இழுத்துச் சாத்தி விடுவாள்... இடி இடித்தால் கேட்கவே வேண் டாம். அலறிக் காதை இறுகப் பொத்திக் கொண்டு வீட்டிற்குள் பதுங்கி விடுவாள்.

அப்படிப்பட்ட ரேவதிதான்... மழையையும்... இடி மின்னலையும் லட்சியம் பண்ணாமல் தன் கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தாள்...

ஊர் எல்லையைத் தாண்டி... மண் சாலையில் அவள் நடந்து கொண்டிருந்த போது... பளீரென்ற காரின் முன் விளக்குகளின் ஒளி வட்டம்... அவள் மேல் விழுந்தது... அவள் தடுமாறி நின்றாள்... காரின் முன் பக்கக் கதவைத் திறந்து கொண்டு... செந்தில் இறங்கி வந்தான்...

அவள் அசையாமல் நின்றாள்... அவன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அவளருகில் வந்தான்...

"எங்கே போகிறாய்...?"

"தெரியாது..."

"இப்படி ஜாமத்தில் கொட்டும் மழையில்... நனைந்து கொண்டு... எங்கே போவதென்று தெரியாமல்... நீ அநாதையாய்ப் போவதற்காகவா... நான் உன்னைக் காப்பாற்றினேன்...?"

அவனுடைய கேள்வியில் நெருப்புத் தெரிந்தது...

33

ரேவதியின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்... மழை நீரோடு கரைந்து ஓடியது....

"ஏன் பேசாமல நிற்கிறாய் ரேவதி... எனக்குப் பதில் சொல்லு... அன்றைக்கும் இதே போல்தான் மழை பெய்தது... நீயும்... நானும் கை கோத்து ஓடினோம்... அன்றைக்கு நீ யாரென்று எனக்குத் தெரியாது... நான் யாரென்று உனக்குத் தெரியாது... உன் பெயரைக் கூட நான் கேட்டுக் கொள்ளவில்லை, ரேவதி.... ஆனால்... அன்று நம்மிருவருக்குமிடையே இருந்த அந்த ஒற்றுமை... இன்று கணவன் - மனைவியாகி நிற்கும் நம்மிடையே ஏன் இல்லை....?"

"............"

"பதில் சொல்ல முடியாத போது... நீ மௌனம் என்ற கவசத்தின் பின்னால் பாதுகாப்பாய் ஒளிந்து கொள்கிறாய் ரேவதி... என்னால் அப்படி ஒளிய முடியவில்லை... அன்றைக்கு அந்த ரௌடியை எதிர்த்த போதும் சரி... இன்றைக்கு நீ... நான் வேண்டாமென்று முடிவு செய்து... என்னை விட்டுப் போகும் போதும் சரி... எனக்கென்ன என்று என்னால் இருக்க முடியவில்லை..."

ரேவதி அடக்க முடியாமல் விசும்பி அழுதாள்... செந்திலின் மனம் கலங்கியது... 'சோ' வென்று பெய்த மழை

அவர்களின் மேல் சிறு கற்கள் போல் தெறித்து விழுந்தது... ஆனாலும்... அவர்கள் அசையாமல் நின்றார்கள்...

"என்னால் உன்னை விட்டு விட முடியாது, ரேவதி... விட்டு விலக முடியாது..."

"ஆனால்... என்னால் இனி உங்கள் வீட்டில் இருக்க முடியாது..."

"அவ்வளவுதானே... என்ன நடந்தது... அம்மா உன்னை என்ன சொன்னாங்க என்று எதுவுமே நான் கேட்கமாட்டேன்... இந்தக் கொட்டுகிற மழையில்... ஜாமத்தில்... என்னை விட்டு நீ போக நினைத்து விட்ட போதே... உன் மனம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று என்னால் உணர முடிகின்றது... வா... வந்து காரில் ஏறு..."

"இல்லை... வேண்டாம்.."

"நான் உன்னைத் திரும்பவும் வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு போக மாட்டேன், ரேவதி... என்னை நம்பு..."

"வேறு எங்கே என்னைக் கூடுகிறீர்கள்...?"

"எங்கேயென்று தெரிந்தால்தான் நீ என்னுடன் வருவாயா...? அன்றைக்கு.... அந்த மழைநாளில்... எங்கே போகிறோமென்று தெரிந்தா என் கைப் பிடித்து என்னை நம்பி... என் பின்னால் வந்தாய்...? அன்றைக்கு நான் எவனோ ஒருவன்... இன்றைக்கு உனக்குத் தாலிகட்டிய சொந்தப் புருசன் ரேவதி... இன்றைக்கு இந்த மழைநாளில் என்னுடன் வர இவ்வளவு யோசிக்கிறாயே... இவ்வளவு தூரம் அவ நம்பிக்கைப்படுமளவிற்கு நான் என்ன செய்தேன், ரேவதி....?"

அவனின் துயரம் தோய்த்த வார்த்தைகள், ரேவதியின் மனதைத் துளைத்தன.

"எனக்கும் மனம் இருக்கிறது..."

"நான் இல்லையென்று சொன்னேனா...?"

"நீங்கள் என்னைக் காப்பாற்றியதற்காக... நான் என் உயிரையும் உங்களுக்காக சந்தோசமாகக் கொடுப்பேன்...

"அதுதான் எனக்குத் தெரியுமே... ஆனால் உன் காதலைத்தான் எனக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறாயே, உன் மனதில் எனக்கொரு இடம் தர மறுக்கிறாயே"

"உங்கள் காலடியில் எனக்கு இடம் கொடுத்தால் போதும்..."

"உன்னை என் கண்ணுக்குள் வைத்து நான் பார்த்துக் கொள்வேன்... நீ காலடியை ஏன் கேட்கிறாய்...?"

"எனக்கு அது கிடைத்தால் போதும்..."

"அப்படி நினைப்பவள் ஏன் என்னை விட்டுப் போக நினைத்தாய், ரேவதி..."

"என் மரியாதை போய் விட்டது..."

"அது எங்கேயும்... எப்போதும் போகாது..."

"நான் பின் வாசல் வழியாக வந்தவளாம்..."

"சீச்சீ... யார் இப்படிச் சொன்னது...?"

"அத்தை..."

"எப்போது சொன்னாங்க...?"

"நான் சமைக்கக் கீழே போன போது..."

"நீ ஏன் என்னிடம் இதைச் சொல்லவில்லை...?"

"எப்படிச் சொல்வது...?"

ரேவதி தேம்பியழுக... செந்தில் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்... அவனது முதுகைச் சுற்றி வளைத்து... அவன் மார்பில் இறுக முகம் புதைத்த ரேவதியின்... துக்கம் கரை உடைந்து அவள் பொங்கிக் கதறினாள்... அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு... அவளது உச்சந் தலையில் முகத்தைப் புதைத்திருந்த செந்தில்... அவள் அழுது ஓயட்டும் என்று அசையாமல் நின்றான்...

மழைநீர் அவர்களை நனைத்துக் கொண்டிருந்தது... அதை லட்சியம் பண்ணாமல் அவர்கள் நனைந்து கொண்டிருந்தார்கள்... ஒரு வழியாய் அழுது ஓய்ந்த ரேவதி... அவனை விட்டு விலகி நின்றாள்...

"வா... போகலாம்..."

ரேவதி இப்போது மறுத்துப் பேசவில்லை... அவன் பின்னால் சென்று... காரில் ஏறிக் கொண்டாள்... செந்தில் காரைக் கிளப்பினான்...

"எங்கே போகிறோமென்று நீ கேட்கவில்லையே ரேவதி..."

"நீங்கள் என்னை எங்கே கூப்பிட்டுக் கொண்டு போனாலும் சரி..."

அவளின் வார்த்தைகளில் செந்தில் சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான்... அவள் முகம் கனிந்தது...

"என் மேல் நம்பிக்கை வந்து விட்டதா...?"

"காதல் வந்து விட்டது..."

"ஏய்ய்..."

"ம்ம்... ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்டுங்கள்..."

"அது என்னவோ ரேவதி... இந்த மழைக்கும்... நம் வாழ்விற்கும் நெருங்கிய பிணைப்பு இருக்கிறது..."

"பிணைப்பா...? எப்போது இந்த மழை வந்தாலும் நாம் நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறோம்..."

"ஆனால்... ஒன்றாக ஓடிக் கொண்டிருக்கிறோம்..."

"நிம்மதியாக உங்களை இருக்க விடாமல் நான் ஓட வைத்துக் கொண்டிருக்கிறேன்..."

"ஓடுவதில் இருக்கிற சுகத்தை உணர வைத்தவள் நீதானே..."

"சுகமா...?"

"பின்னே இல்லையா...? ஆயிரம்தான் சொல்லு... அன்றைக்கு அந்த மழையில் நாம் ஓடின ஓட்டத்தை நம் வாழ்நாளில் மறக்க முடியுமா...?"

"மறக்கக் கூடிய நிகழ்வா அது...?"

"உன்னைப் போன்ற ஒருத்தியின் கைப் பிடித்து ஓடுவதாக இருந்தால்... அன்றைக்குக் கொட்டிய மழையில் மட்டுமில்லை... இன்றைக்குக் கொட்டும் இந்த மழையிலும் நான் ஓடுவேன்..."

"போதுமே..."

ரேவதி... அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்... தூரத்தில் மதுரை மாநகரின் விளக்குகள் பளீரிட்டன...

## 34

காரின் ஹாரன் சத்தம் கேட்டு... தோட்டத்தில் செடிகளுக்கு... குழாய் மூலம் நீர் விட்டுக் கொண்டிருந்த ரேவதி... அதை அப்படியே போட்டு விட்டு... மெயின் கேட்டைத் திறக்க ஓடினாள்...

"மெதுவாக வாவென்று எத்தனை தடவைதான் சொல்வது..? இந்த உடம்போடு இப்படி அலட்டிக் கொள்ளக் கூடாது, ரேவதி..." கார் கதவைத் திறந்து இறங்கிக் கொண்டே செந்தில் கூறினான்...

"கரிசனம் என் மீதா... இல்லை வயிற்றில் இருக்கும்... உங்கள் பிள்ளையின் மீதா...?" அவனுடைய கையில் இருந்த பெட்டியை வாங்கிக் கொண்டே மேடிட்ட வயிறுடன் ரேவதி கேட்டாள்...

"உன் புத்தி இப்படித்தானே பேச வைக்கும்... மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாததுன்னு சொல்வாங்க... ஆனால் உன் புத்தி மட்டும் மாறவே மாட்டேன் என்கிறதே... ஏன் ரேவதி..." செந்தில் தன் சட்டையின் மேல் பட்டனை அவிழ்த்து விட்டு... சுவாதீனமாய் அமர்ந்து கொண்டே வினவினான்...

"பெண்கள் எப்போதும் மாறவே மாட்டாங்க... மாறுவதெல்லாம் உங்கள் ஆண் பிள்ளைப் புத்திதான்..." காபியை அவனிடம் நீட்டியவாறு பதில் சொன்னாள் ரேவதி...

"ம்ம்... வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசி விடு..."

"பேசாமல் இருந்தாலும்... மௌனம் என்கிற கவசத்தின் பின்னால் ஒளிந்து கொள்கிறாய்ன்னு என் மேல் குற்றம் சொல்கிறீங்களே... அதற்கு இது மேல்ன்னு... பதில் பேசி விடுகிறேன்..."

ரேவதி அவனுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்... அவளிடமிருந்து வந்த... பூவாசம் கலந்த இதமான நறுமணம் அவளை வசீகரித்தது... அவன் அவள் தோள் மேல் தலை சாய்த்து... பூ வாசனையை முகர்ந்தான்...

"ரேவதி..."

"ம்ம்ம்..."

"கவிதாவிற்குக் கல்யாணம் முடிந்து விட்டது..."

"இதைத்தான் போன வாரமே சொன்னீங்களே..."

"அந்தக் கல்யாணம் முடிந்ததும் அவள் நம் வீட்டிற்கு வந்திருக்கிறாள்..."

"வந்து...?"

"அம்மாவிடம் நிறையப் பேசினாளாம்..."

"என்னவென்று...?"

"எனக்கு வாய்த்த மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை பார்க்கிறார்... படிப்பு... பணம்... அழகுன்னு... எல்லாத்திலும் இவரை மிஞ்ச உங்கள் மகனால் முடியுமா...? என் கால் தூசுக்கு உங்கள் குடும்பம் நிகராகுமான்னு... கேட்கக் கூடாத கேள்விகளையெல்லாம் கேட்டாளாம்..."

"கடவுளே..."

"அம்மா நெஞ்சு வலி வந்து... படுத்து விட்டாங்களாம்..."

"ஹாÞபிடலுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகவில்லையா...?"

"வலி மனதில்.... உடலில் இல்லையெனும் போது ஹாÞபிடல் போய் என்ன பண்ண...?"

ரேவதி பதில் பேசாமல் மௌனித்தாள்... செந்தில் தயக்கத்துடன் அவளை அழைத்த போது... அவன் என்ன கேட்கப் போகிறான் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது...

"ரேவதி... நாம் இருவரும் போய் அம்மாவைப் பார்த்து விட்டு வரலாமா...?"

"நீங்கள்தான் தினமும் போய் உங்கள் அம்மாவைப் பார்த்து விட்டுத்தான் வருகிறீங்க..."

"நீயும் கூட வா ரேவதி..."

"வேண்டாம்..."

"இது வெறுப்பையும்... கோபத்தையும் காட்டும் நேரமில்லை..."

"இவை இரண்டுமே... எனக்கு உங்கள் அம்மாவின் மேல் இல்லை..."

"பின்... ஏன் வர மறுக்கிறாய்...?"

"இப்போது நான் வந்தால் அது ரொம்பவும் செயற்கையாக இருக்கும்... கவிதாவின் மனதில் இருந்த எண்ணத்தைப் புரிந்து கொண்டதால் உங்கள் அம்மாவின் மனம் என் பக்கம் திரும்பலாம்... ஆனால்... எனக்கு அப்படிப்பட்ட பாசம் வேண்டாம்... நான் அவங்க மருமகள்தானே... என்னை எனக்காக அவங்க நேசிக்க nவ்ணடாமா...? அப்படி அவங்க நேசிக்கும் போது... நான் வருகிறேன்..."

ரேவதியின் மனம் போன திசையை அறிந்த செந்தில் அவளை வற்புறுத்தாமல் விட்டு விட்டான்... மனைவியின் மனதில் பட்ட காயத்தை மதித்து... மதுரையில் தனி வீடு பார்த்துத் தனிக் குடித்தனம் செய்பவன் ஆயிற்றே அவன்...

தினமும் வாகைக்குளத்திற்குப் போய் விட்டு வருவான்... தொழில்களைக் கவனிப்பான்... மாலையானால் மதுரைக்கு வந்துவிடுவான்... ரேவதியைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான்...

## 35

அழகான பூக்குவியல் போல் பக்கத்தில் கிடந்த குழந்தையை அணைத்துக் கொண்டாள் ரேவதி...

'இவன்... என் மகன்...' மனம் தாய்மையின் பொருமிதத்தில் பூரித்தது...

அறைக் கதவு திறந்தது... மீனாட்சியும்... விசுவநாதனும் அறைக்குள் வந்தார்கள்... ரேவதி அவசரமாய் எழுந்து அமரப் போனாள்...

"பச்சை உடம்போடு எழுந்து கொள்ளணுமா... படுத்துக்கம்மா..." மீனாட்சி பரிவோடு கூறினாள்...

"பேசுவது தன் மாமியார்தானா..." என்ற சந்தேகத்துடன் விழி விரிய அவளைப் பார்த்தாள் ரேவதி...

"என்னம்மா அப்படிப் பார்க்கிற...? தங்கமாய் எனக்கொரு பேரனைப் பெற்றுத் தந்து விட்ட...! இனி எனக்கென்ன மனக்குறை...?"

"அப்போ பேத்தியாக இருந்தால் நீங்க அதை ஆசையாய்க் கொஞ்ச மாட்டிங்களா அத்தை...."

"ஏன் கொஞ்ச மாட்டேன்...? வீட்டிற்கு மகாலட்சுமி வந்து விட்டாள்ன்னு மகிழ்ந்து போய் விடுவோன்..."

'உன் புத்தி இருக்கிறதே...' செந்தில் மனைவியை ரகசியமாய் முறைத்தான்...

ஜம்புலிங்கமும்... ஈÞவரியும்... மூன்று மாதங்கள் வரை... பெண்ணையும்... பேரனையும் கெங்குவார்பட்டியில்

வைத்துச் சீராட்டினார்கள்...

மூன்றாம் மாதம் தன் மருமகளைக் கூப்பிட்டுக் கொண்டு போக மீனாட்சியே வந்து விட்டாள்...

தன் மகனைக் கையில் அணைத்துக் கொண்டு வாசலில் நின்ற ரேவதிக்கு ஆரத்தி எடுத்து... வீட்டுக்குள் அழைத்துக் கொண்டாள் மீனாட்சி...

செந்தில்... மனைவியின் தோளைச் சுற்றி அணைவாகக் கை போட்டுக் கொள்ள... தன் மகனை மார்போடு அணைத்துக் கொண்டு வீட்டுப் படியில் ரேவதி கால் வைத்த போது... மழை கொட்ட ஆரம்பித்தது...

செந்திலும்... ரேவதியும்... மழையைச் சொந்தத்துடன் பார்த்துக் கொண்டு... ரகசியப் பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்...

"பார்த்தாயா... மழை வந்து விட்டது..."

"ம்ம்ம்..."

"இந்த மழைக்கு நம் மேல் அவ்வளவு சொந்தம்..."

"ம்ம்ம்..."

ரேவதி... மழை நீரில் கை காட்டி... பிரியத்துடன் அதன் துளியைக் கையில் ஏந்தினாள்...

"அங்கேயென்ன மழையில் நின்று கொண்டு ரெண்டு பேரும் ரகசியம் பேசிக்கிட்டு இருக்கீங்க... பச்சை உடம்புக்காரி மழையில் நனையலாமா...? இல்லை. பச்சைக் குழந்தையின் உடம்புதான் மழையில் நனைந்தால் தாங்குமா..?"

"இந்த மழை என்னையும்... என் பிள்ளையையும் கொஞ்ச வந்த மழைன்னு... உங்க அம்மாவிடம் சொல்லுங்க..."

"ஏன்... அதை நீ சொல்ல மாட்டாயா...?"

பதில் கூறாமல் வீட்டுப் படியேறிய மனைவியைப் பார்த்த செந்திலுக்குக் கவலையாக இருந்தது...

அவனுக்கு ரேவதியின் குணம் தெரியும்... எதையும் அவ்வளவு சீக்கிரம் மறக்கமாட்டாள்... திருமணமாகி வீட்டுக்குள் வந்த முதல் நாளே... கவிதா செந்திலுடன் ஒட்டி நின்று பேசியதைக் கண்டும்... கேட்ட பின்பு... அதை மறக்க முடியாமல் செந்திலிடம் இருந்து ஒரு வருடம் விலகியிருந்தவளாயிற்றே...

அப்படிப்பட்ட ரேவதி... 'நீ பின் வாசல் வழியாக வந்தவள்...' என்று மீனாட்சி கூறியதை அவ்வளவு சீக்கிரம் மறந்து விடுவாளா...?

அந்த வார்த்தையைப் பொறுக்க முடியாமல் கொட்டும் மழையில்... அர்த்த ஜாமத்தில்... வீட்டை விட்டு வெளியேறியவள் ஆயிற்றே...

'கொஞ்ச நாள்... விட்டுத்தான் பிடிக்க வேண்டும்...'

செந்தில் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்... அன்றும்... மறுநாள்... குலதெய்வம் கோவிலுக்குப் போய் விட்டு வரும் வரைக்கும் அமைதியாய் இருந்த ரேவதி... இரவின் தனிமையில் செந்திலிடம் வினவினாள்....

"நம் வீட்டிற்கு எப்போது போகப் போகிறோம்..."

செந்திலுக்குத் தூக்கி வாரிப் போட்டது... இந்தக் கேள்வியை ரேவதி கேட்பாள் என்று அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை... அவள் அமைதியாக... நடமாடியதும் அவனும் நிம்மதியாக இருந்து விட்டான்...

## 36

ஆழ்கடலின் அமைதியைப் போன்றது தன் அமைதி என்பதை நிரூபித்து விட்டாள் ரேவதி... தன்னால் மீனாட்சியுடன் இணக்கமாக... ஒரே வீட்டில் வாழ முடியாது என்பதை...

'நம் வீடடிற்கு எப்போது போகலாம்...' என்று கணவனிடம் கேட்டுப் புரிய வைத்து விட்டாள்...

"என்ன ரேவதி இப்படிப் பேசுகிறாய்...?"

"எப்படிப் பேசுகிறேன்...?"

"நம் வீடு என்று பிரித்துப் பேசுகிறாயே... அப்போ... இது யார் வீடு...? இதுவும் நம் வீடுதானே ரேவதி..."

ரேவதி பதில் சொல்லாமல் மௌனித்தாள்... அவளுடைய மௌனம்... அவள் அப்படி நினைக்க வில்லையென்பதை அவனுக்குப் புரிய வைத்தது...

"என்னடி... பேசாமல் இருக்கிறாய்...?"

"என்ன பேச...?"

"இன்னும் உனக்கு மனம் ஒட்டவில்லைதானே...?"

"யார் மீது மனம் ஒட்டவில்லை...? உங்கள் மீதா...?"

ரேவதி புரண்டு படுத்து.... அவன் மார்பில் தலை வைத்து முகம் உயர்த்தி... அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்...

செந்திலுக்குச் சிரிப்பு வந்தது... ஒட்டாமல் இருப்பவள் செய்யும் செயலா இது...?

அவன் அவளது முதுகை வளைத்துத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்...

"என் மீது மனம் ஒட்டாமல்தான்... நமக்கு மகன் பிறந்தானாக்கும்...?"

"தெரியுதில்லையா... அப்புறமும் என்ன கேள்வி வேண்டிக் கிடக்கு..."

"நம் வீட்டின் மீது மனம் ஒட்டவில்லை..."

"நம் வீட்டிற்குப் போகலாமா என்று கேட்டதே நான் தானே... மறந்து விட்டதா...?"

"இதுதான் நம் வீடு ரேவதி..."

"எனக்கு அதுதான் நம் வீடு..."

"அதுதான் ஏன்...?"

"வீடு என்பது எது...? நமக்கு வாழ்வைத் தருவது... வாழ்வை உணர்த்துவது... ஒவ்வொரு நொடியும் நம்மை உயிர்ப்பாய் வைத்திருப்பது..."

"நீ என்னதான் சொல்ல வருகிறாய்...?"

செந்திலின் குரலில் கோபம் எட்டி பார்த்தது... ரேவதி புரண்டு படுத்து... விட்டத்தைப் பார்த்தாள்....

"இங்கேயிருந்தால் எனக்கு உயிர்ப்பு இருக்காது... என் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் மதுரை வீட்டில் தான் அனுபவித்து வாழ்ந்தேன்... இங்கே ஒரு நாள் நகர்வது கூட எனக்குச் சுமையாகத்தான் இருக்கும்..."

"ம்ச்... வீட்டுக்கு வீடு வாசல் படி, ரேவதி... மாமியார் மருமகள் சண்டையில்லாத வீடு எங்காவது உண்டா...?"

"இதற்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியாது... என்னால் இங்கே இயல்பாக இருக்க முடியாது என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்..."

"நான் என் அப்பா... அம்மாவிற்கு ஒரே மகன் ரேவதி..."

"என்னவோ... எனக்குத் தெரியாததைச் சொல்வது போலச் சொல்கிறீங்களே... இது எனக்குத் தெரியாதா...?"

"நான் எப்படி அவர்களைத் தனியாக விட்டுவிட்டு வர முடியும்...?"

"இது நாள் வரை இந்த நியாயம் உங்களுக்கு ஏன் மறந்து விட்டது...?"

"ரேவதி... அப்போதைய நிலைமையே வேறு... இப்போது நிலைமை வேறு..."

"அப்போது உங்களுக்கு என்னைப் போகவிடாமல் தடுக்க வேண்டும்... அதற்காக... தற்காலிகமான ஏற்பாடாக என்னைத் தனிக் குடித்தனம் வைத்தீங்க... இல்லையா...?"

"அடித்து விடுவேன் ரேவதி..."

"அடியுங்க... எனக்கு அதுவும் பிடிக்கும்..."

செந்திலின் முகம் மென்மையானது... அவன் அவள் புறம் திரும்பிப் படுத்து... இடுப்பைக் கைகளால் வளைத்தான்...

"ஏய்ய்.. எல்லாவற்றிலும் என்னைப் புரிஞ்சு நடந்து கொள்கிற... இதில் மட்டும் ஏன் பிடிவாதம் பிடிக்கிறே...?"

"நிச்சயமாய்... உங்கள் அம்மா... அப்பாவிற்குச் சமைத்துப் போடும் வேலையிலிருந்து தப்பிப்பதற்காக இல்லை..."

"எனக்குத்தான் அது தெரியுமே..."

"இந்த வீட்டில் நான் இருக்கும் வரை... நான் பின் வாசல் வழியாக வந்தவள் என்ற உணர்வுதான் எனக்கு இருக்கும்... என் மேலேயே... எனக்கு மதிப்புப் போய் விடும். நான்... நானாக இருக்க வேண்டுமென்றால் இந்த வீட்டில் நான் இருக்கக் கூடாது"

ரேவதி... செந்திலின் கையை விலக்கி... விலகிப் படுத்தாள்....

## 37

ரேவதியின் குரலில் தொனித்த சோகமும் இறுக்கமும் செந்திலை மிகவும் பாதித்தது... தொட்டிலில் இருந்த குழந்தை வீறிட்டு அழுதான்... ரேவதி எழுந்து சென்று விளக்கைப் போட்டு விட்டுக் குழந்தையைத் தூக்கிச் சமாதானப் படுத்தினாள்...

அதுவரை விடி விளக்கின் ஒளியில் தெரியாத அவளது கண்ணீர்... வெளிச்சத்தில்... கன்னத்தில் கோடாக இறங்கி நன்றாகத் தெரிந்தது... செந்தில் துயரப்பட்டான்...

குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு... தாய்மைப் பெருக்கோடு நின்றவளின் வார்த்தையை

அவனால் தட்ட முடியவில்லை...

பெற்றவர்களுக்கு மகனாக இருப்பதா...? இல்லை... தன் குழந்தையைப் பெற்றவளுக்குக் கணவனாக இருப்பதா...?

செந்தில் முடிவை விசுவநாதனிடமே விட்டு விட்டான்... தாடையைத் தடவியபடி மகன் கூறியதைப் பொறுமையாகக் கேட்டவர்... சற்று நேரம் யோசனையுடன் அமர்ந்திருந்தார்... பின் ஒரு பெருமூச்சுடனும்... தீர்மானமான முகத்துடனும் நிமிர்ந்தார்...

"செந்தில்... இதில் ரேவதி மீது குற்றம் சொல்ல எதுவுமில்லை... அவள் மிகவும் நல்ல பெண்... உன் அம்மா... ஒருவருசமாகக் கொட்டும் தேளாக அவளைக் கொட்டிக் கொண்டிருந்தாள்... ஆனால்... அவள் பொறுமையாக இருந்தாள்... கவிதா மருமகளாக வரவில்லையே என்ற குறை உன் அம்மாவிற்கு... அதை ஓர் நாளின் இருபத்து நான்கு மணி நேரத்தில் நிமிடத்திற்கு ஒரு முறை சொல்லிக் காண்பிப்பாள்... ரேவதி வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பதில் பேசியதில்லை... பொறுமையாக இருப்பாள்... அவளின் பொறுமையை உன் அம்மா சாதகமாக நினைத்துக் கொண்டு... அவளை வாயில்லாப் பூச்சி போல் நடத்தினால்... பாவம்! அவள்தான் என்ன செய்வாள்...?"

"அதற்காகக் கோபத்தை மறக்காமல் அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே இருந்தால் எப்படிப்பா...?"

"இது ரேவதியின் மனதில் பட்ட காயம், செந்தில்... அது ஆறும்வரை பொறுத்திருக்க வேண்டும்..."

"எப்போதுதான் அது ஆறும்..."

"ம்ம்... இதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்..."

"ஒரு வேளை அவளுடைய மனக்காயம் ஆறாமலே போய் விட்டால்....?"

"கடைசி வரை நாம் பிரிந்திருக்க வேண்டியதுதான்..."

"இது தேவையா, அப்பா..."

"மீனாட்சிக்கு இது தேவைதான், செந்தில்... தன்னைப் போல... தன் மருமகளும் ஒரு பெண் என்று நினைத்துப் பார்க்காமல் பேசினால்... இப்படித்தான்... பிள்ளைப் பூச்சியாய் இருந்த மருமகளை எதிர்த்துப் போராடும் பெண் புலியாய் ஆக்கி விட்டது உன் அம்மா தான்... இப்போது... பட்டுத் திருந்தி என்ன பிரயோஜனம்...? ரேவதி மனது திரும்ப வேண்டுமே..."

"இதை இப்படியே விட்டு விடுவது நல்லதில்லைப்பா..."

"விடாமல் என்ன செய்யச் சொல்கிறாய்...? செந்தில்... நாங்கள் வாழ்ந்து முடித்தவர்கள்... நீ வாழ வேண்டிய வாழ்க்கை இன்னும் எவ்வளவோ இருக்கிறது... உன் குடும்பத்தைக் கவனி... எங்களை... நான் பார்த்துக் கொள்கிறேன்..."

செந்திலின் மனம் கனத்தது... அதை உணர்ந்தவரைப் போல... விசுவநாதன் மகனை... ஆதரவாய்த் தட்டிக் கொடுத்தார்...

38

வீட்டில் உறவினர் கூட்டம் நிறைந் திருந்தது... ஹாலில் தொட்டில் நடுநாயகமாக மலர்ச்சரங்களால் அலங்கரிக்கப்பட்டுப் போடப் பட்டிருக்க... ரேவதியை மீனாட்சி அழைத்தாள்....

"நல்ல நேரம் முடிவதற்குள்... குழந்தையைத் தொட்டிலில் போடும்மா..."

ரேவதி... தன் மகனை... பத்திரமாகத் தொட்டிலில் படுக்க வைத்தாள்... உறவுக்காரர்களில் ஒருவர் பலத்த குரலில்...

"குழந்தை காதில் வைக்கப் போகிற பெயரை மூன்று தடவை சொல்லுங்கம்மா..." என்று கூறினா...

"சொல்லும்மா... என் பேரனுக்கு என்ன பெயர் வைக்கலாமுன்னு... நீயும்... என் மகனும் முடிவு பண்ணியிருப்பீங்களே... பெயர் என்ன...?"

மீனாட்சி நிறைந்த சபையில் மருமகளைப் பார்த்துக் கேட்டதும்... ரேவதி மனதிற்குள் ஆச்சரியப்பட்டுப் போனாள்... ஆனால்... அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் செந்திலின் முகம் பார்த்தாள்....

"மேகநாதன்னு பெயர் வைத்திருக்கிறோம், அம்மா..."

"அப்படியா... நல்ல பெயர்..."

மீனாட்சி மெச்சுதலாகக் கூறினாள்... மழையில் இணைந்ததால்... அந்த மழையைப்பொழியும் மேகத்தின் பெயரை மகனுக்கு வைக்க வேண்டுமென்று ரேவதி ஆசைப்பட்டாள்... செந்திலுக்கும் அதே எண்ணம் மனதில் இருந்ததால்... 'மேகநாதன்' என்று மகனுக்குப் பெயர் சூட்டி விட்டார்கள்...

ஜம்புலிங்கமும்... ஈÞவரியும் ஊருக்குக் கிளம்பும் போது... மகளிடம் மன நிறைவாகப் பேசினார்கள்...

"என்னமோ ரேவதி... உன் மாமியார் உன்னைச் சரிவர நடத்துவாங்களான்னு எங்களுக்குக் கவலையாய் இருந்தது... நீ உன் மாமியாரின் மனசை ஜெயிச்சுட்டே..." ஜம்புலிங்கம் பாராட்டினார்...

ரேவதி அதற்கு மறுமொழி கூறாமல் மௌனம் சாதித்ததை ஈÞவரி ஜாடையாகக் கவனித்தாள்....

"ரேவதி... நான் சொல்கிறேன்னு தப்பா நினைத்துக் கொள்ளாதே... பத்தரை மாற்றுத் தங்கத்திலும் கொஞ்சம் செம்பைச் சேர்த்தால்தான் நகை செய்ய முடியும்... அப்படியிருக்கையில் குணக்குன்றாய் மனிதர்கள் இருக்கணுமுன்னு நீ எதிர்பார்க்கக் கூடாது..."

"அப்படி நான் எதிர்பார்க்கவே இல்லையே, அம்மா..."

"உன் வாய்தான் அப்படிச் சொல்லுது... மனசு கஷ்டப்படுவது முகத்தில் தெரியுது... மாமியார்ன்னா கொஞ்சம் அப்படி...

இப்படி... இருக்கத்தான் செய்வாங்க... அதைக் கேட்டும்... கேட்காதது போல் போய் விட வேண்டும்..."

'முடியவில்லையே...' ரேவதியின் மனம் தவித்தது...

'அன்று என் காதில் விழுந்த வார்த்தைகளில் என் ஆவி துடிக்கிறதே... அதை மறக்க என்னால் முடியவில்லை.... நான் என்ன செய்யட்டும்...'

ரேவதி மௌனியாக நின்றாள்...

## 39

"ரேவதி... உன் மனதுப் பிரகாரம்... நாம் மதுரைக்கே போய்விடலாம்... ஆனால்... பேரனுக்குத் தொட்டில் போட்டுப் பெயர் வைக்கும் விழாவை... நம்ம வீட்டிலேயே நடத்தி விடணும்ன்னு அப்பா ஆசைப்படுகிறார்... அடுத்த வாரம் அந்த பங்சனை நடத்திவிட்டுக் கிளம்பி விடலாம்..."

செந்திலின் கோரிக்கைக்குத் தலையாட்டிய ரேவதி அந்த ஒரு வாரமும் பல்லைக் கடித்துக் கொண்டு ஓட்டினாள்...

மீனாட்சி பாசத்தைப் பொழிந்தாள்... பேரனைக் கையை விட்டு இறக்காமல் தாங்கினாள்... அந்தப் பாசத்தை ரேவதி தடுக்கவில்லை... ஆனால் அவள் மட்டும் மீனாட்சியிடம் ஒட்டி உறவாடிப் பழக முடியவில்லை...

மீனாட்சி பேசும் பேச்சுக்களுக்கு வெறுமனே தலையை மட்டும் ஆட்டுவாள். சில சமயம்... 'ஆமாம்...' 'இல்லை...' என்று ஒற்றை வரியில் பதில் சொல்லுவாள்...

நல்ல வேளையாக மீனாட்சி அவளுடைய ஒதுக்கத்தைக் கவனிக்க வில்லை... அவளுக்குப் பேரனைக் கொண்டாடவும்... கொஞ்சவுமே... நேரம் சரியாக இருந்தது...

விழாவின் நிகழ்ச்சிகளில் மீனாட்சி இழைந்து... இழைந்து பழகினாலும் ரேவதி விலகியே நின்றாள்...

விழா முடிந்து ஜம்புலிங்கமும்... ஈÞவரியும் கிளம்பிப் போன... மறுநாளில்... ரேவதி துணிகளைப் பெட்டிகளில் அடுக்க ஆரம்பித்து விட்டாள்...

"என்ன செய்கிறாய்...?"

"பார்த்தால் தெரியவில்லையா...? துணிகளை அடுக்குகிறேன்..."

"நீ மறக்கவே மாட்டாயா...?"

"நீங்கள் மறக்கடிக்க நினைப்பது எனக்குத் தெரியும்... நான் மறக்க மாட்டேன்..."

செந்தில்... வேறு வழியில்லாமல் கிளம்ப... மீனாட்சியின் முகம் வெளுத்து விட்டது...

"என்னடா செந்தில்... எங்கே கிளம்பிட்டிங்க...?"

"நாங்க... எங்கள் வீட்டுக்குப் போகிறோம், அத்தை..."

அத்தனை நாள்களில் ரேவதி மீனாட்சியிடம் பேசிய மிக நீளமான வாக்கியம் இதுதான்... அவள் முகம் விழுந்து விட்டது... எதையோ சொல்லப் போனவள்... ரேவதியின் முக இரக்கத்தைக் கண்டு... பேசாமல் இருந்து விட்டாள்...

செந்திலும்... ரேவதியும்... குழந்தையுடன் மதுரைக்குப் போய் விட்டனர்... மகனும்... பேரனும் இல்லாத வெறுமை... மீனாட்சியைத் தாக்கியது...

## 40

"ரேவதி..! கிளம்பு..."

செந்தில் அவசரமாய் உள்ளே வந்தான்...

"என்னங்க... இப்போதுதான் உள்ளே வந்து ஒரு வாய் காபியைக் குடித்து விட்டு வாசல் பக்கமாய்ப் போனீங்க... இப்ப... இப்படிச் சொல்கிறீங்க..."

"ஏய்ய்... தொணதொணன்னு பேசாமல் கிளம்புடி..."

செந்தில் எரிந்து விழுந்தான்... ரேவதி திகைத்துப் போய் அவன் முகத்தைப் பார்த்தாள்... அவன்... அவளிடம் இப்படி எரிந்து விழுந்தது இல்லையே...

"என்னங்க ஆச்சு...?"

"இன்னும் என்ன ஆகணும்? என் அம்மாவிற்கு ஹார்ட் அட்டாக்காம்... அப்பல்லோவில் அட்மிட் பண்ணியிருக்காங்களாம்... இப்போது உனக்குத் திருப்திதானா..."

தன்னைக் கொலைகாரியைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு கேள்வி கேட்ட கணவனை வெறித்துப் பார்த்தாள் ரேவதி...

"என்னையா இப்படிக் கேட்கறீங்க..."

"உன்னைத்தான் கேட்கிறேன்... நம்ம மேகாவிற்கும் ஒரு வயதாகி விட்டது... இன்னும் உன் மனசு மாறவே மாட்டேன் என்கிறது... பிள்ளையின் பிறந்த நாளைக் கொண்டாடிய கையுடன் கிளம்பி வரணும்னு பிடிவாதம் பிடித்து நேற்றுக் கிளம்பி வந்தாயே... ராட்ஸஸி... நீ வந்தவுடன் அம்மா சோர்ந்து படுத்துவிட்டாங்களாம்... இன்றைக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்தேன்... நான் இந்தப் பக்கம் வருகிறேன்... அந்தப் பக்கம் அம்மா... மயக்கம் போட்டு விழுந்து விட்டாங்களாம்.."

ரேவதி... பதறிப் போய்... குழந்தையைத் தூக்கிக் கொண்டு... கணவனுடன் மருத்துவ மனைக்கு ஓடினாள். முகமெல்லாம் முகமூடி போட்டது போல் செயற்கை சுவாச டியூப் பொருத்தப்பட்டிருக்க... கண் திறவாமல் கிடந்த மீனாட்சியைப் பார்க்கும் போது அவளுக்குள் குற்ற உணர்வு எழுந்தது...

"மனுசங்களா இருந்தா மன்னிக்கத் தெரியணும், ரேவதி... அது தெரியாவிட்டால்... நாம் மனுசப்பிறவின்னு சொல்லிக் கொள்வதில் அர்த்தமே இல்லை... அமாவிற்கு நீ தண்டனை

கொடுத்தது சரிதான்... ஆனால்... இது அதிகப்படியான தண்டனையில்லையா...?"

செந்தில் அவளைக் கேட்ட போது ரேவதி கண்ணீர் மல்கத் தலையைக் குனிந்து கொண்டாள்...

அவள் மனதில் இருந்த பழைய பகை மேகங்கள் விலகி... மனம் நிர்மலமாய் ஆனது...

தீபாராதனை ஒளியில் தெரிந்த அம்மனின் உருவத்தைப் பார்த்து... கன்னத்தில் போட்டுக் கொண்டு... அம்மனை வணங்கினார்கள் அவர்கள்..

"பொங்கல் நல்லா பொங்கியிருக்கு, மீனாட்சி..." விசுவநாதன் பெருமையாகப் கூறினார்...

"பின்னே... குல தெய்வம் கோவிலுக்குப் பொங்கல் வைக்கிறேன்னு நேர்ந்துக்கிட்டு என் மருமகள் வைத்த பொங்கலாச்சே..." மீனாட்சி பெருமையாக ரேவதியைப் பார்த்துக் கொண்டாள்...

"அதுவும் எதற்காக நேர்ந்துக்கிட்டாங்க...? உங்க உடம்பு குணமாகனும்ன்னு நேர்ந்துக்கிட்டு அவள் வைத்த பொங்கலாயிற்றே..." செந்தில் மனைவியின் தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டான்...

"ÞÞ... மாமாவும்... அத்தையும் இருக்கும்போது... இது என்ன கொஞ்சல்..." ரேவதி செல்லமாகக் கணவனைக் கடிந்து கொண்டாள்...

"மழை வருவது போல் இருக்கிறது... வாங்க... காலா காலத்தில் வீட்டிற்குப் போகலாம்..." மீனாட்சி பேரன் நனைந்து விடாமல் இருக்க... அவனைத் தன் முந்தானையில் போர்த்துக் கொண்டாள்...

அவர்கள் கார் கிளம்பியதும் மழை வந்து விட்டது... ரேவதி... கணவனைப் பார்க்க... அவன் மனைவியை அர்த்தத்துடன் பார்த்து புன்னகைத்தான்...

ரேவதி தன் மாமியாருடன் மனம் இசைந்து ஒரே வீட்டில் வாழ முடிவு செய்து... மதுரை வீட்டைக் காலி செய்து விட்டு...

முதல் நாள் தான் கிராமத்திற்கு வந்திருந்தாள்…

மீனாட்சியின் உடல் நலமாகி விட்டால் குலதெய்வம் கோவிலுக்குப் பொங்கல் வைப்பதாக அவள் நேர்ந்து கொண்ட நேர்த்திக் கடனை நிறைவேற்றி விட்டு அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்…

காரை விட்டு இறங்கிய ரேவதியின் மேல் மழைச்சாரல் விழுந்தது… அவள் ஆனந்தமாய்… அன்றைய மழை நாளை நினைத்தபடி… அதில் நனைந்தாள்…

- முற்றும் -